
கல்கி


Kalki 25.12.83 ரூ1.20



வெங்சர்க்கார்

சென்னை டெஸ்ட்


வரவேற்கிறோம்
வாழ்த்துகிறோம்




மைக்கேல் ஹோல்டிங்



ரவி சாஸ்திரி



வி.ரிச்சர்ட்ஸ்



கிர்மானி



கலைப்படத்தில் கலப்படம்

ஒரு ஓடை நதியாகிறது

கொர்ர்... டொர்... டக்... ஆல் இந்தியா ரேடியோ, சென்னை வானொலி நிலையம். இதுவரை காமன்வெல்த் மாநாட்டில் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆற்றிய உரையின் தொகுப்பையும், திரு. ராஜீவ் காந்தி தேச நலனுக்காக ஆற்றிய உரையையும் கேட்டீர்கள். இனி சித்திர விமர்சனம். சித்ராலயா மூவீஸ் தயாரித்துள்ள 'ஒரு ஓடை நதியாகிறது' என்னும் திரைப் படத்தைப் பற்றி ஒரு கலந்துரையாடல். உரையாடலில் பங்கு கொள்பவர் திருமதி விஜயலக்ஷ்மி பாலசுப்ரமணியம் அவர்கள். உடன் உரையாடுபவர் ஜெயமன்மதன்.

'வணக்கம் திருமதி விஜயலக்ஷ்மி பாலசுப்ரமணியம் அவர்களே'

'வணக்கம்.'

'உங்கள் பெயர்?'

'திருமதி விஜயலக்ஷ்மி பாலசுப்ரமணியம்.'

'ஓ. திருமதி விஜயலக்ஷ்மி பாலசுப்ரமணியம் என்கிறீர்களா?'

'ஆமாம். இந்தச் சித்திர விமர்சனத்தில் பங்கேற்று ஒரு ஓடை நதியாகிறது திரைப் படத்தைத் திறனாய்வு செய்ய வாய்ப்பளித்தமைக்கு வானொலி நிலையத்தாருக்கு முதற் கண் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

'படத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன திருமதி விஜயலக்ஷ்மி பாலசுப்ரமணியம் அவர்களே?'

'பரபரப்பான ஆரம்பம். அதாவது வித்தியாசமான படமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆரம்பிக்கப்பட்ட படம். உதாரணமாகக் கல்யாணமாகாத பெண் தந்தையிடம் நேருக்கு நேராக வந்து நின்று நான் ஒரு குழந்தைக்குத் தாயாராகப் போகிறேனென்பது — அப்புறம் — ம்—தன் மகளின் விருப்பத்திற்கு உடன்பட்டு அவளது குழந்தையை ஏற்றுக் கொண்டு தந்தை தான் இத்தனை நாள் வசித்து வந்த ஊரை உதறி விட்டுப் புறப்படுவது. மூன்றாவதாக ஏறக்குறையப் பத்து வயதுக்குள்ளான தன் மகன் தன் அம்மாவிடம் அப்பா யாரென்று கேட்கப் போக, தாய் தனக்கேற்பட்ட விபத்தை மகனிடம் அப்பட்டமாகச் சொல்வது - மகன் அதனைப் புரிந்து கொள்வது— மௌனமாவது.'

'ஆக பரபரப்பான ஆரம்பம்னு சொல்றீங்க இல்லையா?'

'ஆமாங்க. ஆனால் இப்படிப்பட்ட வித்தியாச அமிட்டங்களைப் புகுத்தி விட்டுப் பின் அனுராதாவின் கொச்சையான ஆட்டத்தைப் பார்க்கச் சொன்னால் என்னவோ போலிருக்கிறது. இந்த மாதிரியான மசாலாக் காட்சிகளும், வேளை கெட்ட வேளைகளில் இடையிடையே புகுந்து விடுகிற பாடல்களும் கதையின் மாறுபட்ட தன்மையையும் ஆழத்தையும் வெகுவாகப் பாதிக்கின்றன.'

'ஆக மசாலாக் காட்சிகள் படத்தின் ஆழத்தைப் பாதிக்கிறது என்று சொல்கிறீர்கள். பாடல்கள் பற்றி நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?'

'தென்றல் என்னை முத்தமிட்டது' என்கிற பாடல் கேட்க நன்றாக உள்ளது.'

'ஓஹோ! தென்றல் என்னை முத்தமிட்டது பாடல் நன்றாக இருக்கிறது இல்லையா? நடித்திருப்பவர்கள் பற்றி நீங்கள் ஏதாவது சில வார்த்தைகள்...?'

'அப்பாவாக வரும் பிரதாப் சந்திரன் மட்டும் சற்று மனத்தில் நிற்கிறார். மாஸ்டர் ரமேஷும், மனோசித்ராவும் பரவாயில்லை. கமலதா, ரகுவரன், இருவருக்குமே இறுக்கமான முகங்கள். உணர்ச்சிக் கொந்தளிப்புகள் இல்லை. ஒருவேளை Under - act செய்ய நினைத்திருக்கிறார்களோ என்னவோ?'

'அதாவது நடிகர்கள் Under-act செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள்'.

'ஆமாம். டைரக்டர் நினைத்த அளவிற்கு யாரும்ே நடிக்கவில்லை போலும். ஒருவரும் காரெக்டரோடு ஒன்றவில்லை. வெகு செயற்கை. அது மட்டுமல்லாமல் டைரக்டரே தன் நாற்காலியோடு ஒன்றவில்லை போலிருக்கிறது. கதாநாயகி 'விபத்து'க்குள்ளாகும் அந்த ஆரம்பக் காட்சியைத் திரும்பத் திரும்ப ஃப்ளாஷ் பேக்காகக் காட்டுவது செம்மையாக அலுப்புண்டாக்குகிறது.'

'அதாவது கதாநாயகி ஆரம்பக்காட்சியில் கற்பிழக்கும் காட்சியை, மறுபடி மறுபடி காட்டுவது அவ்வளவு நன்றாக இல்லை என்கிறீர்கள் இல்லையா?'

'ஆமாம். மொத்தத்தில் ஊஞ்சலாடும் இளமையை ரசித்தவர்களுக்கு நதியாகும் ஓடை அவ்வளவாக ரசிக்குமென்று தோன்றவில்லை. Easy Sridhar, better luck next time.'

'திருமதி விஜயலக்ஷ்மி பாலசுப்பிரமணியம் அவர்களே, இவ்வளவு நேரம் 'ஒரு ஓடை நதியாகிறது' படத்தைப் பற்றித் திறமையாக கலந்துரையாடினீர்கள். நன்றி. வணக்கம்.'

'நன்றி ஜெயமன்மதன் அவர்களே, வணக்கம்.'

முத்து எங்கள் சொத்து

அப்பாவுக்குப் பெயர் வாங்கிக் கொடுத்த பழைய படங்களையெல்லாம் கொஞ்சம் திருத்தி எழுதி பிரபுவை வைத்து எடுக்கிறவர்கள் வரிசையில் ரங்கராஜனும் சேர்ந்து கொள்கிறார். ஆனால் படிக்காத மேதையின் அழுத்தமான கதையமைப்பு இன்றைக்கு வியாபாரமாகாது என்ற தப்பு அபிப்பிராயத்தோடு.

குறுகலையான இரண்டு பையன்களாய் ராஜீவும், அரவிந்தும் (நாடக மேடையில் வாங்கியிருந்த கொஞ்ச நஞ்ச நல்ல பெயரும் காற்றோடு பறக்கிற மாதிரி தெரிகிறது). அப்பாவை ஏய்ப்பதும், அனுராதாவை மேய்ப்பதுமாய்ப் போட்டி போடுகிற சகோதரர்கள். வந்து சேர்கிற மனைவிகளோ தென் கொரியா — ரஷ்யா பாணி நண்பிகள். அவசரக் குழந்தையைப் பெற்றுக் கொள்ளத் தத்தம் கணவர்களை விடாமல் முடுக்குவதோடு இவர்கள் வேலை ஓவர். இந்த இரண்டு பேர்களுக்கும் பின்னணியில் இருந்து கொண்டு திருட்டுக் குழந்தைகளுக்குத் திட்டம் கொடுப்பவர்களாய் மனோரமாவும், எஸ். என். பார்வதியும். கட்டமுகிகளைக் கடத்தும் வில்லமகாராஜா. பின்னும் ஒரு குட்டிவில்லன் சிவசந்திரன் சண்டைக் காட்சிக்குச் சாதகமாய். உப்பைத் தின்ற நன்றியுடன் முதலாளி இட்ட பணிகளை இட்டத்துடன் செய்ய ஒரு விசுவாச வேலைக்காரனாய் பிரபு (திணிக்கப்பட்ட சில சண்டைக் காட்சிகளும் இவருக்கு உண்டு.) பிரபுவின் மேல் கண்ணையும், மனத்தையும் வைத்துக் கனவு காணும் சமையல் காரியாய் அழகு ராதா. மழையில் நனைவதும் பிரபுவை உரசுவதுமான எளிதானவேலை.

எத்தனை நாள்தான் இரட்டை அர்த்த வசனங்கள் எழுதிக் கொண்டிருப்பது என்ற அலுப்புடன் நேரடியாகவே ஆபாச வசனங்களை எழுத ஒரு பஞ்சு அருணாசலம். முதலில் குழந்தையைப் பெற்றுக் கொள்பவர்களுக்குத் தான் சொத்து என்று அந்த வசனங்களுக்கு வசதியாக ஒரு கதை. அமைத்தபோதெல்லாம் அங்கங்களைக் குலுக்க ஒரு அனுராதா.

'நீ என்ன மீசை வச்ச பொண்ணு' என்று இரண்டாந்தரப் பாட்டு எழுத ஒரு வைரமுத்து.

இத்தனை மலிவான விஷயங்களை வைத்துக் கொண்டுதானு (மீண்டும் கோவிலா புகழ்) ரங்கராஜன் சொந்தப் படம் எடுக்க வேண்டும்; சொத்து இல்லை? சொத்தை உண்டு.

-ஜெய மன்மதன்

விஜய மகிழ்ந்த ஆபாசம்





புத்தமதத் தலைவர்கள்
இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் வழங்கப்படும்!
ஜெய வர்த்தனா
ஹைய்யா... கருணாநிதி போராட்டம் பிசு பிசுத்துப் போச்சு!
ஹைய்யா... நம்ம போராட்டத்தை எதிர்த்து எம்.ஜி.ஆர். ரேடியோவிலே பேச முடியாமப் போச்சு!
அம்மா வாழ்க!.. நீ ஒழிக!
அம்மா வாழ்க! நீ அடியோடு ஒழிக!
இ. காங்கிரஸ் தென் மண்டல மகாநாடு. சென்னை

கல்கி

1983 டிசம்பர் 25
ருத்ரோத்காரி மார்கழி 10
மலர் : 42 இதழ் : 21



இது கிரிக்கெட் அல்ல!

கிரிக்கெட் என்ற சொல் விளையாட்டை மட்டும் குறிப்பதல்ல. நேர்மை, நல்லொழுக்கம் ஆகியவற்றையும் குறிக்கும் வார்த்தை அது. கனவான்களுக்கிடையே ஆடப்படும் இந்த ஆட்டத்தில் அனைவரும் கண்ணியத்துடன் நடப்பதால் ஆட்டத்தின் பெயரே குணநலன்களின் பெயராகவும் அமைந்தது. ஆனால் இன்று மைதானத்திலும் சரி, அதற்கு வெளியேயும் சரி, கண்ணியம் காணக் கிடைப்பது அரிதாகிவிட்டது. ஆட்டக்காரர்கள், அம்பயர்களை முறைப்பதும் அவர்களைக் குறைகூறி எழுதுவதும் பேசுவதும் சகஜமாகி விட்டன. ரசிகர்கள் ஆட்டக்காரர்கள் மீது அழுகிய பழங்களை வீசுவதையும் அவர்கள் பயணம் செய்யும் பஸ் மீது கல்லெறிந்து கண்ணாடிகளை உடைப்பதையும் காண்கிறோம். விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசியலும் லஞ்ச ஊழலும் புகுந்து விட்டதாகப் பேசப்படுகிறது. டெஸ்ட் ஆட்டக்காரர்களுக்கிடையிலேயே கோஷ்டி பூசல் இருப்பதாகவும் அது காரணமாகச் சமயத்தில் கருத்துச் செலுத்தி ஆடுவதில்லை என்றும் புகார்களைக் கேட்கிறோம். இவையெல்லாம் தலைகுனிவை ஏற்படுத்துகிறவை.

விளையாட்டில் வெற்றி தோல்விகள் சகஜம்; இரண்டையும் சமமாகப் பாவிக்க வேண்டும்; கிரிக்கெட்டில் வெற்றிபெற அதிர்ஷ்டமும் துணை நிற்க வேண்டும்; வெற்றி முக்கியமல்ல, விளையாட்டு மூலம் பல நாட்டு மக்களிடையே நல்லுறவை வளர்ப்பதே லட்சியம் — இவையெல்லாம் நமக்குத் தெரியும்தான். ஆனால் புருடென்ஷியல் கோப்பையை வென்ற போது உலகப் புகழின் உச்சியிலிருந்த நமது கிரிக்கெட் இன்று பாதாளத்தில் வீழ்ந்து பழிப்புக்கு உள்ளாகிறது என்றால் விளையாட்டுக்குரிய மேற்படி கோட்பாடுகளை நாம் அறியாததாலல்ல. இன்னொரு முக்கியமான விதியை நமது கிரிக்கெட் வீரர்கள் மறந்து விட்டதுதான் காரணம். **வெற்றி முக்கியமல்லதான், வெற்றிபெற வேண்டும் என்ற அவாவும் அதற்குரிய முயற்சியும்நாம் வெற்றியை விடவும் முக்கியமானவை!** இது நமது பேட்ஸ்மென்களிடம் இல்லாது போயிற்று. முனைப்பும் உழைப்பும் இல்லாதுபோக, அலட்சியம் மேலோங்கி விட்டது. இதனால் தான் மக்களுக்கு வருத்தம்; உடன் விளைவான கோபம். கல்லெறிகிறார்கள்.

இருப்பினும் ஏசு சொன்னதுபோல் 'உங்களில் யார் பாபமே செய்யாதவரோ அவர் முதலில் கல்லெறியட்டும்' என்று கூறத்தோன்றுகிறது. கிரிக்கெட் ஆடுவோர் மட்டுமா கிரிக்கெட் குணநலன்களை மறந்தார்கள்? இன்று நாடே அப்படித்தான் இருக்கிறது! அரசியல், கல்வி, தொழில், அரசு ஊழியம் என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அலட்சியம், முயற்சி இன்மை, ஏனோதானோ மனப்பான்மை, நேர்மையின்மை, லஞ்ச ஊழல் இவற்றையே காண்கிறோம். இதேபோக்கு கிரிக்கெட்டிலும் பிரதிபலிப்பதில் வியப்பில்லை. பழகிய ஆட்டக்காரர்கள் மெத்தனம் காட்டுகையில் புதிய கைகளைப் பரீட்சித்துப் பார்க்க ஏன் தயங்க வேண்டும்? ஆசிய விளையாட்டுக்களின் போது கோடிகோடியாகக் கொட்டிப் புதிய ஸ்டேடியம்கள் உருவாக்கிய இந்நாடு நம்பிக்கை அளிக்கும் இளைஞர்களுக்கு வேகப்பந்து வீச்சில் பயிற்சி அளிக்கச் சில ஆயிரங்களைச் செலவழிக்காமல் ஏன் பின்வாங்குகிறது?

போகட்டும், சென்னையிலே முனைந்து செயல்பட்டுத் தங்கள் நாட்டுப்பற்றை நிரூபிக்க ஒரு கடைசி வாய்ப்பு இருக்கிறது நமது கிரிக்கெட் வீரர்களுக்கு. அத்தகைய ஒரு கடைசி வாய்ப்புத்தான் தேச விவகாரங்களிலும் நாட்டு மக்களையும் தலைவர்களையும் எதிர்நோக்கியுள்ளது. இரண்டையுமே தவற விடாதிருப்போம்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

அத்தியாயம் 8

தமிழ்ப்பள்ளி

திருநாரையூரிலே வேதியர் குலத்தில் பிறந்த அந்தக் குழந்தை எல்லாக் குழந்தைகளையும் போல் ''குவா, குவா!'' என்று அழுவதாக அதன் பெற்றோருக்குத் தோன்றவில்லை. ''சிவா, சிவா!'' என்று அழைப்பதாகவே எண்ணி மகிழ்ந்தனர்! சிவ நேசச் செல்வரான தகப்பனார் தம் குழந்தைக்குச் சிவபெருமானின் திருவிளையாடல்களையும் முருகப்பெருமானின் வீரத்தையும் ஆனைமுகத்தோன் கதைகளையும் பாலுடன் சேர்த்துப் புகட்டினார்.. ஒருசமயம் அவர் வெற்றூர் செல்லவும் தாயின் ஏவலை ஏற்று நிவேதனப் பொருளுடன் விநாயகர் கோயிலுக்குச் சென்று பாலகன் நம்பி பூஜித்தான். நிவேதனத்தைப் பிள்ளையார் புசிக்காததால் பாலகனுக்குக் குழப்பமாகி விட்டது. ''ஆனைமுகா! தயவு செய்து சாப்பிடு'' என்று கேட்டுக் கொண்டான். கல்லுப் பிள்ளையார் அசைந்து கொடுக்கவில்லை. ''ஓ! அப்பா பூஜை செய்தால்தான் நிவேதனத்தை ஏற்பாயா? நான் கொடுத்தால் உண்ண மாட்டாயா?'' என்று ஏக்கமும் கோபமுமாகக் கேட்ட பாலகன் ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் விநாயகர் சிலை மீதே தன் தலையை மோதிக் கொண்டான். கணபதி அந்தக் கணமே தோன்றிச் சிறுவனைத் தடுத்து அமுது செய்தார். நம்பிக்கு ஒரே மகிழ்ச்சி. ஐந்து கரத்தனை ஆடிப் பாடிக் கொண்டாடினான். களைத்து, ஓய்ந்த போது, 'அடடா! பள்ளிக்கு நேரமாகி விட்டதே' என்றும் 'ஆசிரியர் தண்டிப்பாரே' என்றும் நினைவு வர, பயந்து நடுங்கி அழவும் ஆரம்பித்து விட்டான். பாலகன் துயருக்குக் காரணத்தை உடனே புரிந்து கொண்ட விநாயகர் பெருமான் தமது தும்பிக்கையை உயர்த்திச் சிறுவன் மீது வைத்து ஆசீர்வதித்தார். அவ்வளவுதான்; பாலகன் சகல கலைகளிலும் வல்லவனாகி விட்டான்! ஞானம் வந்துற்றபின் பள்ளி எதற்கு? ஆசிரியரின் சீற்றம் பற்றிய கவலை தான் ஏது?

கண்ணுக்கு மெய்யாக விநாயகப் பெருமான் தோன்றியதையோ நிவேதனத்தை உண்டதையோ நம்பியுடன் விளையாடியதையோ சோழ நாட்டில் யாரும் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சம்பவம் நடந்திருக்கக் கூடும் என்றே அவர்கள் முற்றிலும் நம்பினார்கள். இறையருளால் அன்றி இத்தகைய அபார ஞானத்தை, அதி



னும் இத்துணை இளம் வயதில் ஒருவர் எப்படிப் பெற முடியும்? அந்த இறை யருள் எந்தவிதமாகச் செய்யப்பட்டது என் பதா முக்கியம்? செயல்பட்டிருக்கிறது என்ப தற்குச் சான்றாக நம்பியே திகழ்கிறாரே. அது போதாதா? மாமேதையான அவர் அடக்கம் காரணமாக மாமனிதராகவும் உயர்ந்திருப்பதைப் பார்க்கிறார்களே அது காணாதா?

அந்த மாமனிதர், நம்பியாண்டார் நம்பி இப்போது 'மகாராணி வந்திருக் கிறார்' என்று கேள்விப்பட்டதுமே வர வேற்க எழுந்து வாசலுக்கு ஓட்டமும் நடையுமாக வந்தார் என்றால் அதற்கும் காரணம் மெய்ஞானம் உருவாக்கிய அடக்க மும் பண்பும்தான்.

ஏராளமான தீபங்கள் ஏற்றப்பட்டுத் தமிழ்ப் பள்ளியின் மூலைமுடுக்குகளிலெல்லாம் கூட முன்னிருட்டை விரட்டிக் கொண் டிருந்த பின்மாலைப் பொழுது அது. மகா ராணியின் பல்லக்குத் 'திடு'மென்று பறு கூடியிருந்ததை உணர்ந்தாலும் அதனை ஒரு முணுமுணுப்பாகக்கூட வெளியிட அஞ்சியவர் களாகச் சிவிகை தூக்கிகள் வெளி மதிலைக் கடந்து வந்து மாளிகையின் வாசலில் இறக்கினார்கள்.

''வரவேணும், வரவேணும்'' என்று பணிவாய்க் கரம் கூப்பிய நம்பி, ''ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருந்தால் அரண்மனைக்கு நானே வந்திருப்பேனே'' என்றார்.

''இருக்கட்டும் சுவாமி. தமிழ்ப்பள்ளி தங்கள் தலைமையில் நடக்கும் போது அதை மேற்பார்வையிட அவசியம் இல்லை யென்றாலும் அதன் தேவைகளைக் கணித்துக் குறைகளை நிவர்த்திக்க வேண்டிய கடமை ஆட்சிக்கு இருக்கிறதல்லவா? மன்னர்பிரான் தமிழையும் சமயத்தையும் இரு கண்களாகப் போற்றினாலும், அவருக்குத்தான் நேரமே இருப்பதில்லை. அதனால் நானாவது வந்து போகலாமே என்று...''

''ஆகா! சக்கரவர்த்திக்கு எத்தனையோ அலுவல்கள். எனக்குத் தெரியாதா? ஒரு பேரரசை நிறுவி விடுவது எளிது. அதைக் கட்டிக் காத்து நிர்வகிப்பதும் திக்கெட் டிலும் நமது ஆணையை நிலைநாட்டுவதும் எத்தனை சிரமம்? அவரும் வந்திருந்தால் என் ஆனந்தம் இரட்டிப்பாகி இருக்கும் என்றாலும் தாங்களாவது வர முடிந்ததே என்று மன மகிழ்கிறேன். இந்தத் தமிழ்ப் பள்ளியும் மாணவர்களும் நானும் செய்த பாக்கியம்.''

''புலவரே! உள்ளே சென்று அளவளாவ லாம் அல்லவா? ஓய்வாக இருக்கிறீர் தானே?'' என்று புன்னகையுடன் அரசி வினவ,

''பார்த்தீர்களா? தங்களை எதிர்பாராமல் தரிசிக்க நேர்ந்து புளகமுற்றதில் பண்பு மறந்து வாசலிலேயே நிற்கவைத்துப் பேசிக் கொண்டிருக்கிறேன்... சரியான நேரத்தில் தான் வந்தீர்கள்... அந்திகால வழிபாடு முடிகிற சமயம்.'' தலையக் குனிந்து கரங்களால் சைகை காட்டி வரவேற்றார் நம்பி.

அளவான அலங்காரத்திலும் அழகுத் தேவதையாக விளங்கிய இளங்கோப்பிச்சி, ஒரு நெடுமூச்சுடன் நம்பியைப் பின் தொடர்ந்த போது நாட்டரசியாகவும் எழிலரசியாகவும் மட்டுமின்றி ஒளிலரசியாக வும் பிரகாசித்தாள். நம்பியுடன் சற்றுச் சாவகாசமாகப் பேசி மனப்பாரங்களைக்



குறைத்துக் கொண்டு வெகு சீக்கிரமே அரண்மனை திரும்பி விடலாம் என்று நம்பி வந்திருந்தான் அவன். ஆனால் தாமதமாகும் போலிருக்கிறதே? இரவு கணவன் அந்தப்புரம் வரும்போது தான் அங்கிருந்து விட்டால் தேவலாம். ஆதித்தன் இரவில் விருந்துண்பதில்லை. பாலும் பழமும்தான். அந்தச் சொற்ப ஆகாரமும் மனையாள் அருகிலிருந்தால் தான் ருசிக்கும். இதில் அவன் குறியாக இருந்தான். காரணம் காலையிலும் பகல் போதிலும் அரசாங்கக் காரியமாகப் பேச வரும் உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் அல்லது பிறநாட்டுப் பிரதிநிதிகள் போன்றோருடன் சேர்ந்து அரசனாக அறுசுவை உண்டி அருந்த வேண்டிய கட்டாயம். இரவுச் சிற்றுண்டியின் போது தான் கணவன் என்ற முறையில் இல்லாளுடன் பேசச் சந்தர்ப்பம்.

நல்லவேளையாக மாளிகையின் ஆலயப் பகுதிக்குள் இவர்கள் நுழையவும் தீபாராதனை காட்டவும் சரியாக இருந்தது. இளங்கோப்பிச்சியின் பரபரப்பு அடங்கியது. நேரத்தோடு திரும்பி விடலாம் என்று தோன்றியது. தனக்குப் போடப்பட்ட ஆசனத்தை நிராகரித்து நம்பி எதிரே தானும் தரையில் மனையில் அமர்ந்தான். மணியோசை அடங்கியதும் நம்பி, பள்ளியில் தமிழ் பயிலும் ஒரு சிறுவனை நோக்கிப் புருவ அசைவாலும் புன்னகையாலும் ஊக்குவிக்க அவன் கணீரென்று குரலெடுத்துப் பாடினான்:

கண்காட்டும் நுதலானும்
கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும்
பிறை காட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும்
பயிர் காட்டும் புனல்நின்ற
வெண்காட்டில் உறைவானும்
மெய்காட்டி அருள்வானே!

•

எதிரே இருந்த ஆடவல்லானின் வெண்கலச் சிலா உருவத்தைப் பரவசத்தோடு பார்த்து நின்று கொண்டிருந்த நம்பி, பாடல் முடிந்ததும், ''ஆகா! யார் அதிக பாக்கியசாலி? இத்தகைய பாடல் தம் மீது பாடப்பெற்ற திருவெண்காடு உறை ஈசனா அல்லது இதனைக் கேட்டுக் கேட்டு இன்புறும் வாய்ப்புப் பெற்ற நாமா?'' என்றார்.

''இறைவனைவிடவும் நம்மை விடவும் அதிகமாகக் கொடுத்து வைத்திருப்பவர் ஆளுடைய பிள்ளைதான்! உங்களைப் போன்ற ஒரு ரசிகர், அவர் எழுதியதையெல்லாம் தொகுத்தளிக்கும் தொண்டர், சிதறிக் கிடந்த முத்துக்களை ஆரமாக்கி ஈசனுக்கு அணிவிக்கும் பரம பக்தர் அவருக்குக் கிடைத்திருக்கிறாரே! அதென்னவோ சுவாமி நானும் பார்க்கிறேன், அப்பர், சுந்தரர் பாடல்களை விடவும் நீங்கள் சம்பந்தர் பெருமான் பாடல்களில்தான் அதிகமாக மனமுருகுகிறீர்கள்'' என்று இலேசாக வம்புக்கிழுப்பது போல் குறுநகையுடன் கூறினான் இளங்கோப்பிச்சி.

விரைவில் பரவும் செய்தி...



''ஆகா! ஞானப்பால் அருந்திய குழந்தை யல்லவா? அவனை நினைத்தாலே மேனி சிலிர்ப்பதில் என்ன அதிசயம்?''

''ஏன் நீங்கள் கூடத்தான் குழந்தையாக இருந்தபோதே...'' என்று அரசி ஆரம்பிப் பதற்குள்ளாகவே அடுத்து வரப்போகும் வார்த்தைகளை ஊகித்தவராய் கூசி, கூனி, குறுகிய நம்பி, ''மன்னிக்க வேண்டும் அரசி யாரே! தங்களுக்கு என் மீதுள்ள பெருங் கருணை காரணமாக என்னைத் தகாத அள வுக்கு உயர்த்தி விடாதீர்கள்! பல்வேறுதலங் களில் திருஞானசம்பந்தரின் பாதம் பதித்த இடங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வதையே பிறவிப் பெரும் பயனாகக் கருதுகிறவன் நான். ஏதோ இறையருளால் பெற்ற அறிவை இறைவன் திருப்பணிக்கே அர்ப்பணித்து வர விரும்புகிறேன். அதற்குத் துணை நிற்கும் மன்னருக்கும் தங்களுக்கும் என் றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்றார்.

''தமிழ் வளர்க்கும் போதே மக்களின் இறையுணர்வையும் வளர்த்து வரும் தங்க ளுக்குச் சோழ தேசமே கடமைப்பட்டிருக் கிறது சுவாமி. அந்தப் பணி சிறப்பதில் ஏதும் தடைகள் குறைகள் இருந்தால் சொல்லுங்கள், நீக்கக் காத்திருக்கிறோம்.''

''கோதண்டராமன் என்ற மாற்றுப் பெயருக்கேற்ப ஆதித்தன் ராமராஜ்யம் நடத்துகையில் குறை ஏது எனக்கு?''

''சரி, உங்களுக்கில்லாவிட்டால் போகட் டும் என் குறைகளையாவது சற்றுக் கேட்க லாமில்லையா?''

திடுக்கிட்டவராக நிமிர்ந்தார் நம்பியாண் டார் நம்பி. ''அரசியாரே! தங்களுக்கா குறை!'' என்றவர் சுற்றுமுற்றும் முன் னெச்சரிக்கையாகப் பார்த்தார். ஆனால் அதற்கு அவசியம் இருக்கவில்லை. அரசியின் குறிப்புணர்ந்து ஏற்கெனவே அனைவரும் வணங்கிச் சென்று விட்டிருந்தனர்.

''புலவர் பெருமானே! சில தினங்களுக்கு முன் விக்கியண்ணனுக்குத் தீர்ப்பு வழங்கப் பட்டபோது அரசவையில் நீங்கள் இருந் தீர்கள். நேற்று வரை மன்னரின் இன்னுயிர் நண்பனாக விளங்கியவன் விக்கியண்ணன். அவனுக்குத் தரப்பட்ட கடுமையான தண் டனை... சற்றுமுன் சொன்னீர்களே ராம ராஜ்யமென்று, அதை மெய்ப்பிக்கிறதா?''

இப்படி ஒரு கேள்வி பிறந்ததே அபசாரம் என்பது போல் காதுகளைப் பொத்திக் கொண்டார் நம்பி. பின்னர் வேதனையுடன் நெற்றியின் இருபக்கங்களையும் இருகரத்தின் விரல்களாலும் அழுந்தத் தடவியவாறே சொன்னார்:

''அரசியாரே! விக்கியண்ணன் மீதுள்ள குற்றச்சாட்டை நான் ஆராயவில்லை. அது என் வேலையுமில்லை. தெள்ளத்தெளிவான வழக்கா, அல்லது அதில் சிக்கல்கள் உள்ள னவா எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நன்றாக அறிவேன். அது மன்னர் பிரான் நீதி பிறழ மாட்டார் என்பதுதான். மகாராணி! சாமானிய மக்களுக்குள்ள தர் மம் வேறு; அரசுக் கட்டிலில் அமர்ந்திருக் கும் மன்னர் நடந்து கொள்ளும் விதம்

வேறு. சில தருணங்களில் அவர் தவறு செய்வதுபோல் நமக்குத் தோன்றும். ஆனால் அதில் ஆழ்ந்த உள்நோக்கங்களுடன் கூடிய ராஜநீதி பொதிந்திருக்கும். மேம்போக்காகப் பார்க்கும் போது நமக்குப்புரியவில்லை என்பதால் அவசரப்பட்டுக் குற்றம் சுமத்தக் கூடாது.''

''அதென்னவோ சுவாமி, சற்று முன் பாடினுனே ஒரு சிறுவன், அதுபோல் வெண்காட்டில் உறைவான் தான் மெய் காட்டி அருள வேண்டும்.''

'' 'மெய்காட்டி அருள்வாயே' என்று வேண்டவில்லை சம்பந்தர். 'அருள்வானே' என்று உறுதியாகக் கூறுகிறார். எனவே தங்களுக்கு ஐயமே வேண்டாம். மன்னரிடமும் நம்பிக்கை தளர விடாதீர்கள்!''

நெடுமூச்செறிந்தாள் இளங்கோப்பிச்சி. ''இத்தகைய ஆறுதல் மொழியை எதிர்பார்த்துத்தான் இங்கு கிளம்பி வந்தேன். திருப்தி அடைந்து திரும்பியும் இருப்பேன். ஆனால்...''

''ஆனால்...?''

''தெய்வ சித்தம் வேருக இருக்கிறது. விக்கியண்ணன் சிறையிலிருந்து தப்பிவிட்டான்!''

''என்னது!''

''ஆம் சுவாமி! அது மட்டுமில்லை, இந்தத் தமிழ்ப் பள்ளிக்கே வந்து தங்களிடம் நியாயம் கேட்கவும் அடைக்கலம் புகவும் தீர்மானித்து வந்திருக்கிறான்!''

''இறைவா, இதென்ன சோதனை!''

''சோதனை இத்துடன் முடிந்து விடவில்லை. அவனைக் காப்பதாக நானும் வாக்களித்து விட்டேன்!'' என்றாள் இளங்கோப்பிச்சி. நம்பி திகைத்துப் போனார்.

பின் துரத்தி வந்த காவலரிடமிருந்து தப்பப் பல்லக்கினுள் புகுந்து அதிலிருந்த பெண்ணின் வாயைப் பொத்திய விக்கியண்ணன் 'சுளீர்' என்று சவுக்கடிபோல் கன்னத்தில் அறை விழவே திடுக்கிட்டான். அவனையுமறியாமல் கரத்தைத் தளர்த்தினான். ''விக்கியண்ணா! மரியாதை காட்டு! விலகி இரு!'' என்ற குரல் அதிகாரத் தொனியில் எழுந்தாலும் மெலிதாக ஒலித்ததால் அவளுக்குத் தன்னைக் காட்டிக் கொடுக்கும் நோக்கமில்லை என்று புரிந்து கொண்டு கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான் விக்கியண்ணன்..

''என்னை இன்னாரென்று எப்படித் தெரிந்து கொண்டாய்?'' என்று வியப்புடன் அவன் வினவ,

''இதைக் கூடத் தெரிந்து கொள்ள முடியவில்லையென்றால் நான் இந்த நாட்டின் அரசியாக விளங்கவே அருகதையற்றவள்'' என்றாள் இளங்கோப்பிச்சி.

விக்கியண்ணன் உடலெங்கும் ஒரு நடுக்கம் ஊடுருவியது. ''மகாராணி! மன்னியுங்கள். பரிவாரங்கள் ஏதுமின்றித் தாங்கள் வந்ததால் இருளில் யாரோ என்றெண்ணி ஏமாந்தேன். அத்து மீறி நடந்து கொண்டும் விட்டேன்'' என்றான் ரகசியக் குரலில்.

''மன்னித்தால் போதுமா?'' என்றாள் அரசி.

ஒருகணம் தயங்கியவன், ''போதாது தான்'' என்றான். ''அடைக்கலமும் யாசிக்கிறேன். நான் ஒரு குற்றமும் செய்யாதவன். என்னைப் பாதாளச் சிறையிலே தள்ளியதைச் சகித்துக் கொள்ள முடியாமல் உயிருக்குத் துணிந்து தப்பி வந்து விட்டேன். கண்டு பிடிக்கப்பட்டால் தோலுரித்துக் கழுவிலேற்றி விடுவார்கள்! மகாராணி அபயம்!''

''அருளினேன்'' என்றாள் இளங்கோப்பிச்சி.

இந்த விருத்தாந்தங்களைக் கூறி, ''தஞ்சமென்று வந்தவனை இப்போது என்ன செய்யலாமென்கிறீர்கள்?'' என்று நம்பியை வினவினாள் அரசி. ''என் பல்லக்குக் குறுக்கிட்டிராவிடில் அவன் நள்ளிரவு வரை இம்மாளிகைத் தோட்டத்தில் ஒளிந்திருந்து பின்னர் உங்களைத்தான் நாடியிருப்பான்!''

''அரசி! அவன் இப்போது எங்கே?''

''பல்லக்கிலேயே திரைவிட்டுக் காத்திருக்குமாறு பணித்தேன். யாரும் அதனுள் எட்டிப் பார்க்கவும் துணியார்கள். சுவாமி! தாங்கள் அவனைத் தங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள். நாளையோ அல்லது மறுதினமோ மறுபடி தல யாத்திரை புறப்படும் போது பின்னேடு அழைத்துப் போய் விடுங்கள். சந்தேகமே எழாது. தஞ்சைக் கோட்டையைத் தாண்டியாயிற்று என்றால் பிறகு அவன் தன்போக்கில் சென்றுவிடுவான். சேர நாட்டிலோ பாண்டிய நாட்டிலோ போய்ப் பிழைத்துக் கொள்ளட்டும்.''

''மகாராணி! எனக்கு என்ன சொல்வது, ஏது செய்வது என்றே புரியவில்லை!''

''ஏன் சுவாமி, நீங்கள் தான் 'மெய் காட்டி அருள்வான்' என்று உறுதியாய்க் கூறினீரே. திருவுளச் சீட்டு போட்டுப் பார்த்து விடலாமே'' என்று அரசி கூறவும் நம்பியால் மறுத்துரைக்க முடியவில்லை.

பூப்போட்டுப் பார்த்ததில் விக்கியண்ணனுக்கே வெற்றி! இறைவன் கருணையை எண்ணியபோது, இளங்கோப்பிச்சி கண்களில் நீர் தளும்பி நின்றது. அவள் ஆணைப்படியே நடந்து கொண்டான் விக்கியண்ணன். பல்லக்குத் தூக்கிகளை அழைத்து

மூன்று அட்டைகளில்
வண்ணப்படங்கள்:

வெங்சர்க்கார்

ரவி சாஸ்திரி

ஸ்ரீமானி

பின்னி

படங்கள்: பாலாஜி

நம்பி திருநீறு வழங்கிய சமயம் நழுவிக் கீழிறங்கி நிழலில் ஒதுங்கிப் பின்னர் ஒரு மரத்தின் பின் ஒளிந்தான். நள்ளிரவில் பள்ளி உறங்குகையில் நம்பி வருவார்; அவனை அழைத்துப் போய் உணவும் உடையும் தருவார். மறுநாள் அவனை ஒரு புதிய மாணவனாகப் பிறருக்கு அறிமுகம் செய்வார்.

அரசி விடைபெற்றுப் பல்லக்கிலேறிப் புறப்பட்டாள். அரண்மனையை அடைந்து அந்தப் புரத்துக்கு ஏகியபோது அப்படியொன்றும் அதிக நேரமாகி விட்டிருக்கவில்லை. என்றாலும் அங்கே அவளுக்காகக் காத்திருந்தார் மன்னர்.

ஆலோசனைக் கூடத்தில் அரியாசனத்தில் அவர் அமர்ந்திருக்க அவசரமாக உள்ளே நுழைந்த இளங்கோப்பிச்சி அதேசமயத்தில் அவரிடம் வணங்கி விடைபெற்றுத் திரும்பும் சிறை அதிகாரியைக் கண்டு துணுக்குற்றாள். 'மன்னவா இதென்ன! ரொம்ப அவசரக் காரியமாக இருந்தாலொழிய அந்தப்புரத்தில் அதிகாரிகளுக்கு அனுமதி இல்லையே' என்று கேட்க எண்ணியவளை ஆதித்தனின் கர்ஜனை தடுத்து நிறுத்தியது:

''மகாராணி! மெய்க்காவலர் உடன் வராமல் நீ பல்லக்கிலேறி வெளியே சென்றது, அதுவும் இருள் கவிந்தபின் போனது சிறிய பிழைதான். ஆனால் ஆயுள் தண்டனை பெற்றுப் பாதாளச் சிறையிலிருந்து தப்பி ஓடிய கைதிக்கு அந்தப் பல்லக்கில் அடைக்கலம் தந்தது மாபெரும் குற்றம். அதற்குரிய தண்டனை என்ன தெரியுமா?''

இடிமுழக்கம் போன்ற குரலில் ஆதித்தன் கேட்கவும் நடுநடுங்கி நிலைகுலைந்து போனாள் இளங்கோப்பிச்சி.

(தொடரும்)

நகர் வலம்


○ நிர்மலா சுரேஷ்


○ ராதாகிருஷ்ணன்

வீட்டுக்கு ஒரு விசில்!

இரவில் திருடர் வந்தால்... ஒரு ஐடியா! வீட்டுக்கு ஒரு விசில் வைத்துக் கொண்டு, ஆபத்து நேரத்தில் விசில் ஊதி, உதவிக்கு அழைக்கலாம். ஐடியா கொடுத்தவர் போலீஸ் டைரக்டர் ஜெனரல் இ. ராதாகிருஷ்ணன்.. ஒரு விழாவில். (இனி அரசாங்கம் வீட்டுக்கு ஒரு விசில் வழங்கும் விழா நடத்தலாம்!)

இன்னொரு காது!

எஸ். வி. சகஸ்ரநாமம் இலக்கிய சிந்தனைக் கூட்டத்தில் சொன்ன விஷயம்: சோழ மன்னனின் காது குண்டலம் பற்றி ஒட்டக்கூத்தர் ஓராயிரம் பாடல்கள் பாடி முடிக்க, மன்னரும் 'சபாஷ்' சொன்னார். 'இன்னும் முடியவில்லை' என்று ஒ. கூ. சொல்ல, மன்னர் திகைத்தார். ஒ.கூ. சொன்னார்.

''மன்னா! இன்னொரு காது இருக்கிறதே!''

○ எஸ். வி. சகஸ்ரநாமம்



○ ஜகத்ரட்சகன்




பேச்சில் செஞ்சுரி!

சட்டசபை உறுப்பினர் ஜகத்ரட்சகன் தன் ரஷ்யப் பயண அனுபவங்களை — குறிப்பு எழுதி வைத்துக்கொள்ளாமல் பேசி — செஞ்சுரி போட்டார். ஆம்! பேச்சு நூறு நிமிடத்துக்கும் மேல் போயிற்று. ரஷ்யாவில் அநேகம் பேர் 'கேரளமும் — மே. வங்காளமும் எப்படி இருக்கிறது என்று என்னைக் கேட்டார்கள்'' என்றாரேயொழிய அதற்கு இவர் என்ன பதில் சொன்னார் என்று சொல்லவில்லை.

புது மாதிரி அழைப்பிதழ்!

'கவிதாபானு' நிறுவனத்தின் புதுக் கவிதை நூல் வெளியீட்டு விழா. அழைப்பிதழ் ரொம்பப் புதுமாதிரியாய் இருந்தது. பாடத் தெரியாத பன்னீர்ப் பூக்கள் (நூலின் பெயர்) வாய் அவிழும் வண்ணத் திருவிழா. எடுத்துத் தருகிறவர்: கவிஞர் மு. மேத்தா. ஏந்திக் கொள்கிறவர்: திருமதி. நிர்மலாசுரேஷ். பிறகு 'உரை சிந்தும் உயர்ந்தோர்' என்று போட்டு, சுரதா, பொன்னடியான், பேராசிரியர் ராமு என்று ஒரு சின்ன லிஸ்ட்.

—சின்னா கொலம்பஸ்





நானா ரிடையர் ஆனேன்? இப்பதான் புதுவாழ்க்கையே
ஆரம்பமாகிறது! தோட்டத்தில் நடமாடுவது, ஸீஸனில்
பாட்டுக் கச்சேரிகளுக்கு போவது, கடற்கரை
பக்கம் உலாவியபடி அரசியலை அலசுவது,
பேர குழந்தைகளுக்கு கதை சொல்வது, இன்னும் எத்தனையோ...
இதையெல்லாம் செய்ய தினமும் இரண்டுமுறை
ஹார்லிக்ஸ் பருகுகிறேன்.
மால்டெட் பார்லி, முழு ஆடைப்
பால் மற்றும் பொன்னிற
கோதுமைகொண்ட ஹார்லிக்ஸ்
ஒரு சுவையான, சத்தான பானம்.
ஊட்டச்சத்திற்கு மூலாதாரமான
ஒரு லட்சிய பானமென்ற
நம்பிக்கையைப் பெற்றது. எனவே,
கடந்த நூறு வருடங்களாக
கோடிக்கணக்கான குடும்பங்கள்
உலகமெங்கும் ஹார்லிக்ஸின்மேல்
நம்பிக்கை வைத்து வருகிறார்கள்
என்பதில் ஆச்சரியமில்லை.
Horlicks
The Great Nourisher
புதிய காலத்திற்கேற்ப
புதிய தோற்றம்
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

மர்ம நாவல்

பத்துநாள் பயங்கரம்

முகுந்தன்



1

"அருமையான பங்களா—டைப் வீடு... 1800 சதுர அடி. அசல் தேக்கில் வாசல் நிலைகளும் ஜன்னல்களும் செய்திருக்கிறார்கள். தரைக்குப் போட்டிருக்கும் மொஸைக்கில் முகம் பார்க்கலாம். வசதிக்குக் குறைச்சலே இல்லை..." என்றெல்லாம் அடுக்கி அடுக்கியே, உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றிருந்த ஆபீஸர் ஜகந்நாதனை அந்தப் பங்களாவை வாங்க வைத்து விட்டார் ரியல் எஸ்டேட் புரோக்கர் ஞானமூர்த்தி.

குடும்பத்தினருடன் ஒரு தடவையும், தாம் மட்டும் தனியாக ஒரு தடவையும் போய்ப் பங்களாவின் இண்டு இடுக்கெல்லாம் அலசிப் பார்த்த பின்னரே அதை வாங்குவதென்று முடிவு செய்தார் ஜகந்நாதன்.

பங்களா வாங்கிய சந்தோஷத்தை, உறவினர்களையும், நண்பர்களையும் அழைத்து, கொண்டாடத் தீர்மானித்தார். லட்சாதிபதிகள் வீட்டுக் கல்யாணத்துக்கு மட்டுமே சமையல் வேலை ஒப்புக் கொள்வது என்று கொள்கை வைத்திருந்த பிரபல சமையல் கலைஞர்களான குப்புசாமி சகோதரர்களை ஸ்பெஷலாக வரவழைத்து, பெரிய விருந்துக்கும் ஏற்பாடு செய்தார்.

கிரகப் பிரவேசம் செய்த அன்றிரவு எல்லோருடனும் சந்தோஷமாகச் சிரித்துப் பேசியபடியே ஜகந்நாதன் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது தான் அது நிகழ்ந்தது.

"வெளியே போடா திருட்டு நாயே!"

அதிகாரமான, ஆத்திரம் செறிந்த அந்தக் குரலைக் காதருகில் கேட்டதும் ஜகந்நாதன் திடுக்கிட்டு நிமிர்ந்தார். வாய்க்குக் கொண்டு போன ஜாங்கிரித் துண்டு கையிலிருந்து நழுவி இலையில் விழுந்தது.

சுற்றுமுற்றும் பார்த்தார். யார் இந்த வார்த்தைகளைச் சொன்னது?

விருந்தாளிகள் முகமலர்ச்சியுடன் சாப்பாட்டை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் யாரும் சொல்லியிருக்க முடியாது என்று ஊர்ஜிதமாகியது.

நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து, இருபுறமும் பார்வையைச் செலுத்தினார். எவரும் காணப்படவில்லை.

சற்றுத் தள்ளி, பந்தி விசாரித்துக் கொண்டிருந்தான் அவரது தம்பி.

"ரமணி! இங்கே வா!" என்று அழைத்தார்.

"என்னண்ணா?" என்ற ரமணி, நெருங்கி வந்து குனிந்து, காதை நீட்டினான்.

"சமையல் கட்டுக்குப் போய், அங்கே ஏதாவது சண்டையா என்று கொஞ்சம் பாரேன்!"

வேட்டியை மடித்து டப்பா கட்டு கட்டிக் கொண்டு விரைந்த ரமணி, மூன்றே நிமிடத்தில் திரும்பி வந்தான்.

"அங்கே எதுவும் தகராறு இல்லையே அண்ணா! சமையற்காரர்கள் எல்லோரும் ஜோக் அடித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்களே!"

"சரி, நீ போய் உன் வேலையைக் கவனி!"

"என்ன விஷயம், சொல்லேன்?"

"ஒண்ணுமில்லே... நீ போயேன்!"

ஜகந்நாதனுக்கு வலப்பக்கமாக உட்கார்ந்திருந்த ஹார்டுவேர் மெர்ச்சண்ட் ராமலிங்கம், "என்ன சார், ஏதாவது ப்ராப்ளமா?" என்று மூக்கை நுழைத்தார்.

"நோ, நத்திங்!"

சொல்லி விட்டாரே தவிர, ஜகந்நாதனின் மனத்தில் சற்று முன்பு காதில் விழுந்த அந்த வாக்கியம் நெருடிக்கொண்டே இருந்தது.

"வெளியே போடா திருட்டு நாயே!"

2

விருந்து முடிந்து எல்லோரும் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார்கள்.



உறவுக்காரர்கள் சிலர் மட்டும் பழங்கதைகளைப் புரட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பிரம்பு நாற்காலியில் அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த ஜகந்நாதனிடம் தூரத்து உறவினரான ஒரு கிழவர் — இஞ்சிக்கொல்லை அத்தான் என்றுதான் அவரைக் குறிப்பிடுவார்கள் —வந்தார்.

பக்கத்திலிருந்த நாற்காலியைக் காட்டி, ''உட்காருங்கள் அத்தான்!'' என்று உபசரித்தார் ஜகந்நாதன்.

''இருக்கட்டும்டா... நான் கிளம்பிண்டே இருக்கேன்... பங்களாவெல்லாம் ஃபர்ஸ்ட் க்ளாஸா இருக்கு... நல்ல விலை கொடுத்து வாங்கியிருக்கிறதா கேள்விப்பட்டேனே.... நன்னா விசாரிச்சுட்டுத்தானே வாங்கினே?''

''ஆமாம்... ஆமாம்...''

''சந்தேகம் எதுவுமில்லையே?''

''அதெல்லாம் எதுவுமில்லை... பத்திரமெல்லாம் 'க்ளீனாத்'தான் இருக்கு...''

''நான் அதைச் சொல்லலே...''

''பின்னே?''

''வேறே ஒன்னும் குத்தமில்லையே?''





சொல்லப் போனால் ஜகந்நாதனுக்கு அதைப் பற்றியெல்லாம் எதுவுமே தெரியாது. ஆறு மாதம் முன்பே, தாம் ரிடையர் ஆகப் போவதாகவும், நல்ல பங்களா ஒன்று பார்த்துக் கொடுக்கும்படியும் ஞானமூர்த்தியிடம் சொல்லியிருந்தார். ஞானமூர்த்தியே முன் நின்று, விலை பேசி, முடிவு செய்த வீடு இது. அதன் சொந்தக்காரர் வடக்கே எங்கோ ஆசிரமத்தில் போய்த் தங்கும் உத்தேசத்தில் இருப்பதாகவும், விலை கொஞ்சம் ஏறத்தாழ இருந்தாலும் பரவாயில்லை என்று தம்மிடம் சொன்னதாகவும் ஞானமூர்த்தி கூறியிருந்தார்.

அவ்வளவுதான் ஜகந்நாதனுக்குத் தெரியும். இஞ்சிக்கொல்லை அத்தான் பதுசாக ஏதையோ கிளப்புகிறாரே!

இருந்தாலும் சமாளிக்கும் விதமாக, ''அதெல்லாம் நம்ம புரோக்கர் பார்த்துத்தான் முடித்திருப்பார்!...'' என்றார்.

''இல்லேடா... புரோக்கர்களையும் நாம ரொம்ப நம்பிடக் கூடாது. அவங்களுக்கு வேண்டியது என்ன? பணம்தானே! அதுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். சொல்வார்கள்..... நாமதான் ஜாக்கிரதையா இருக்கணும்...''

அசட்டுப் புன்னகைதான் ஜகந்நாதனின் பதில்.

3

வாடகைக்கு இருந்த அபிராமபுரம் வீட்டிலிருந்து சில ஃபர்னிச்சர் அயிட்டங்கள், காத்ரேஜ் பீரோ, சமையல் பாத்திரங்கள் சில உதிரிகள் ஆகியவற்றை மட்டுமே புது வீட்டுக்குக் கொண்டு வந்திருந்தார்கள். முக்கியமாக, ஜகந்நாதனின் டபிள்–பெட் இன்னும் வந்து சேரவில்லை. எனவே, தமது இரண்டு பிள்ளைகளை (வயது 26, 24) மட்டும் புது பங்களாவில் அன்றிரவு படுக்கச் சொல்லி விட்டு, மனைவியுடனும், மகளுடனும் அபிராமபுரத்துக்கு வந்து விட்டார் ஜகந்நாதன்.

இரண்டே நாட்களில் புது பங்களாவில் 'செட்டில்' ஆகி விட்டார்.

அன்றிரவே ஒரு விநோதமான அனுபவம் ஏற்பட்டது அவருக்கு.

கடந்த நான்கைந்து நாட்களாக அலைந்த அலைச்சல் தந்த களைப்பில் இரவு ஒன்பது மணிக்கெல்லாம் படுத்து விட்டார் ஜகந்நாதன். அயர்ந்து தூங்கியும் விட்டார்.

நடு இரவில் திடுமென்று உடம்பில் மின்சாரம் பாய்ந்தாற் போன்ற உணர்வில் விழித்துக் கொண்டார். ஒரு நிமிடம், எங்கிருக்கிறோம், என்பதே புரியவில்லை. தூக்கக் கலக்கம். நைட் லாம்ப் அணைந்து போயிருந்ததில் சுற்றிலும் இருட்டு அப்பியிருந்தது. விழிகளால் துழாவினார். விழிகள் ஃபோகஸ் ஆக மறுத்தன... மீண்டும் முயன்ற போது எங்கிருந்தோ 'ஜிலீர்' என்று குளிர்ந்த காற்று வந்து முகத்தில் வந்து தாக்கியது. சாதாக் காற்று இல்லை. அடுக்கு மாடிக் கட்டடத்தின் உச்சிக்குப்போய் நின்றால் ஆக்ரோஷமாக வந்துமோதுமே, அந்த வகை.

காற்று எலும்பை ஊடுருவியதென்றால் அதைத் தொடர்ந்து அறைக்குள் பரவிய நறுமணம், திக்குமுக்காட வைத்தது. மகிழம்பூ மணம். முதலில் லேசாக ஆரம்பித்து, பின்னர் அடர்த்தியாகி, மூச்சையே திணற வைக்கிற அளவுக்கு அதிகரித்து அவரை வளையமிட்டுச் சூழ்ந்து கொண்டது.

திக்குமுக்காடிப் போனார் ஜகந்நாதன்.

எல்லாம் சில நிமிடங்கள் வரைதான்.

யாரோ உத்தரவு போட்டுச் சுருட்டி இழுத்தாற்போல அந்த மகிழம்பூ வாசனை விலகத் தொடங்கியது. அதேசமயம் அவரது பார்வையிலும் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவு பிறக்கவே, தலையைத் திருப்பிப் படுக்கையைப் பார்த்தார். மைதிலி —அவரது மனைவி — லேசான புன்னகையுடன் தூங்கிக் கொண்டிருந்தாள். மறுபுறம் பார்வையைச் செலுத்தி, இருட்டை ஊடுருவிய போது, இதயத் துடிப்பு எகிறியது.

கட்டிலுக்கும் அறை வாசலுக்கும் இடையே யாரோ நின்று கொண்டிருப்பதைப் போலிருந்தது... அதுவும் தெளிவாக இல்லை. மசமசவென்று மங்கலாக... ஜகந்நாதனின் நாக்கு உலர்ந்து போயிற்று! ''ஏய்! யார் நீ!'' என்று கேட்க முயன்றார். குரல் தொண்டையிலேயே சிக்கிக் கொண்டது.

கலவரத்துடன் பார்வையை மீட்டுக் கொள்ள முயல்கையில் அந்த மசமச உருவம் சட்டென்று விலகி, சப்தமின்றி நகர்ந்து கட்டிலின் கால்மாட்டில் வந்து நின்றது.

ஜகந்நாதனுக்கு இப்போது கொஞ்சம் தைரியம் பிறந்திருந்தது. கல்லூரி நாட்களில் அவர் கால்பந்து சாம்பியன். அந்த உருவத்தை வலுவான ஒரே உதையில் வீழ்த்தலாம் என்று முடிவெடுத்து அவர் செயல்படுவதற்குள் அந்த உருவம் ஜன்னல் அருகே விரைந்தது.

அடுத்த விநாடி அது ஜன்னலுக்கு வெளியே — அந்தரத்தில் — நின்றது!

வளரும் குழந்தைகளுக்குத்

தேவை ஒரு விசேட திட உணவு...

ஃபாரெக்ஸ்




காரணம், குழந்தைகளின் விரைந்த முழுவளர்ச்சிக்கான அதிக ஊட்டச்சத்துள்ள திட உணவாகும் ஃபாரெக்ஸ்.

1. ஃபாரெக்ஸ் புரதச் சத்து நிரம்பியதாகும் —உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு இது அத்தியாவசியமாகும்.

2. ஃபாரெக்ஸ் வேறெந்த பிராண்டு செய்யப்பட்ட திட உணவைக் காட்டிலும் அதிக இரும்புச் சத்துள்ளதாகும். இது குழந்தைக்குத் தொற்றுநோய் எதிர்ப்புச் சக்தியையும் ஆரோக்கியமான இரத்தத்தையும் அளிக்கிறது.

3. ஃபாரெக்ஸில் கால்ஷியம் மற்றும் ஃபாஸ்ஃபரஸ் சரியான விகிதத்தில் சேர்ந்திருக்கின்றன. ஆரோக்கியமான எலும்புகளையும் திடமான பற்களையும் பெற இவை உதவுகின்றன.

4. தவிர ஃபாரெக்ஸ், குழந்தையின் மென்மையான செரிக்கும் சக்திக்கேற்றவாறு விசேஷமாக முன்கூட்டியே பக்குவம் செய்யப்பட்டதாகும்.



டாக்டர்கள் சிபாரிசு செய்வது

ஃபாரெக்ஸ்®

வழங்குவோர் க்ளாக்ஸோ

CASGLF-42 183 TM

கோத்ரெஜ் ஸ்டோர்வெல் — ஆயுட்கால அன்பளிப்பு !



கோத்ரெஜ் ஸ்டோர்வெல், எந்த சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற அருமையான அன்பளிப்பு. ஆயுட்காலம் முழுவதும் நினைவில் நிற்கும் அன்பு பரிசு, வழக்கமான மற்ற ஸ்டீல் அல்லது மர அலமாரிகளோடு ஒப்பிடும்போது, இந்தப் பயன் மிக்க, கவர்ச்சியான, ஸ்டீல் அலமாரி தனக்கே உரிய, நீடித்த உழைப்பாற்றல் மற்றும் கூடுதல் பாதுகாப்பு போன்ற, நலநயங்களைக் கொண்டது.

கோத்ரெஜிடம் மட்டுமே உள்ள வண்ணப் பூச்சு முறை காரணமாக, கீறல் விழாத மேம்பட்ட மெருகு, இதன் அழகிற்கு மேலும் பொலிவூட்டுகிறது.

தவிரவும் முழுநீள 137 செ.மீ. வெளி நாட்டு 'ப்ளேட்' கண்ணாடி, தகர்க்க முடியாத பூட்டுகள், மறைவான கீல்கள், இறுக மூடிக்கொள்ளும் மும்முனைப் பூட்டு மற்றும் அட்ஜஸ்ட் செய்யக்கூடிய ஷெல்ப்புகள்.

இத்தனைச் சிறப்புகளாலும் கோத்ரெஜ் ஸ்டோர்வெல் மறக்க முடியாத, பல தலைமுறைகளுக்கு உழைக்கும் அன்பளிப்பாக அமைகிறது.

கோத்ரெஜ் Godrej®

மேம்பட்ட தொழில்—
நுட்பம் மற்றும் மதிப்பு.

ULKA-GS-2-82 TAM



ஜகந்நாதன் பிரமிப்பின் எல்லையில், கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டு மறுபடியும் மறுபடியும் பார்த்தார்.

திரை போடப்படாத ஜன்னலுக்கு வெளியே — **அது!**

பார்த்துக் கொண்டிருக்கும் போதே மாயமாய் மறைந்தே போயிற்று!

கொஞ்சம் தெம்பு வந்தவராகப் படுக்கையை விட்டு எழுந்து ஜன்னலருகில் சென்று வெளியே பார்வையைச் செலுத்தினார்.

தெருவிளக்கின் அற்ப ஒளி, பங்களா காம்பவுண்டுக்குள்ளும் கொஞ்சமாகத் தெரிந்திருந்தது.

அந்த வெளிச்சத்தில், கண்களை இடுக்கிக் கொண்டு அவர் பார்த்தபோது, அந்நியமாக எதுவுமே தென்படவில்லை.

ஜன்னல் அருகிலேயே சற்று நேரம் நின்றிருந்தார்.

அறைக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி, எந்த வித சலனமும் இல்லை.

மைதிலி விழித்துக் கொண்டு தன்னைப் பார்த்துப் பயந்து விடப் போகிறாளே என்ற எண்ணத்தில், படுக்கையில் சாய்ந்தார்.

தூக்கத்தைத் தொடரும் எண்ணத்துடன் கண்ணை மூடிக் கொண்டவர் ஏதோ சந்தேகம் வந்தவராகக் கண்களைத் திறந்து, சுற்றுமுற்றும் பார்த்தார்.

அறையில் இப்போது நைட்—லாம்பின் பச்சை வெளிச்சம் பரவியிருந்தது. தலைக்கு மேலே மின்விசிறியும் வேகமாகச் சுற்றிக் கொண்டிருந்தது.

'கரண்ட் எப்போது வந்தது?' என்று தமக்குள் கேட்டுக் கொண்டு, புரண்டு படுத்து, உறங்கியே போனார்.

4

மறுநாளும் அவருக்கு நிறைய வேலை இருந்தது. டெலிபோனை 'ஷிஃப்ட்' செய்ய வேண்டுமென்று எழுதிப் போட்டிருந்தார். ஒரு மாதத்துக்கு முன்பே, அது விஷயமாக, அவருக்குத் தெரிந்த டெலிபோன் இலாகா அதிகாரி ஒருவரைச் சந்தித்துப் பேசினார். அப்படியே, ஹைகோர்ட்டுக்குப் போய், வக்கீல் நண்பர் ஒருவரைப் பார்த்து, சொத்து வரி விஷயமாகச் சில சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

டிபன், காப்பி சாப்பிட்டு முடிக்கும் வரை, முதல் நாளைய சம்பவம் பற்றி மைதிலியிடம் சொல்ல வேண்டும் என்ற எண்ணமே தோன்றவில்லை.

கட்டு, தம்ளரை எடுத்துப் போக மைதிலி வந்ததும், ''கொஞ்சம் உட்காரேன் இப்படி!'' என்றார்.

உட்கார்ந்தவள், அவர் சொல்வதற்கு முன்பு முந்திக் கொண்டாள்.

''அருண், பரத், நீரஜா மூணு பேரும் வர்றதுக்குள்ளே உங்களிடம் ஒரு விஷயம் சொல்லியாகணும்......''

''சொல்லேன்!''

''நீங்க வெளியே போயிருந்தப்போ இங்கஒரு விநோதம் நடந்தது.....''

லேசான அதிர்ச்சி அவருக்கு.

''நான் சமையலறையில் வேலையாக இருந்தேன்... யாரோ தடதடவென்று ஹாலுக்குள் ஓடி வருகிற ஓசை கேட்டது. வேலையை விட்டுட்டு, ஹாலுக்கு வந்து பார்த்தேன். யாரையும் காணோம்... ஆனால் ஏதோ ஓசை மட்டும் கேட்டது... நெருக்கத்திலே கேட்டது... யாரோ என்னைத் தாண்டிக் கொண்டு மாடிப்படிப் பக்கம் போன மாதிரி இருந்தது... ஒண்ணும் புரியாமல் நான் திகைத்துப் போய் நிற்கிற போது, பழையபடி ஓடி வருகிற ஓசை... இப்போ மாடியிலே கேட்டது... உடனே, ரெண்டு பேராக 'திடும் திடும்'னு மாடிப்படியிலே இறங்கி வருகிற மாதிரி இருந்தது... லாண்டிங்லே ஒரு பெயிண்டிங் மாட்டியிருந்தோமே, அது திமர்னு அறுந்து விழுந்தது.. எனக்கு ஒண்ணுமே புரியல்லே... நீங்கள் உட்கார்ந்திருக்கிறீர்களே, அந்தச் சோபாவிலே அப்படியே சாய்ந்துட்டேன்... நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்கிறது; அடிவயிற்றில் ஏதோ சங்கடம் புரள்கிறது... கண்ணை மூடிண்டுட்டேன்... ஒரு அஞ்சு நிமிஷம் ஆகியிருக்குமோ என்னவோ —அப்புறம் தான் நிதானத்துக்கு வந்தேன்... என்ன, கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா— இல்லே, தூங்கி விட்டீர்களா?''

கண்களை மூடிய வண்ணமிருந்த ஜகந்நாதன், சிரித்தபடியே கண் திறந்தார்.

''கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன் மைதிலி... மேலே சொல்லு... அப்புறம் என்ன நடந்தது?''

''அதைத்தான் பூராவும் சொல்லி விட்டேனே... வேறே எதுவும் இல்லே...!''

சற்று மௌனமாக இருந்தார் ஜகந்நாதன். அப்போதே, மைதிலியிடம் தமது அனுபவத்தைச் சொல்லி அவளை மேலும்

தயாரிப்பாளர்: ''யாராவது ஒருத்தரோட கதையை காப்பியடிச்சாப் போதாதா—? நீர் எழுதிய கதையை படமாக்கின பிறகு ஆறு பேர் சொந்தம் கொண்டாடிக்கிட்டு வந்திருக்காங்களே!''

—அமுதன் மைந்தன்.





ரிடுக்குள்ளாக்க வேண்டாம் என்றும் முடிவு செய்தார். அவளுக்கு நம்பிக்கையூட்டும் முயற்சியில் இறங்கினர்.

''இதெல்லாம் வெறும் மனப்பிரமையாகக் கூட இருக்கலாம் மைதிலி... அந்தப் படம் காற்றிலே விழுந்திருக்கலாம்... ஆணி தளர்ந்து போய், சரிந்திருக்கலாம்... எது வாக இருந்தாலும் நீ அநாவசியமாகக் கலவரப்படாதே...அது தான் என்கிட்டே சொல்லி விட்டாயே, ஃபர்கெட் இட்! தைரியமா இரு!''

சொன்னரே தவிர, அவருக்குள் லேசாக ஒரு பயம் தலை காட்டியது.

மறுபடியும் அன்றிரவே ஜகந்நாதனுக்கு அந்த அனுபவம் ஏற்பட்டது.

முதல் நாளிரவு நடந்த நிகழ்ச்சி அப்படியே டி. வி.-யில் ஆக்ஷன்-ரீப்ளே மாதிரி நடந்தது.

சிற்பி மைக்கலாஞ்சலோ ஒருநாள் பெரிய பளிங்குக் கல்லை நடுத்தெருவில் இழுத்துச் செல்வதைப் பார்த்த சில வழிப்போக்கர்கள் இகழ்ச்சியாக, ''கல்லை எடுத்துச் செல்வதில் என்ன பயன்?'' என்று கேட்டார்கள்.

''இதனுள் ஒரு தேவகன்னி ஒளிந்து கொண்டு வெளிவரப் போராடிக்கொண்டிருக்கிறள்'' என்றார் மைக்கலாஞ்சலோ!

—எஸ். ராமமூர்த்தி.



தூக்கத்தின் நடுவே உடம்பில் மின்சாரம் பாய்ந்தது.

விழிப்பு வந்தது.

நைட்-லாம்ப் அணைந்து போயிருந்தது.

மின் விசிறி ஸ்தம்பித்திருந்தது.

குளிர்க் காற்று, ஸ்வெட்டரையும் மீறி, தோலை ஊருடுவி, மார்புக் கூட்டில் முத்தமிட்டது.

தொடர்ந்து அந்த நறுமணம். காற்றுக்குப் பதிலாக மகிழம்பூ சென்ட்டை உள்ளே இழுக்கிற வேதனை.

முந்தைய நாளைவிட, இன்று இந்தத் திணறல் அதிக நேரம் தொடர்ந்தது.

தலையை நிமிர்த்திய போது அந்த அருவம் தலைமாட்டில் ஸீலிங்குக்கும் தரைக்குமாக நின்றது.

அவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது கட்டிலுக்கு வலப்புறமாக ஊர்ந்து, ஜன்னல் பக்கமாக வந்து நின்றது.

ஜகந்நாதன் சற்றுத் துணிச்சலாக ஒரு காரியமும் செய்தார்.

தலையணையின் கீழே துழாவி, தயாராக வைத்திருந்த டார்ச் விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டார்.

அதன் பட்டனில் அவர் கைவைத்து அழுத்த முற்பட்டபோது —

மின்னல் வேகத்தில் அவரது கரத்திலிருந்து அது பறிக்கப்பட்டு, தரையில் வீசியெறியப்பட்டது.

திகைத்து விட்டார் ஜகந்நாதன்.

சுய உணர்வு பிறக்கச் சில நிமிடங்கள் பிடித்தன.

உடனடியாகத் துள்ளியெழுந்து ஜன்னல் பக்கம் பாய்ந்தார்.

ஜன்னலை அவர் நெருங்கவும் காதருகில் மெல்லிய சிரிப்புச் சத்தம் கேட்டது. பரிகாசச் சிரிப்பு.

உறைந்து போனார்.

தைரியமெல்லாம் எங்கோ பறக்க, உடல் சக்திகளனைத்தும் வடிந்து போவது போன்ற உணர்வு.

படுக்கைக்கே திரும்பி வந்துவிடலாமென்று அவர் மெள்ளத் திரும்பியபோது, முதுகுப்புறமிருந்து யாரோ பலமாக அவரைப் பிடித்துத் தள்ளினர்கள்.

அடுத்த வினாடி, படுக்கையில் குப்புறக் கிடந்தார் அவர். மூக்கு விண்விண்ணென்று வலியில் தெறித்தது.

முதுகில் பொங்கப் பொங்க வெந்நீரை ஊற்றிக் கொண்டது போல எரிச்சல் பரவியது.

மண்டைக்குள் நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறின.

அவ்வளவுதான் தெரியும்.

5

காலையில் எழுந்திருக்கும்போது சூரியன் சூடான கிரணங்களினுல் முதுகைத் தேய்த்துக் கொண்டிருந்தான்.

புரண்டு படுத்து, மூக்கைத் தடவி விட்டுக் கொண்டார் ஜகந்நாதன். இன்னமும் வலித்தது.

படுக்கையில் இடந்தபடியே, இரவில் நடந்ததை மனத்தில் ஓட்டிப் பார்த்தார்.

'ஸம்திங் ராங் ஸம்வேர்' என்று தமக்குள் சொல்லிக் கொண்டார்.

அந்த முடிவை உறுதிப்படுத்தும் வகையில் அன்று வேறென்றும் நடந்தது.

கீழ் ஹாலில் அமர்ந்து அவர் பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த போது நீரஜா பதற்றத்துடன் ஓடி வந்தாள்.

அவரது கையிலிருந்து பேப்பரைப்பறித்து டீபாயின் மீது வீசினள். ''டாடி! கம் க்விக்!'' என்று கலவரமாக அழைத்தாள்.

கீழ் ஹாலில் அணைத்தாற்போலிருந்த அறையை நீரஜாவுக்கென ஒதுக்கியிருந்தார்.

அந்த அறையுடன் இணைந்த குளியலறையின் கதவை அவசரமாகத் திறந்து, வெளி

Money is Music



Listen with interest at KCUB

Money saved adds music to life. Save at KCUB and enjoy the music of life.

THE KUMBAKONAM CITY UNION BANK LTD

REGISTERED OFFICE : KUMBAKONAM 612 001

FOR PROTECTION AND GROWTH

APRC

எங்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்களை
எல்லாம் தரமான முறையில்,
நியாயவிலையில், சரியான எடை அளவில்,
சீராகப்பெற முடிகிறதே! எப்படி?
கூட்டுறவுப்பண்டகசாலைகளும்,
சிறப்பங்காடிகளும் எங்களுக்கு உதவுகின்றன!



எங்கும் எதிலும் கூட்டுறவு
வளம் பொங்கப் பொலிவதும் கூட்டுறவு.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்
சென்னை



யில் இருந்தபடியே, ''லுக் தேர் டாடி!'' என்றாள் நீரஜா.

பார்த்தார்.

ஷவர்—பாத் குமிழைத் திறந்து விட்டு அவசர அவசரமாக மூடியிருக்கிறாள் போலிருக்கிறது.

ஷவரிலிருந்து நீர் முத்துக்கள் தரையை நோக்கிக் குதித்துக் கொண்டிருந்தன.

''என்னம்மா! வாட் இஸ் ராங் வித் இஸ்?''

''நன்றாகக் கவனியுங்கள் டாடி... அவசரப் படாமல், நிதானமாகப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்...''

புரியவில்லை.

''கமான் நீரு... எதைப் பார்க்கச் சொல்கிறாய்?''

''ஷவரிலிருந்து கொட்டுகிறதே. அதைத் தான்!''

''எதுவும் தப்பிதமாய்ப் படவில்லையே அம்மா?''

''ஆர் யூ ஷ்யூர்?''

''அப்ஸொல்யூட்லி!''

குழப்பத்துடன் அவரையே பார்த்தாள் நீரஜா.

''ஒன்று செய்யுங்களேன் டாடி. உள்ளே போய் அந்த ஷவர் நாப்பைத் திருகுங்களேன்!''

''இதென்ன பிரமாதம்!'' என்று சொல்லி உள்ளே போய், அந்த ஷவரை நெருங்கி, குமிழைத் திருகி விட்டு, ஒதுங்கினார்.

மெலிசாக — பூத்தூறலாக — ஷவரிலிருந்து நீர் இறங்கத் தொடங்கியது. சில விநாடிகள் அதைப் பார்த்தபடி நின்றிருந்தார்கள் அப்பாவும் பெண்ணும்.

''இதிலே என்ன கோளாறு என்கி......

ஜகந்நாதன் முடிக்கவில்லை.

கண் எதிரே அவர் கண்ட காட்சி பீதியைக் கிளறி. வயிற்றில் அக்கினித் திராவகத்தைச் சுரக்கச் செய்தது.

ஷவரிலிருந்து தண்ணீருக்குப் பதிலாக. ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. முத்து முத்தாக, துளித் துளியாக.

''லீவ்! என்று கூச்சலிட்டாள் நீரஜா. ''ஸீ தேர்! அதைத்தான் சொன்னேன்!''

அவள் வாயை அவசரமாகப் பொத்தி, பாய்ந்து சென்று, ஷவர் குமிழைத் திருகி அழுத்தமாக மூடி, அதே வேகத்தில் மகளைக் கையைப் பிடித்துத் தரதரவென்று ஹாலுக்கு இழுத்து வந்தார் ஜகந்நாதன்.

பதினெட்டு வயது நீரஜாவின் உடம்பு இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தது. சோபாவில் உட்கார வைத்தார். ''காம் யுவர் செல்ஃப்... பயப்படாதே!'' என்று ஆசுவாசப்படுத்தினார்.


நீரஜாவுக்குக் கொஞ்சம் தெளிவுபிறந்ததும், ''சொல்லம்மா... நீ ஷவரைப் போட்டபோது இதே போலத்தான் ஆயிற்று?'' என்று கேட்டார்.

அதற்குள் நீரஜாவின் கூச்சலைக் கேட்டு ஹாலுக்கு வந்திருந்தாள் மைதிலி. ''என்ன ஆச்சு? எதுக்காகக் கத்தினாளாம் இவள்?'' என்று விசாரித்தாள்.

நீரஜாவைப் பேச விடவில்லை ஜகந்நாதன்.

''ஒன்றுமில்லை. அந்த பாத்ரூமிலே வாட்டர்-ஹீட்டர் ஸ்விட்சைப் போட்டிருக்கிறாள்... எங்கே என்ன கோளாறோ தெரியவில்லை. ஷாக் வாங்கியிருக்கிறாள்... அது தான் விஷயம்...'' என்று சொல்லிவிட்டு மகளுக்கு மட்டும் புரியும்படியாக 'சொல்லாதே' என்று கண்களால் சமிக்ஞை செய்தார்.

''மிக்ஸி பிளக்கைப் போடுகிற போதும் எடுக்கிற போதும் நானும்தான் ஒருநாளைப் போல ஷாக் வாங்கறேன்... இப்படியா கூச்சல் போட்டு ஊரைக் கூட்டறேன்! கைவேலையை விட்டுவிட்டு என்னவோ



செக்கோஸ்லோவாகிய நீதி மன்றம் பாவேல் காபேக் என்பவருக்கு அபராதம் விதித்து, எச்சரித்து அனுப்பி வைத்தது. இவர் செய்த குற்றம் தெரியுமா? ஐந்து வயதான தமது மகள் நாட்ஜாவை எப்படியும் ஒலிம்பிக் பந்தயத்தில் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்ற வெறியில் ஜிம்னாஸ்டிக் பயிற்சியைத் தினமும் 16 மணி நேரம் வலுக்கட்டாயமாகச்செய்யச் சொல்லித் துன்பப்படுத்தியிருக்கிறார். செய்தி பரவி, நீதிமன்றத்தில் அபராதம் கட்டும் நிலைக்கு ஆளானார் பாவேல்.

இ. வெ. மூர்த்திநாதன்.

ஏதோ என்று ஓடி வந்தேன்! இந்தச் சின்ன விஷயத்துக்கா இப்படியொரு ஆர்ப்பாட்டம்!'' என்றபடியே சமையலறைப் பக்கம் நகர்ந்தாள் மைதிலி.

''உம்... இப்போ சொல் நீரு... என்ன நடந்தது?''

''நீங்கதான் பார்த்தீர்களே டாடி! அந்தப் பயங்கரம் தான் நடந்தது... ஷவர்லேருந்து ரத்தம் கொட்டினால் எப்படி இருக்கும்...!'' —உடம்பைச் சிலிர்த்துக் கொண்டாள் நீரஜா.

''என்கிட்டே சொன்னதுடன் நிறுத்திக் கொள்... தப்பித் தவறிக் கூட உங்க அம்மாவிடம் சொல்லாதே... அவளாலே இதை



யெல்லாம் தாங்கிக்கொள்ள முடியாது...''

''என்னப்பா இதெல்லாம்? ஏதாவது விட்ச்கிராஃப்டாக இருக்குமோ.?''

''எனக்கு எதுவும் புரியவில்லை நீரு... எதற்கும் பயப்படாமல் இரு.. எது நடந்தாலும் என்கிட்டே வந்து சொல்லு. நீயாக அசட்டுத்தனமாக எதுவும் செய்து வைக்காதே... நீ இனிமேல் மாடியிலிருக்கிற பாத்ரூமை யூஸ் பண்ணு... இந்த ரூமை இழுத்துப் பூட்டி விடுகிறேன்... ஓகே?''


''அம்மா காரணம் கேட்பாளே?''

''அதுதான் இருக்கிறதே – ஷாக் சமாசாரம்! அந்தக் காரணத்தையே சொல்லு!''

நீரஜாவுக்கு வழி சொல்லிக் கொடுத்து விட்டுப் பழையபடி பேப்பரை எடுத்து வைத்துக் கொண்டாலும் படித்த செய்திகள் எதுவுமே ஜகந்நாதனின் மனத்தில் பதியவில்லை. அந்த ஷவர், அதில் கொட்டிய ரத்தத் துளிகள்... இவையே நினைவில் மோதின.

பேப்பர் விரித்தபடியே இருக்க, மனம் வேகமாகச் சிந்தித்தது.

அமானுஷ்யமான முறையில் நடக்கும் நிகழ்ச்சிகள் குறித்து அவர் நிறையக்கேள்விப் பட்டிருக்கிறார், படித்துமிருக்கிறார், நம்புவதற்கில்லை என்று சிலவற்றை ஒதுக்கியுமிருக்கிறார். இப்போது இந்த வீட்டில் நடப்பதையும் சிலர் நம்பத்தான் மாட்டார்கள். ஆனால் நடக்கிறதே!

> பம்பாய்த் தெருவில் விற்கப்படும் கருப்பஞ்சாற்றில் இருமிகள் இருப்பதாய்க் கண்டுபிடித்தார்கள். இதைப்பற்றி மக்களை எச்சரிக்கும் வகையில் நகரசபை பேப்பரில் விளம்பரம் செய்தது.
>
> சமீபத்தில் சில ஃபைவ் ஸ்டார் ஓட்டல்களில் அளிக்கப்படும் உணவு வகைகளைச் சோதனை செய்த பொழுது மட்டன்கறி முதலான உணவு வகைகளில் அதே இருமிகள் இருப்பது தெரிய வந்தது.
>
> இதையும் நகரசபை விளம்பரம் செய்யுமா என்று கேட்டு ஒரு வாசகர் ''டைம்ஸ் ஆப் இந்தியா''வில் ஆசிரியருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.
>
> –செம்பூர் சந்துரு
>
> 

இந்த விசித்திரமான பயங்கரங்களுக்கு ஒரு பின்னணி இருக்கத்தான் செய்யும். அதைக் கண்டறிந்தாக வேண்டும்.... எப்படி?

சிறிது நேரம் மூளையைப் போட்டுக் கசக்கியதில், சட்டென்று ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது.

துள்ளியெழுந்து மாடிக்குச் சென்று அலமாரிகளைக் குடைந்து பழைய டயரி ஒன்றைத் தேடியெடுத்தார். அதில் படிந்திருந்த தூசியைத் தட்டினார். சாவகாசமாக அதன் பக்கங்களைப் புரட்டினார்.

பதினைந்து நிமிட நேரத்துக்குப் பிறகு, ஒரு குறிப்பிட்ட பக்கம் வந்ததும் நிதானித்தார்.

அந்தப் பக்கத்தில் ஒரு விலாசம் இருந்தது.

எம். ஆர். சுந்தரேச சர்மா, 18, வேணு நாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை....

6

இருபது வருடங்களுக்கு முன்பு பார்த்த வேணு நாயக்கன் தெரு, ஜாதிப் பெயருடன் தன் பழைய சாயலையும் உதிர்த்துவிட்டு, ஜகந்நாதனைச் சற்றுச் சிரமப்பட வைத்தது. 18–ம் நம்பர் கட்டடத்தில் சாராயக்கடை 'வருக! வருக!' என்று அன்புடன் அழைத்தது.

அக்கம்பக்கம் விசாரித்து, ஒரு வழியாக அதே தெருவின் மறுமுனையிலிருந்த சர்மாவின் வீட்டுக்குப் போன போது, சர்மா மாலை வேளை பூஜைக்காகக் குளிப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

ஜகந்நாதன் படியேறி உள்ளே நுழைந்ததும், சர்மா கண்களை இடுக்கிக்கொண்டு, ''யாரு நீங்க?'' என்று கேட்டார்.

''என் பேரு ஜகந்நாதன்... 63–லே உங்ககிட்டே ஒரு தரம் வந்திருக்கேன்...''

''அப்படியா...? உட்காருங்கோ...''

ஜகந்நாதன் இரும்பு நாற்காலியொன்றில் அமர்ந்தார்.

''சொல்லுங்கோ... என்ன விஷயம்?''

''ஒரு ப்ராப்ளம்,'' என்று தொடங்கி, தமது வீட்டில் கடந்த சில நாட்களில் நடந்த விபரீதங்களை விவரித்தார் ஜகந்நாதன்.

சர்மா குறுக்குக் கேள்விகள் எதுவுமின்றி மொத்த விஷயத்தையும் கேட்டுக் கொண்டார்.

பிறகு, ''அவ்வளவுதானு?'' என்றார்.

ஜகந்நாதன் தலையாட்டினார்.

சர்மா கண்களை மூடி, இரண்டு கைகளையும் கூப்பி வைத்துக் கொண்டார். இணைந்திருந்த இரண்டு கட்டை விரல்களாலும் புருவங்களுக்கு மத்தியில் ஒரு தரம் தொட்டுக் கொண்டார். உதடுகள் எதையோ முணுமுணுத்தன.

ஐந்து நிமிடம் ஓடியது.

கண்ணைத் திறந்தார் சர்மா. லேசான புன்னகையுடன், ''சேஷ்டை!'' என்று ஒரே ஒரு வார்த்தையை உதிர்த்தார்.

''என்ன?''



''சேஷ்டை என்றேன்... ஏதோ ஒரு சக்தி, உங்களுக்கு விளையாட்டுக் காட்டுகிறது!''

''விளையாட்டா?''

''ஆமாம்... அவ்வளவுதான் இப்போதைக்கு என் புத்தியிலே படறது... இன்னும் விவரமாகச் சொல்லணுமென்றால், பூஜையிலே கேட்டுத்தான் சொல்ல முடியும்!''

''எப்போது சொல்வீர்கள்?''

''இன்னிக்கு வேறொரு வேலை வச்சிண்டிருக்கேன்... நாளைக்குத்தான் உங்க விஷயத்தைக் கவனிக்க முடியும்... இதேபோல நாலு மணி வாக்கிலே இங்கே வாருங்களேன்...''

''சரி...''

''உங்க வீட்டைச் சுற்றி மண் தரை இருக்கோ?''

''நிறைய இருக்கு!''

''அங்கேயிருந்து ஒரு பிடி மண் எடுத்து ஒரு பொட்டலமாகக் கட்டிக் கொண்டு வாங்கோ... மறக்கக் கூடாது......''

''மறக்க மாட்டேன்...'' என்ற ஜகந்நாதன், கொஞ்சம் தயங்கினார்.

''இன்னிக்கு ராத்திரியும் ஏதாவது நடந்தால் என்ன பண்றதுன்னு பயப்படறேளா?'' என்று அவரது மனத்தைப் புரிந்து கொண்டு கேட்டார் சர்மா.

''ஆமாம்......''

''எது நடந்தாலும் பதிலுக்கு நீங்க எதுவும் செய்யாதிங்கோ.. அதாவது டார்ச் அடித்துப் பார்க்கிற மாதிரி...''

''சரி...''

''கவலைப்படாமல் போய்ட்டு வாங்கோ.''

7

சர்மாவிடம் சென்று வந்ததில் ஜகந்நாதனுக்கு ஓரளவு நிம்மதியாக இருந்தது. அன்றிரவு என்ன நடந்தாலும் கவலைப்படுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டார்.

முந்தைய நாட்களைப் போலவே அன்றிரவும் நடுத் தூக்கத்தில் விழித்துக் கொண்டார். விழித்த பிறகே, 'தூக்க மாத்திரை போட்டுக் கொண்டிருக்கலாமோ' என்று தோன்றியது.

கண்மூடிப் படுத்திருந்தார்.

முகத்தில் குளிர்க் காற்று வீசியது.

''வெளியே போடா திருட்டு நாயே!''

காதுக்கு அருகே ஆக்ரோஷமான குரல் கேட்டது.

மகிழம்பூ மணம் பரவத் தொடங்கி, அதிகரித்து, குறைந்தது.

அதைத் தொடர்ந்து குடலைக் குமட்டும் துர்நாற்றம் வீசத் தொடங்கியது.

மூச்சை இறுகப் பிடித்துக் கொண்டார். முடிந்த வரையில் தாக்குப் பிடித்தார்.

'இனி தாங்காது' என்ற நிலைமை வந்ததுடன், அடக்கி வைத்த மூச்சை அவசரமாக வெளியேற்றி, அதே வேகத்தில் காற்றை உள்ளுக்கு இழுத்தார்.

அந்த நாற்றம் இன்னும் அடர்த்தியாக வந்து தாக்கியது.

மறுபடியும் 'தம்' பிடித்தார்.

அப்போது தான் தலைமாட்டில் 'ஸ்ளீர்' என்று ஓசை கேட்டது... கண்ணாடிப் பாத்திரம் தரையில் விழுந்து நொறுங்கியமாதிரி.

கண்ணைத் திறந்து பார்க்க வேண்டும் போல ஆவல் எழுந்தாலும், அடக்கிக் கொண்டார்.

அடுத்தபடி, டிரஸ்ஸிங் டேபிள் அருகே 'டொக்... டொக்... டொக்... டொக்...' என்று சத்தம்.

ஜகந்நாதன் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக இருந்தார் — அவரையறியாமலே தூக்கத்தில் ஆழ்ந்து போகும் வரையில்.

8

''மணி ஏழரையாகப் போகிறது... இன்னும் என்ன தூக்கம்? எழுந்திருங்கள், சொல்கிறேன்!'' என்ற மைதிலியின் குரல் தான் அவரை எழுப்பியது.

எழுந்ததும், அவரது பார்வை தலைமாட்டு பக்கம்தான் சென்றது.

''இனிமேல் ராத்திரியில் எழுந்து நடமாடுவதென்றால் விளக்கைப் போட்டுக் கொள்ளுங்கள், இருட்டிலே இடறித் தினமும் ஒரு பிளாஸ்கை உடைப்பதென்றால் கட்டுப்படியாகாது!'' என்ற மைதிலி, குறும்புச் சிரிப்புடன் அவரைப் பார்த்தாள்.

முதல்நாளிரவு என்ன நடந்திருக்கிறதென்று புரிந்து கொண்டார் ஜகந்நாதன்.


''காலையிலே எழுந்து கதவைத் திறக்கலாமென்று போகிறேன், பிளாஸ்க் தரையிலே நொறுங்கிக் கிடக்கிறது... அது சரி,

● லாகூர் குதிரைப் பந்தயத்தில் ஓடும் ஒரு குதிரையின் பெயர் ''Excuse Me!''

● 1987—ம் வருடத்தை வீடு இல்லாதவர் ஆண்டாகக் கொண்டாட ஐ.நா. சபை முடிவு எடுத்துள்ளது.

● சென்ற ஆண்டு எர்ணாகுளத்தில் தந்தையும் மகனும் ஒரே சமயத்தில் எஸ். எஸ். எல். ஸி. தேர்வு எழுதி வெற்றி பெற்றிருக்கின்றனர். தந்தை பெயர் பவித்ரன், ராணுவத்தில் பணி புரிந்து ஓய்வு பெற்றவர். மகன் பெயர் அனில்குமார்.

—நடேஷ்கண்ணா.





பிளாஸ்கை உடைத்தீர்களே, அது அப்படியேதான் தரையிலே கிடக்க வேண்டுமா?... எடுத்து ஒரு ஓரமாக வைக்கக் கூடாதா?... வரவர உங்களுக்குச் சோம்பேறித்தனம்தான் அதிகமாகிக் கொண்டு வருகிறது....'' என்று மைதிலி அபாண்டமாகக் குற்றம் சாட்டிய போது ஜகந்நாதன் ''ஐ யாம் ஸாரி மைதிலி!'' என்றுதான் பதில் சொல்ல முடிந்தது.

மைதிலி கீழே போனதும், அட்டாச்ட்—பாத்ரூமுக்குள் சென்று பல் தேய்த்து முகம் கழுவிக் கொண்டார். சிறிய துண்டால் முகத்தை ஒத்தியபடியே டிரெஸ்ஸிங் டேபிள் எதிரே வந்தவர் திகைத்துப் போனார்.

அங்கிருந்த 'ஓவல்' வடிவக் கண்ணாடியில் சரிபாதி அளவுக்குப் பூசி மெழுகப்பட்டிருந்தது — செக்கச் செவேலென்று.

சுட்டு விரலினால் அந்தச் சிவப்பைத் தொட்டுப் பார்த்தார். பிசுக்கென்று கையில் ஒட்டியது.

'பெயிண்டா... அல்லது... ரத்தமா...?'


உடம்பைச் சிலிர்த்துக் கொண்டார்.

நல்லவேளை, மைதிலி இதைப் பார்க்கவில்லை போலிருக்கிறது... பார்த்தால் மயக்கம் போட்டு விழுந்திருப்பாள்....

திருப்பதியில் சர்வ தரிசன க்யூவில் நிற்பவர்களுக்கு தேவஸ்தானம் நிறைய வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது. உட்கார இடம், பால், காப்பி, பலகாரங்கள் சாப்பிடக்கடைகள், டாய்லெட்டுகள், முதலிய பல வசதிகள் உள்ளன. இதைத் தவிர பொரிகடலை பிஸ்கட், சாக்லேட் விற்பவர்கள், புத்தகம், படம் விற்பவர்கள் உங்களைச் சுற்றிச் சுற்றி வருவார்கள்.

இந்தக் கூட்டத்தில் ஒருவர் மிகவும் சாமர்த்தியமாகப் பிழைப்பு நடத்துகிறார். ஸ்ரீசூர்ணம், நாமக்கட்டி, குச்சி இவைகளை எடுத்துக் கொண்டு அவரவர்க்குத் தகுந்தவாறு தென் கலை, வடகலை, நாமம், திலகம் முதலியவைகளைச் சாற்றி, பத்து, பதினைந்து பைசா வசூலித்துப் பிழைப்பு நடத்துகிறார். ஒரு சமயோசிதமான பிழைப்பு அல்லவா இந்த நாமம் சாத்தும் பிழைப்பு!

—பி. வர்ஷா



அவள் பார்ப்பதற்கு முன்பு ஏதாவது செய்தாக வேண்டும்.

பாத்ரூமுக்குள் சென்று கையிலிருந்த துண்டைத் தண்ணீரில் நனைத்து எடுத்து வந்தார். கூடவே, பிளாஸ்டிக் வாளி நிறையத் தண்ணீர்.

துண்டினால் கண்ணாடியின் மேல்பரப்பை அவசரமாக — அதேசமயம் அழுத்தமாக— துடைத்தார்.

அந்தச் சிவப்பு லேசில் மறைவதாகக் காணோம். வாளியில் துண்டை நனைத்து நனைத்து, துடைத்துத் துடைத்து.......

இருபது நிமிடங்களில் ஒரு வழியாக வேலை முடிந்தது. அப்படியும் கண்ணாடியில் லேசான சிவப்பில் பட்டைகள் தெரிந்தன.

'பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று கீழே இறங்கி வந்தார்.

9

சாப்பாட்டுக்குப் பிறகு மைதிலி தன் உறவுக்காரர்களைப் பார்ப்பதற்கென்று வேளச்சேரிக்குப் போய்விட்டாள்.

பிள்ளைகள் வேலைக்கும், பெண் நீரஜா கல்லூரிக்கும் போய் விட்டிருக்கவே, வீட்டில் ஜகந்நாதனைத் தவிர வேலைக்காரன் பட்டுமே இருந்தான்.

பங்களாவின் காம்பவுண்ட் சுவரை ஒட்டி, வரிசையாகப் பூச்செடிகள்... குட்டைக் குட்டையாக நான்கு மரங்கள்.

வேலைக்காரனை அழைத்து, மரங்களைச் சுற்றித் தண்ணீர் ஊற்றுவதற்கு வசதியாகப் பள்ளம் பறிக்கச் சொன்னார். அவன் செய்து முடித்ததும், திரண்டிருந்த மண்ணில் ஒரு கைப்பிடியளவு எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டார்.

அன்று மாலை சர்மாவைச் சந்தித்து, மண் நிரம்பிய பிளாஸ்டிக் கவரை அவரிடம் கொடுத்தார் ஜகந்நாதன்.

முதல்நாளிரவு பிளாஸ்க் உடைந்து நொறுக்கப்பட்டதையும் கண்ணாடியில் ரத்தம் காணப்பட்டதையும் கூறினார்.

''அதான் சொன்னேனே — க்ஷேமம்தான்! தைரியத்தை இழந்து விடாதீர்கள்!'' என்றார் சர்மா.

''தினமும் இப்படித் தொடர்ந்து ஏதாவது நடந்து கொண்டேயிருந்தால் எப்பேர்ப்பட்ட தைரியசாலிக்கும் பயம் வந்து விடுமே...? இதையெல்லாம் நிறுத்துவதற்கு வழியே இல்லையா?... எதனால் இப்படியெல்லாம் நடக்கிறது?' என்று படபடப்புடன் கேட்டார் ஜகந்நாதன்.

''அதைக் கண்டுபிடிக்கத்தான் இது உதவப் போகிறது!'' என்று கையிலிருந்த கவரைத் தட்டிக் காட்டினார் சர்மா.

''நீங்கள் பூஜையை முடிக்கும் வரையில் இங்கேயே இருக்கட்டுமா?''

''மூன்று மணி நேரம் ஆகுமே! வேணுமானால் எங்கேயாவது வெளியிலே போயிட்டு வாங்கோ... ராத்திரி ஒன்பது மணிக்கு வந்தாப் போறும்!''

ஜகந்நாதன் கடிகாரத்தைப் பார்த்தார். 4.50.

இந்தியாவின் தலை சிறந்த வயலின் மாமேதை

பத்மஸ்ரீ லால்குடி ஜயராமனின்

வயலின் இன்னிசையை "பல்லவி" கேஸட்டுகளில் கேட்டு மகிழுங்கள்

பத்மஸ்ரீ லால்குடி
G. ஜயராமன் — வயலின்
லால்குடி
G.J.R. கிருஷ்ணன் — வயலின்
காரைக்குடி
ஸ்ரீ R. மணி — மிருதங்கம்
ஸ்ரீ T.H. விநாயகராம் — கடம்



ADWAVE PC 2517

லால்குடி ஜயராமன்

கச்சேரி ஸெட்

3 கேஸட்டுகள் கொண்டது.

ஆல்பம்–1 (C-60) Side-A

வர்ணம்—வலஜ்
வந்தேஹம்—ஹம்ஸத்வனி
ஏடி யோசன—கீரவாணி

SIDE—B

சுஜன ஜீவனா—கமாஸ்
சங்கரி சங்குரு—ஸாவேரி

ஆல்பம்–2 (C-60) Side-A

மருகேலரா—ஜயந்தஸ்ரீ
மாரவைரி—நாஸிகா பூஷணி
பாலகோபால—பைரவி

SIDE—B

பாலகோபால — Cont'd.
சின்னஞ்சிறு கிளியே—
ராகமாலிகை
தில்லானா—மதுவந்தி

ஆல்பம்–3 (C-45) Side A & B


ராகம்—ஸிம்மேந்திரமத்யமம்
தானம்—பல்லவி—
ஸ்வர ராகமாலிகை

A.V.M.ல் Record செய்யப்பட்டது.

Contact:

பல்லவி காஸெட்ஸ்,
56, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

Cassettes available with all AVM Dealers.


ஒரு சாதாரண டிட்டர்ஜெண்ட்
சலவை கட்டியை விட
எடையோ இரண்டு மடங்கு
விலேயோ
சிலகாசுகள்தான் அதிகம்
அதிகப்படியான சலவை செய்யும் டிட்டர்ஜெண்ட் கட்டிகள்
சிக்கன முறையில் சலவை செய்யும் சோப் பார்கள்.
நிகரமான எடை 300 கிராம்கள்
டோட்டல்
நீலநிற டிட்டர்ஜெண்ட் பார்
Total
BLUE DETERGENT BAR
எளிதான சலவைக் கேற்ற ஐந்து பகுதிகளைக் கொண்டது
தரமான தயாரிப்பினை வழங்குவோர்:
கர்நாடக சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட்ஸ் லிமிடெட்
பெங்களூர்
விற்பனை செய்வோர்:
மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட் பெங்களூர்
MCA/TDB/82/TAM-R



சர்மாவிடம் ஒன்பது மணிக்கு வருவதாகச் சொல்லி விட்டு மெதுவாக நடந்து மவுண்ட் ரோடுக்கு வந்தார்.

காஸினேவில் மூன்றாவது வாரமாக ஓர் ஆங்கிலப் படம். அதிகக் கும்பலில்லை. டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே போய் உட்கார்ந்தார்.

படம் முடிந்த போது நேரம் 8.50.

ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டு சர்மாவிடம் போனார்.

சர்மா பூஜையை முடித்து விட்டிருந்தார். ஜகந்நாதனைக் கண்டதும் அவரது சுருக்கம் விழுந்த முகத்தில் மலர்ச்சி தோன்றியது.

''நான் சொன்னதே தான் சுவாமி! நீங்க வீடு வாங்கறதுக்கு முன்னாலே அதைப் பத்திக் கொஞ்சம் விசாரிச்சிருக்கணும்... அங்கே ஏதோ தப்புக் காரியம் நடந்திருக்கு... அதிலே சம்பந்தப்பட்டவருக்குச் சொந்தமான ஒரு வஸ்து அந்த வீட்டிலே இருக்கு... அதைக் கண்டுபிடிச்சு அப்புறப் படுத்தி விட்டால், இந்த விஷமம் நின்னு போயிடும்!'' என்றார் நிதானமாக.

ஜகந்நாதன் யோசித்தார். கேட்டார்:

''வஸ்து ஏதோ இருப்பதாகச் சொன்னீர்களே... அது என்ன? எங்கே இருக்கிறது? அதையும் சொல்லி விடுங்களேன்!''

சர்மா சிரித்தார்.

''பூஜையிலே எனக்குத் தெரிய வந்ததை அப்படியே உங்ககிட்டே சொன்னேன்... அதுக்கு மேலே ஏதுவும் தெரியல்லே சுவாமி... நீங்களாகவேதான் யோசிச்சுப் பார்க்கணும்...! அதுக்கும் ஒரு சுலபமான வழி இருக்கே! உங்களுக்குச் சொந்தமில்லாத ஏதானும் ஒண்ணு — ஒரு பொருள்— அந்த வீட்டிலே இருக்கிறதாக உங்க மனசிலே பட்டால், அதை எடுத்துண்டு போய், கலேயைச் சுத்தி, சமுத்திரத்திலே வீசியெறிஞ்சுட்டு வந்துடுங்களேன்!''

''எந்தப் பொருள்? எப்படிக் கண்டுபிடிக்கிறது? எங்கே என்று தேடுவேன்? ரொம்ப சிரமமாச்சே!''

''சிரமம்தான்! ஆனால் முயற்சி பண்ணினால் கட்டாயம் கிடைக்கும்னு தோணறது.. என் புத்தியிலே அப்படித்தான் படறது!''

''அதுசரி, அந்த மாதிரி ஒரு பொருளை நான் கண்டுபிடிச்சுத் தூக்கி எறிகிற வரைக்கும் விபரீதங்கள் நடந்து கொண்டிருக்குமே! அதை நிறுத்துவதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்!''

சர்மா பக்கத்திலிருந்த குட்டி மேசையில் தயாராக வைத்திருந்த காகிதப் பொட்டலம் ஒன்றை எடுத்து நீட்டினார்.

''இதிலே குங்குமப் பிரசாதம் வச்சிருக்கேன்... தினமும் குளிச்சிட்டு இட்டுக்குங்கோ... வீட்டிலேயும் எல்லாரையும் இட்டுக் கொள்ளச் சொல்லுங்கோ... விஷமத்தோட பாதிப்பு அதிகம் இருக்காது...''

சர்மாவுக்குப் பணம் தந்தால் வாங்க மாட்டாரென்பது ஜகந்நாதனுக்குத் தெரியும். எனவே, தரையில் விழுந்து நமஸ்காரம் செய்து விட்டு ஆட்டோவிலேயே வீடு வந்து சேர்ந்தார்.

இனியும் மைதிலியிடம் ஒளிப்பதற்கில்லை என்பதனால் அன்றிரவு அவளிடம் எல்லாவற்றையும் எடுத்துக் கூறினார் ஜகந்நாதன். ஷவர் பாத் விஷயம் மைதிலியை உலுக்கிவிட்டது.

''நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன் மைதிலி... நாம யாரும் தனித்தனியே படுக்க வேண்டாம்... நீ, நான், அருண், பரத், நீரஜா எல்லாருமே மாடி ஹாலில் வரிசையாகப் படுத்துக் கொண்டு விடுவோம்...'' என்றார்.

அதன்படியே அன்றிரவு படுத்துக் கொண்டார்கள்.

இரவில் தொந்தரவின்றித் தூங்கினார் ஜகந்நாதன்.

மறுநாள் மாடியில் அவரது பெட்ரூமுக்குச் சென்று பார்த்த போது இரட்டைக்கட்டில் தலைகீழாகப் புரண்டு கிடந்தது.

அதற்கடுத்த நாள் இரும்பு பீரோவின் கண்ணாடி நொறுக்கப்பட்டிருந்தது.

இன்னொரு நாள் ஸ்டோர் ரூமின் ஜன்னல் கதவுகளில் ஒன்று சுழன்று தொங்கியது.

ஜகந்நாதன் தீவிரமானார். இத்தனைக்கும் தினமும் வீட்டின் ஒவ்வொரு பகுதியாக

நோபல் பரிசு பெற்ற சந்திரசேகர் சில வருடங்களுக்கு முன் மனைவியுடன் தாயகம் வந்திருந்த பொழுது ஒருவியத்தகு செயலைச் செய்தார். வங்கி லாக்கரில் வைத்திருந்த திருமதி சந்திரசேகரின் நகைகள் அனைத்தையும் எடுத்து நெருங்கிய குடும்ப நண்பர் ஒருவரிடம் கொடுத்து, தங்கள் உறவினர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு ஆபரணத்தை அளித்துவிடும் பொறுப்பை ஒப்படைத்தார்.

சந்திரசேகரின் உறவினர்களுக்கு இன்ப அதிர்ச்சி, நெக்லஸ், வளை, மோதிரம் தோடு என்று தங்களைத் தேடி வந்த ஆபரணங்களை ஒவ்வொருவரும்பெற்றுக் கொண்டனர். பட்டுவாடா செய்த பெண்மணிக்குப் பரிசு ஒரு பெரிய வெள்ளிக் கிண்ணம்!

இத்தகவலை அறிய வந்தபோது, பத்திரிகை பேட்டி ஒன்றில் தாம் இந்து மதத்தைப் பின்பற்றாவிட்டாலும் அம் மதம் உணர்த்தும் வானப்ரஸ்தாச்ரமத்தால் ஈர்க்கப் படுவதாக சந்திரசேகர் கூறியுள்ளது நினைவு வந்தது.

—ஸ்ரீதாரவி.





...ஆராய்ந்து கொண்டுதான் இருந்தார். தமக்குச் சம்பந்தமில்லாத எந்தப் பொருளாவது கண்ணில் தட்டுப் படாதா என்று அங்குலம் அங்குலமாகத் தடவிக் கொண்டிருந்தார்.

10

அன்று டெலிபோன் இலாகாவிலிருந்து ஆட்கள் வந்திருந்தார்கள். போனை எங்கே வைக்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் போது, சமையலறையிலிருந்து மைதிலி அழைத்தாள்.

டாக்டர் சிற்சபை முதன்முதலாகச் சென்னையில் ஏற்படுத்திய படுக்கை வசதியுடைய இயற்கை மருத்துவமனையில் தலைமை உரை நிகழ்த்திய சட்டமன்றத் தலைவர் ராஜாராம், ''பெரியார் எல்லாவற்றையும் சாப்பிட்டு 95 ஆண்டுக்காலம் வாழ்ந்தார். உணவுக் கட்டுப்பாட்டுடன் ராஜாஜி 92 வயது தான் வாழ்ந்தார்.'' என்று தம் தலைவர் புகழ் பாடினார்! ராஜாஜி காலமானபோது அவருக்கு வயது 94. மேலும் அதிக காலம் உயிரோடு வாழ்வது பெரிதல்ல. நோயற்று வாழ்வது தான் வாழ்வு. பெரியார் பலவித நோய்களுடன் போராடினார். ராஜாஜியோ தம் கடைசிக் காலம்வரை திடமாக வாழ்ந்தார்.

—சித.வைரவன்.



''ஒரு நிமிஷம் இங்கே வந்துவிட்டுப்போங்களேன்!

ஜகந்நாதன் போனார். மைதிலி சமையலறையில் இருந்த அம்மிக்கல்லை அப்புறப்படுத்த முயன்று கொண்டிருந்தாள்.

''ஒரு கை பிடியுங்களேன்... இதை நகர்த்தி ஓர் ஓரமாகப் போட்டு விடலாம்... உபயோகமில்லாமல் காலிலே இடறிக் கொண்டே இருக்கிறது!''

''நீ எதற்கு இதையெல்லாம் செய்கிறாய்? நம்ம பையன்கள் கிட்டே சொன்னால் நிமிஷத்தில் தூக்கிப் போட்டு விடுவார்களே!'' என்றபடியே தரையில் அமர்ந்து அம்மியை நகர்த்த முயன்றார்.

சிறிய அம்மிதான். இருந்தாலும் அசைந்து கொடுக்கவில்லை. கவனித்ததில், தரையுடன் சிமெண்ட் வைத்துப் பூசப்பட்டிருந்தது தெரிய வந்தது!

டெலிபோன் ஆசாமிகளிடமிருந்து ஜம்ப்பர், சுத்தியலை வாங்கி வந்து, சிமெண்ட் பூச்சைப் பெயர்த்தார் ஜகந்நாதன்.

ஏகப்பட்ட வியர்வை செலவான பிறகு அம்மி லேசாக அசைந்து கொடுத்தது. மைதிலி ஒரு பக்கம் பிடிக்க, மறுபக்கம் இவர் தமது வலுவைப் பிரயோகிக்க, அம்மியை ஒருவழியாக நகர்த்தியதும் தரையில் நீண்ட சதுரமாக ஓர் இரும்புத் தகடு தெரிந்தது.

''அட! இதென்ன!'' என்று மைதிலி வியந்து நிற்கையில், சுத்தியலால் அதன்மீது ஓங்கி ஒரு போடு போட்டார்.

தகடு வாய் பிளந்த மறுகணம், ஜகந்நாதனும் மைதிலியும் வியப்பினால் வாய் பிளந்தார்கள்.

11

அடுத்து வந்த ஞாயிற்றுக்கிழமை. தன் குடும்பத்தினரிடம், ''ஒரு சுவாரசியமான கதை சொல்கிறேன், கேட்கிறீர்களா?'' என்று கேட்டு விட்டுச் சொல்லத் தொடங்கினார் ஜகந்நாதன்.

''அருணாசலம், சாமிநாதன் என்று இரண்டு பேர் கூட்டாகச் சேர்ந்து பிஸினஸ் பண்ணி வந்தார்கள். நல்ல லாபமும் வந்தது. அருணாசலம், வியாபார விஷயமாக வெளியில் சுற்றிக் கொண்டே இருப்பார். சாமிநாதன் ஆபீசில் தங்கிக் கவனித்துக் கொள்வார். ஒருவர் பேரில் ஒருவருக்கு நம்பிக்கை இருந்தது... ஆனால் சாமிநாதன் ஒரு காரியம் செய்தார். அருணாசலத்துக்குத் தெரியாமல் சில லட்சங்களை விழுங்கி விட்டார்... பணமாக வைத்துக் கொள்ளாமல் அத்தனைக்கும் தங்கக் கட்டிகளாக மாற்றி எங்கோ பதுக்கி விட்டார்.

''நண்பரின் மோசடி தெரிய வந்ததும், அருணாசலம் கொதிப்படைந்தார். இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், சாமிநாதனைப் பழி வாங்க ஒரு நல்ல சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தார்.

''சாமிநாதனுக்குப் பெண்—சபலம் அதிகம். அது தெரிந்த அருணாசலம் ஒரு பெண்ணை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்... வலையில் வசமாகச் சிக்கினார் சாமிநாதன்... ஒரு சமயம் அவர் போதையிலிருந்தபோது, அவரது எல்லா சொத்துக்களையும் — பங்களா உட்பட — தன் பெயருக்கு எழுதி வாங்கி விட்டாள் அந்தப் பெண்... தலைக்கு மேல் வெள்ளம் போன பிறகே விழித்துக் கொண்டார் சாமிநாதன்... அதேசமயம் வியாபாரத்திலிருந்தும் அவரைக் கழற்றி விட்டு விட்டார் அருணாசலம்... சொத்தெல்லாம் பறிபோய் நடுத்தெருவுக்கு வந்துவிட்ட சாமிநாதன், கடைசியில் தமது பங்களாவுக்குள்ளேயே



திருட்டுத்தனமாக நுழைந்து, மரத்தில் தூக்கு மாட்டிக் கொண்டு செத்துப்போனார்.

''சாமிநாதனைப் பழி தீர்த்துக் கொண்ட திருப்தி கிடைத்தது அருணாசலத்துக்கு. சாமிநாதனிடமிருந்து பெறப்பட்ட பங்களாவை, அந்தப் பெண்ணுக்குப் பணம் கொடுத்துத் தாமே வாங்கிக் கொண்டு அதில் குடியேறினார். ஆனால் அவரால் அங்கே நிம்மதியாக இருக்க முடியவில்லை. அந்தப் பங்களாவில் விபரீதங்கள் நிகழ்ந்த வண்ணமிருந்தன... உண்மையைச் சொல்லப் போனால் சாமிநாதனின் ஆவி, தன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தது.... அந்தப் பங்களாவில் தான் ஒளித்து வைத்த செல்வம், அருணாசலத்தின் கையில் சிக்கி விடக் கூடாது என்பதற்காக, சாமிநாதனின் ஆவி பாடாய்ப் படுத்தி வந்தது.

''ஆளை விட்டால் போதுமென்று அருணாசலம் பங்களாவை விற்று விட்டுப்போனார்... விவரம் தெரியாமல் வாங்கிய புது ஆசாமியிடமும் ஆவி விளையாடியது. பயமுறுத்தியது...... அதைத்தான் நாமெல்லோரும் கொஞ்சநாள் அனுபவிக்க நேர்ந்தது... தக்க சமயத்தில் சர்மாதான் வழிகாட்டினார்.... சாமிநாதனால் வைக்கப்பட்ட பொருளைக் கண்டுபிடித்துக் கடலில் வீசிவிடச் சொன்னார்... அதன்படியே செய்ததில், நம் பிரச்னை தீர்ந்தது...''

முடித்தார்.

அருண் கேட்டான். ''தங்கக் கட்டிகளையா கடலில் வீசினீர்கள்... எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?''

''கிரெடிட் உங்க அம்மாவுக்குத்தான் சேர வேண்டும். அவள்தான் சமையலறையில் அம்மிக் கல்லை நகர்த்திப் போடச் சொன்னாள். அம்மிக்குக் கீழே ஒரு பள்ளத்தில் தங்கக் கட்டிகள் பதுக்கி வைக்கப் பட்டிருந்தன... அதுதான் சாமிநாதனின் சொத்து!''

''அது சரி, உங்களுக்கு யார் இந்தக் கதை பூராவும் சொன்னது?'' —நீரஜா கேட்டாள்.

''யாருக்கு முழு விவரமும் தெரியும்! அருணாசலத்துக்குத்தானே! அவர் தான் சொன்னார்!''

''அவரை நீங்கள் எப்படிச் சந்தித்தீர்கள்?''

''புரோக்கர் ஞானமூர்த்தியைப் பிடித்து உலுக்கினேன். அவர்தான் அருணாசலத்திடம் அழைத்துப் போனார்!''

''இந்த வீட்டுக்காரர் வடக்கே எங்கோ போய்விடப் போவதாக அல்லவா புரோக்கர் நம்மிடம் சொல்லியிருந்தார்?' என்று கேட்டாள் மைதிலி.

''அது அருணாசலமே சொன்ன பொய்... புரோக்கருக்கு இந்தத் தகராறெல்லாம் எதுவுமே தெரியாது... நான் புரோக்கரை நம்பியது போல, அவர் அருணாசலத்தை நம்பியிருக்கிறார்... நான் போய் ஞானமூர்த்தியைக் கடிந்து கொண்டதும், 'எதற்கும் அருணாசலத்தைப் பழைய விலாசத்தில் தேடிப் பார்க்கலாம்' என்று என்னை அழைத்துப் போனார்... அருணாசலம் அகப்பட்டுக் கொண்டார்... நான் கஸ்டம்ஸ் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவன் என்ற தகவலைச் சொல்லி, தங்கக் கட்டிகள் பற்றிய உண்மையைக் கூற விட்டால் என்ன நடக்கும் என்று அருணாசலத்தைப் பயமுறுத்தினேன்... முழுக்கதையும் வெளியிலே வந்து விட்டது!''

''என்ன இருந்தாலும் நீங்கள் அந்தத் தங்கக் கட்டிகளைக் கடலில் வீசியிருக்கக் கூடாது...'' என்று ஆட்சேபித்தான் பரத். ''பெரிய அதிகாரியாக இருந்த நீங்களே இப்படி ஒரு மூடநம்பிக்கைக்குப் பலியாகலாமா?''

''முதலில் நான் சாதாரண மனிதன். அப்புறம் தான் அதிகாரி. மூடநம்பிக்கை, பயித்தியக்காரத்தனம், சீ—என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள்.... சர்மா சொன்னபடி செய்த பிறகு தானே இந்த வீட்டில் நிகழ்ந்து வந்த விபரீதங்கள் ஒரு முடிவுக்கு வந்தன... அது வரையில் நிற்கவில்லையே! இதற்கு என்ன சொல்கிறீர்கள்?''

ஜகந்நாதன் கேட்ட கேள்விக்கு யாரும் பதில் சொல்ல முற்படவில்லை.

ஒருவன் பூமியில் இருக்கையில் புல்லையும் வானுற ஓங்கிய தேவதாரு மரத்தையும் கண்டு ''இந்த மரம் எவ்வளவு பெரியது, புல் எவ்வளவு சிறியது'' என்கிறான். ஆனால் அவன் ஒரு மலை மீதேறி உச்சியிலிருந்து கீழே நோக்கும் போது, பெரிய தேவதாரு மரமும் சிறிய புல்லும் ஒருங்கே உருத் தெரியாத பச்சைப் பொட்டாகத் தோன்றுவதைக் காண்கிறான். அது போல உலகப் பற்றுள்ளவர்களுடைய பார்வைக்கு ஒருவன் அரசனென்றும் மற்றொருவன் பணியாள் என்றும், ஒருவன் தகப்பனென்றும், மற்றொருவன் மகனென்றும், ஸ்தான பேதங்களும் அந்தஸ்து வித்தியாசங்களும் தோன்றும். ஆனால் தெய்வ தரிசனம் பெற்ற பிற்பாடு எல்லாம் ஒரே விதமாய்த் தோன்றும்.

(ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேச மொழிகளிலிருந்து)

—மணவை உ. அசோக் பாபு





✲ கிரிக்கெட் டெஸ்ட்களில் இப்போது விளையாடும் விளையாட்டு வீரர்களுக்கு ஒரு டெஸ்டுக்குத் தரப்படும் தொகை ரூபாய் 10,600.

பாலி உம்ரிகார், பாபு நாட்கர்னி போன்ற விளையாட்டு வீரர்கள் விளையாடியபோது அவர்களுக்குத் தரப்பட்ட தொகை ஒரு டெஸ்டுக்கு 250 ரூபாய் தான்!

—கோபஞ்சு.

ரஸத் துளிகள்



✲ ஏன் அந்த பேட்ஸ்மனுக்குஎல்லாருமா சேர்ந்து ''பாலிஷ்'' போடறாங்க?
—இந்த சிரீஸ் அவரு நல்லா ஷைன் பண்ணணும்னுதான்!

✲ கிரிக்கெட் விளையாட்டுல ''தருமரோட'' தம்பி யாரு?
—''பீமர்''தான்.

✲ அங்கே என்ன அது, ஸ்டம்புக்குப் பின்னால ஒரு ''கட்டில்?''
—அதுதான் காட் பிஹைண்ட் தி விக்கெட்!

✲ மைதானத்துல இருக்கற சைடு ஸ்கிரீனை ஏன் அடிக்கடி தள்ளறாங்க!
—அதற்குச் சக்கரம் இருக்கே, அதனாலதான்!

✲ ஓபனிங் பேர் யாருங்க?
—ஆதாம்—ஏவாள்!

—வெ. சீதாராமன்.



கவாஸ்கர் இதுவரை விளையாடிய டெஸ்டுகளின் முக்கிய கட்டங்களில் எடுக்கப்பட்ட வீடியோ பிலிமின் தொகுப்புக்கள் இப்போது பம்பாய் வீடியோ தியேட்டர்களில் ஓடிக் கொண்டிருக்கின்றன. கட்டணம் எவ்வளவு தெரியுமா? அதிகமாக இல்லை. இரண்டு மணி நேரக் காட்சிக்கு நாற்பதே ரூபாய்தான்! (குறைந்த பட்சம்). 'அட இவ்வளவு கொடுத்து எவன் பார்ப்பான்' என்கிறீர்களா? அதை ஏன் கேட்கிறீர்கள், இதற்கும் கியூ, ரிசர்வேஷன் என்று நிரம்பி வழிகிறது.

''ஆர். சிவா.''



✲ மேற்கிந்தியத் தீவுக் குழுவின் இன்றைய மானேஜர் ஹால் அன்று அதிபயங்கரப் பந்து வீச்சாளர். இவர் 1958—ம் வருஷம் ஐந்து டெஸ்ட் பந்தயங்களில் 30 இந்திய விக்கெட்களைப் பறித்திருக்கிறார்.

—எம்.



✲ மேற்கிந்தியத் தீவு குழுவின் விரைவுப் பந்து வீச்சாளர் ராபர்ட்ஸ் ''சூறாவளி'' என்று வர்ணிக்கப்படுபவர். இவர் மீனவர் குடும்பத்தில் பதினாறு புதல்வர்களில் ஒருவராகப் பிறந்தவர்.

—எம்.

✲ 1948-ம் வருஷம் மேற்கிந்தியத்தீவு குழுவின் காப்டன் ஜே. டி. கோத்தார்டு ஐந்து டெஸ்ட் பந்தயங்களிலும் 'பூவா தலையா' சோதனையில் வெற்றி பெற்றிருக்கிறார்.

—எம்.



இந்தியாவின் ஸ்பின் பௌலர் பி. எஸ். சந்திரசேகர், டெஸ்ட் மாட்சுகளில் மிகவும் அதிகமான '0' எடுத்தவர். இவர் 24 தடவைகள் '0' எடுத்தார். இதில் நான்கு முறை இரண்டு இன்னிங்ஸிலும் '0' ஒருமுறை இரண்டு இன்னிங்ஸிலும் முதல் பந்தில் அவுட் ஆகி 'கிங் பேர்' (King Pair) என்ற அரிய பட்டத்தையும் தட்டிக் கொண்டார். இது ஒரு உலகரிகார்ட்!

மஞ்சுதேவன்.



✲ மேற்கிந்தியத் தீவுக் குழுவின் காப்டன் லாயிட் நாற்பது ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர். அவர் இந்தியாவுக்கெதிராகத் தான்முதல்தடவையாக 1966-ம் வருஷம் டெஸ்ட் பந்தயம் ஆடினார். முதல் டெஸ்டிலே அவர் எடுத்த ஸ்கோர் 82, 78 நாட் அவுட்! இவர் இடது கை பாட்ஸ்மன்; ஆனால் பந்து வீச்சோ வலது கையினால்! மீடியம் பந்து வீச்சுக்காரர். 'கவர்'ஸில் ஃபீல்ட் செய்வதில் நிபுணர்.

அடிக்கடி 'ரிஸ்க்' எடுத்து விக்கெட்டைக் கோட்டை விடுபவர். அத்தருணங்களில் மைதானத்தை விட்டு வெளியேறும் போது தலையை ஆட்டிக் கொண்டே, தோள்களைக் கூனிக் குறுகி, தம்மைத்தாமே திட்டிக் கொள்பவராகச் செல்வது வழக்கம். ஜியார்ஜ் டவுனில் இவர் குமாஸ்தாவாக உத்தியோகத்தைத் தொடங்கியவர்!

—எம்.

✲ மழையால் ஆட்டம் நின்றது என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். பறவைகள் விளையாட்டை நிறுத்தியதைக்கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இங்கிலாந்தில் நடந்த ஒரு கௌன்டி மேட்சின் போது மைதானத்தில் நிறையப் பறவைகள் வந்து இறங்கி ஆட்டம் நடக்க விடாமல் இடையூறு செய்தன. ஆட்டத்தைச் சற்று நேரம் நிறுத்த நேரிட்டது.

ஆதாரம்: ''தி கில்லெட் புக் ஆஃப் கிரிக்கெட்.''

ஆர். எஸ். சுப்பிரமணியன்.



மாலையில் பூக்கும் மலர்கள்

21

அசதி ஆளை அமுக்கியது.

ஆனாலும் உறக்கம் வர மறுத்தது.

அரைமணி போலப் புரண்டு படுத்து விட்டு எழுந்து மேஜை விளக்கைப்போட்டு அன்றையத் தபாலில் வந்திருந்த வைத்தியப் புத்தகத்தைப் பிரித்தார்.

மனசில் ஏதுவும் பதியாமல் படித்ததையே மீண்டும் மீண்டும் படிக்க வேண்டி இருக்க ஜன்னலை மூடி வைத்தார்.

பால்கனி கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தார்.

சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து பின்னேடு வந்து காலடியில் அமர்ந்து மடியில் தலைவைத்துக் கொஞ்ச முற்பட்ட விக்ரமின் கழுத்தை வருடிக் கொடுத்தபடி இங்கும் அங்குமாய் ஆகாசத்தில் ஜொலித்த நட்சத்திரங்களை வெறித்தார்.

சற்று முன் அவசரமாய் அந்த அறுவை சிகிச்சையைச்செய்து முடித்ததிலிருந்து தான் மனசு இப்படி இருப்புக் கொள்ளாமல் தவிக்கிறது என்பதைத் தெளிவாக உணர முடிய கண்களை ஆயாசத்துடன் மூடிக் கொண்டார்.

ஹிஸ்டரெக்டமி.

கர்ப்பப் பையை அகற்றும் அறுவைச் சிகிச்சை.

கொஞ்சம் கூடப் பயப்படத் தேவையில்லாத ஒரு ஆபரேஷன். ஆனாலும் சற்றும் எதிர்பார்க்காத தினுசில் ஹிஸ்டரெக்டமியைத் தொடர்ந்து சௌரியைச் சாவு அணைத்துக் கொண்டதிலிருந்து இந்தப் பேரைக் கேட்டாலே உடம்பு திடுக் திடுக்கென்று உதறித்தான் போகிறது.


இரவு பத்து மணி இருக்கும்.

உணவை முடித்துக் கொண்டு சின்னதாகப் பின்னணியில் ரவிசங்கரின் சித்தார் ஒலிக்க ஜே. கிருஷ்ணமூர்த்தியின் கேள்வி—பதில்களில் ஆழ்ந்திருந்தவரை டெலிபோன் மணி கலைத்தது.

டாக்டர் நாராயணி பேசினார்.

குரலில் பதற்றம்.

ஏழுமணி சுமாருக்கு, மிஸஸ் ஜனார்த்தனத்தைப் பிரசவத்திற்காகத் தம்முடைய நர்ஸிங் ஹோமில் அட்மிட் செய்தாராம். பனிக்குடம் உடைந்துபோய், கட்டுவாயில் குழந்தை நின்று, சுலபமாக வெளியில் வராமல் கஷ்டப்பட்டதால், ஃபோர்ஸப்ஸ் உபயோகிக்க வேண்டி வந்ததாம். குழந்தையை



வெளியில் எடுத்ததும் போட வேண்டிய தையல்களைப் போட்டு, கவலை இல்லை என்று சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லி விட்டு வீட்டுக்குச் சென்றால், ஒன்பது மணிக்கு மேல் போன் வருகிறதாம். ரத்தப் போக்கு நிற்காததோடு அதிகமாகவும் போகிறது என்று. மீண்டும் அவசரமாய் நர்ஸிங் ஹோமுக்கு வந்து ப்ளாசண்டா துளி தங்கி இருந்தாலும் இப்படி ஆகலாம் என்று கர்ப்பப்பையைச் சுத்தம் பண்ணி, ப்ளக் (Plug) வைத்தாராம். அப்படியும் ரத்தப் போக்கு நிற்காமல் பேஷண்ட் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் பாலாஜிக்கு போன் பண்ணி இருக்கிறாராம்.

''கர்ப்பப் பை மிருதுவா இருக்கு. யுடிரைன் கன்ட்ராக்ஷன்ஸ் இல்லையோனு பயமாக இருக்கு... பேஷண்ட்டும் சோகை பிடிச்ச வெளுத்திட்ட மாதிரியும் தோணுது. டாக்டர் மாலதிய கூப்பிட்டேன். அவங்க திடீர்னு கிளம்பித் திருப்பதிக்குப் போயிருக்காங்களாம். டாக்டர் ஆனந்தன் வீட்டுல இல்லே. டாக்டர் ஸ்ரீநிவாஸ் தம்பிக்குக் கல்யாணம்... எனக்கு நாலு நாளா காய்ச்சல்... இன்னிக்குத் தான் நார்மலா இருக்கேன். ஹிஸ்டரெக்டமி செய்யணும்னா என்னால தனியா சமாளிக்க முடியுமானு தயக்கமா இருக்கு... ப்ளீஸ் டாக்டர்... நீங்க வந்திங்கன்னு நான் கவலை இல்லாம இருப்பேன்... ப்ளீஸ்...''

பிரசவத்திற்குப் பிறகு கர்ப்பப்பை சுருங்கவில்லை என்றால் அது தன் செயலைச் செய்ய முடியாமல் இருக்கிறது என்று அர்த்தம்.

இன்னர்ஷியா?

அந்தப் பெண்மணியின் உயிரைக் காப்பாற்ற ஹிஸ்டரெக்டமியைத் தவிர வேறு வழி இல்லை.

சிவசங்கரி



போய் டாக்டர் நாராயணிக்குப் பக்கபலமாக நின்று உதவிவிட்டு, வீடு திரும்பும் போது மணி பனிரெண்டரை...

பிரசவம் நடந்த பெண்ணுக்கு வயசு அதிகமில்லை. இருபத்தி ஒன்று, இரண்டு இருந்தால் அதிகம்...

முதல் பிரசவம்...

இதுவே இனி - கடைசியும் கூட...

நல்ல வேளையாய்க் குழந்தை திடகாத்திரமாக இருக்கிறது.

தாயைக் குறித்தும் கவலைப்பட எதுவும் இல்லை.

கௌரிக்கு அப்படி ஒரு அபூர்வ வியாதி வந்தது என்பதற்காக, ஹிஸ்டரெக்டமி ஆன ஒவ்வொருத்தருக்கும் அந்த ரீதியிலேயே முடிவு காத்திருக்கும் என்று பயப்படுவது அசட்டுத்தனம்.

ஹிஸ்டரெக்டமி...

தீட்டு முடிந்ததும் ரத்தப் போக்கு அதிகமாக இருந்தது என்பதை முதல் மாசமே தெரிந்து கொண்டு, உடனடியாய் சிகிச்சை அளித்திருந்தால் ஒருவேளை கௌரி பிழைத்திருப்பாளோ!

நகரின் பிரபல டாக்டர் நான்!

ஆனாலும், என் மனைவியிடம் உண்டான கோளாறைத் துவக்கத்திலேயே கண்டுபிடிக்க எனக்குத் தெரியவில்லை!

ஹௌ இக்னரெண்ட்!

கௌரி இறந்ததற்கும், அவளுக்கு நடந்த அறுவை சிகிச்சைக்கும் நேரடித் தொடர்பு இல்லை என்பது நினைவுக்கு வந்தாலும் கோளாறு ஆரம்பித்த காலத்திலேயே அவளைத்தான் கவனிக்காதது மன்னிக்க முடியாத தவறாகவே பாலாஜிக்குத் தோன்றியது.

மூன்று, நான்கு மாசமாக அவ்வப்போது தொடர்ந்து ப்ளீடிங்...

அதைக் கூட உணராமல் ஒரு கணவன் இருக்க முடியுமா?

இருந்தேனே!

அத்தனை காதலுடன், அன்னியோன்னியத்துடன் வாழ்ந்த எங்கள் நடுவில் செக்ஸ் ஒரு அபூர்வமான சங்கதியாகத்தான் இருந்தது என்ற உண்மையைக் கூறினால் சத்தியமாக யாரும் நம்பத்தான் மாட்டார்கள்.

—பாலா, இன்னிக்கு அத்தை வீட்டுலே ஒரு தமாஷ்!

—என்னாச்சு? உன் எண்பத்தைஞ்சு கிலோ அத்தை வாழைப்பழத்தோல்ல காலை வைச்சி சறுக்கி விழுந்தாங்களா?

—ஹௌ மீன்! ... அத்தை நல்லா இருக்கறது உங்களுக்கு உறுத்துதா? சிரிக்காதீங்க பாலா...

—சரி, சிரிக்கலே. என்ன தமாஷ் சொல்லு..

—அத்தை வீட்டு விசேஷத்துக்கு வந்தவங்க எல்லாருமா சேர்ந்து டீலக்ஸ் பஸ் எடுத்துக்கிட்டுத் திருத்தணி, பழனினு நாலு நாள் போகப் போறாங்களாம். 'நீயும்வா'னு தொந்தரவு பண்ணுங்க...' ஆனா விடுங்கம்மா... நான் வரமாட்டேன்'னு சொன்னேன். 'கௌரியப் போய்க் கூப்பிடுறியே.... அவளா வருவா? இல்லே அவ புருஷன்தான் விடுவாரா?'ன்னு அத்தை சொன்னதும், தொடர்ந்து —ஆமாமா... அவங்க ஒரு ராத்திரி கூடப் பிரிஞ்சி இருக்க மாட்

டாங்க; சின்ன வயசுக்காரங்க இவங்ககிட்ட பிச்சை எடுக்கணும்'னு பேசி ஆளாளுக்கு ஒரே கேலி...

—நீ என்ன சொல்லிச் சமாளிச்சே?

—புருஷனும், மனைவியும் ஒருநாள் கூடப் பிரியாம இருக்கிறோம்னு அதுக்கு செக்ஸ் தான் காரணம்னு நீங்க நினைக்கறது தப்பு; ஒண்ணு சாப்பிட்டு, பேசி, சிரிச்சு, படிச்சு, பாட்டுக் கேட்டாத்தான் எங்களுக்குப் பொழுது போகும். ஒருத்தர் இல்லேன்னு இன்னொருத்தர் எதுவும் செய்யத் தெரியாம தவிச்சிப் போயிடுவோம் — னு விளக்கப்பார்த்தேன். யாரும் காதுல வாங்காததோட தொடர்ந்து 'சப்பைக் கட்டு கட்டாதே—பதினைஞ்சு வருஷம் ஆகியும் இத்தனை செக்ஸ் ஆசையோட நீங்க 'இருக்கறதுக்கு நாங்க பொறுமைப்படமாட்டோம்'னு வேற தத்து பித்துனு பேசினாங்க — சரி, புரிஞ்சிகிட்டுப் போங்கனு கம்முனு சிரிச்சுக்கிட்டே இருந்திட்டேன்.

—கௌரி...

—ம்?

—அவங்க குறிப்பிட்ட வகைல நம்ப உறவு இல்லேனு உனக்கு வருத்தமா இருக்கா?

—மை காட்? இது என்ன அசட்டு சந்தேகம்? ஒரு உந்துதல் காரணமா தினமும் செக்ஸ் வைச்சுக்கிட்டும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்காம இரண்டு அன்னியர்களாவாழற வாழ்க்கை உசத்தின்னு நான் என்னிக்குமே நினைச்சதில்லேன்னு உங்களுக்குத் தெரியாதா பாலா?

—தெரியும்தான். ஆனாலும்? செக்ஸ்ன்னு பார்த்தா நமக்கு நடுவுல அது ரொம்ப கம்மிதானே கௌரி?

—ஸோ வாட்? நீங்களும், நானும் சந்தோஷமா இருக்கோமே, இதுதானே முக்கியம்? நம்ம காதலோட பரிமாணத்தை எத்தனை பேரால சரியா புரிஞ்சுக்க முடியும்னு எனக்குச் சந்தேகமா இருக்கு பாலா.. தவிர நம்ம இரண்டு பேருக்கும் நடுவுல இருக்கிற இந்த கம்பேடபிலிடி; இந்த மரியாதை, இந்த அண்டர்ஸ்டாண்டிங், இந்த ஸ்னேகம், இந்தச் சரசனம், இந்த அன்பு — எத்தனை தம்பதிக்கு இருக்கும்னு நினைக்கறீங்க? சொல்லுங்க. அழுத்தமான ஆழமான காதலைப் புரிஞ்சிக்க முடியாதவங்க, இது உடம்பு சம்பந்தப்பட்டதுதான்னு தீர்மானிச்சா, அவங்களைப் பத்தி எனக்கு அக்கறை இல்லே... நான் என்ன சொல்றேன்னு புரியுதா பாலா?

—ஐ லவ் யூ கௌரி டாலிங்

—ஐ லவ் யூ டூ பாலா...

தொண்டை இறுகி, கண்ணோரங்கள் கசியத் துவங்க, பாலாஜி எழுந்து நின்றார்.

இப்படியும், அப்படியும் நடந்து பதற்றத்தைக் குறைக்க முயன்றார்.

குளிர்ந்த பானம் ஒன்றைப் பருகினால் தேவலை போலத் தோன்ற, விக்ரம் தொடரக் கீழே இறங்கி வந்து விளக்கை ஏற்றினார்.

ஃப்ரிட்ஜில் பால் இருந்தது.

சைட் போர்டிலிருந்து கண்ணாடி டம்ளரை எடுத்து அதை நிரப்பினார்.

சீஸ் துண்டம் ஒன்றை விக்ரமுக்குக் கொடுத்துவிட்டு, தம்முடன் முன் ஹாலுக்கு வந்தார்.

பாரிஜாதத்தின் மணம் நாசியில் சன்னமாக ஏறி, உடம்பைச் சிலிர்க்க வைத்தது.

சோபாவில் அமர்ந்து மெதுவாகப் பாலைப் பருகினார்.

—என் ரொம்ப நாள் ஆசை இன்னிக்கு நிறைவேறித்து பாலா... எழுத்தாளர் துர்க்காவைச் சந்திச்சேன்!...

—பெண் எழுத்தாளர் துர்க்காவையா? ரியலி? எங்கே? எப்போ?

—முதல்ல இப்படி 'பெண் எழுத்தாளர்'னு பிரிச்சி குறிப்பிடறதை விடுங்க... துர்கா கேட்டாங்கன்னா 'நீங்க கூட வா டாக்டர்?'னு புருவத்தை உசத்துவாங்க...

—ஓ. கே... ஓ. கே... எழுத்தாளர் துர்க்காவை எங்க பார்த்தே?

——ஒரு... விசேஷ விருந்தாளியா வந்திருந்தாங்க. ஐ டெல் யூ நிஜம்மாவே அவங்க ஒரு அலாதியான நபர்தான்.


—எப்படி? கொம்பு, கிம்பு முளைச்சிருக்கா?

—விளையாடாதீங்க பாலா... ஒவ்வொரு கேள்விக்கும் தெளிவா என்னமா பதில் சொன்னாங்க தெரியுமா? டிபன் சாப்பிட்டப்ப என்னோட தனிப்பட்ட முறையிலே நிறையப்பேசினாங்க. ஷி இஸ் க்ரேட் பாலா..

—நீயே பிரமிக்கப் போற அளவுக்கு அப்படி என்ன சொல்லிட்டாங்க டார்லிங்?

—நிறைய விஷயங்களைப் பற்றிப் பேசினாங்க பாலா... ம்ம்... என்னனு சொல்றது? நட்பு, காதல், போன்ற உறவுகளைப் புதுக்கோணத்துலேருந்து விமர்சனம் பண்ணுங்க, சமூகத்துல நிலவற ஹிப்பாக்ரஸிய குறிப்பிட்டுக் கசந்து பேசினாங்க... அப்புறம்... அ... இதக் கேளுங்க... பேச்சு வாக்குல மிஸஸ் பங்கஜம் இன்னி பேப்

1978—ம் ஆண்டு வரை வேலை தேடுவோரின் எண்ணிக்கை 1,26,78,000. 1982—ல் வேலை தேடுவோரின் எண்ணிக்கை 1,97,63,000. இதில் எஸ். எஸ். எல். சி. படித்து முடித்தவர்கள் 55,60,000. மேல்நிலைப் படிப்பு முடித்தவர்கள் 24,69,000. பட்டப் படிப்பு முடித்தவர்கள் 15,99,000. பட்ட மேற்படிப்பு முடித்தவர்கள் 1,70,000 பட்டதாரிகளில் பொறியியல் வல்லுனர்கள் 24,000. மருத்துவர்கள் 18,000. —செந்தில்



ஈறுகளை பலப்படுத்துவீர்.
பற்களுக்கு நீண்ட ஆயுளை அளிப்பீர்.




ஈறுகளை பலப்படுத்துவதற்கான விசேட அஸ்ட்ரிஞ்ஜெண்ட் அடங்கியிருப்பது போர்ஹென்ஸ் ஒன்றில்தான்.

இதன் கிளு கிளு சுவையே இதன் செயல்திறனுக்குச் சான்றாகும்!

ஆரோக்கியமான பற்களுக்கும் கூட பலமான ஈறுகளின் ஆதாரம் தேவை. ஈறுகள் பலகீனமாகவும், மெத்து மெத்தென்றும் இருந்தால் உங்கள் பற்களுக்கு பலமான ஆதாரம் கிடைக்காது. ஆகவேதான், போர்ஹென்ஸில் விசேட அஸ்ட்ரிஞ்ஜெண்ட் என்ற உட்பொருள் சேர்க்கப்பட்டுள்ளது. அது ஈறுகளின் திசுக்களைச் சுருக்கி கெட்டிப் படுத்துகிறது. நீங்கள் பற்களை போர்ஹென்ஸ் உபயோகித்து பிரஷ் செய்யும் போது உங்களுக்கு கிடைக்கும் கிளுகிளு உணர்வு, அஸ்ட்ரிஞ்ஜெண்ட் செயல்படுவதை காட்டுகிறது. அது ஈறுகளை பலப்படுத்தி கெட்டிப்படுத்துகிறது. ஆகவே, உங்கள் பற்கள் நீண்ட ஆயுளைப் பெறும்.

ஆகவே, உங்கள் பற்களுக்கு பலமான ஆதாரத்தை அளியுங்கள். உபயோகியுங்கள் போர்ஹென்ஸ்... விசேட அஸ்ட்ரிஞ்ஜெண்ட் அடங்கிய டூத் பேஸ்ட்.



உங்கள் ஈறுகள் பலவீனமடைந்தால் ஆரோக்கியமான பற்களும் கூட பலவீனமடையும்.


போர்ஹென்ஸின் விசேட அஸ்ட்ரிஞ்ஜெண்ட் ஈறுகளின் திசுக்களை கெட்டிப்படுத்துகிறது

உங்கள் ஈறுகளை பலப்படுத்தி பற்களுக்கு நீண்ட ஆயுளை அளியுங்கள்.



நம்பகமான போர்ஹென்ஸ் பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்.

306F-203-TAM



சிகரெட் குடித்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது

STATUTORY WARNING: CIGARETTE SMOKING IS INJURIOUS TO HEALTH

CASVS-307-203TAM

பார்ல எண்பது வயசு கிழவனும், எழுபத்தி ஐந்து வயசு கிழவியும் கல்யாணம் பண்ணிக்கிட்ட சேதி வெளியானதைச் சொல்லி, நையாண்டியா 'இந்த வயசுலேயும் வெட்கம் இல்லாம அலையறுங்களே வக்ரம் பிடிச்சவங்க'னு சிரிச்சதும் துர்காவுக்குக் கோபம் வந்திடிச்சி... 'வக்ரம் அவங்க கிட்டே இல்லே... உங்க கிட்டதான். இதமானதுணை வேண்டி ஒன்னு சேர்ந்திருக்கிறவங்களுக்கு செக்ஸ் பெயின்டை அடிச்சு விகாரமாக்கற உங்க பேச்சுத்தான் வக்ரமானது. கீழ்த்தரமானதுன்னு பளிச்சுனு பேசிட்டாங்க. பாவம், மிஸஸ் பங்கஜத்துக்கு முகத்தை எங்க கொண்டு வச்சிக்கிறதுன்னு புரியலே...


—வெரிகுட்... அப்புறம்:

—ரொம்ப அழகான கருத்து ஒண்ணையும் சொன்னுங்க பாலா. 'இப்படி வயசாகித் துணை தேடறவங்களோட பந்தம் என்னைப் பொறுத்தவரை இருட்டின பிறகு பூக்கற மலர்களின் மணத்துக்குச் சமம். கண்ணைப் பறிக்குற நிறம், அழகு இருக்காது. ஆனு, இருட்டு நடுவுல எங்கேயோ இருந்திட்டு வாசத்தை மட்டும் பரப்பும். இருட்டுக்குப் பயப்படாம மணத்தை உணர்ந்து தேடிப் போறவங்களுக்குத் தான் பூவைப் பார்க்கறது சாத்தியம்—னு சொன்னுங்க... எப்படி? புதுசான விளக்கம் இல்லே?

—பிரமாதம். வேறே?

—சமுதாயம் எப்படி புடவை, வேஷ்டியை மட்டும் நினைப்புல வைச்சுக்கிட்டு, அதை உடுத்தியிருக்கும் நபர்களை, அவர்களின் உன்னதமான மனங்களை, மறந்துடுதுன்றதைப் பத்தி நிறையவே பேசினுங்க. 'இரண்டு ஆண்கள் எத்தனை நெருக்கமாப் பழகினுலும் தப்பாப் பேசாத உலகம், ஒரு பெண்ணும், ஆணும் தங்க நடுவுல ஆரோக்கியமான நட்பை வளர்த்துக்க மட்டும் விடவே மாட்டேங்குது. உதாரணமா என்னையே எடுத்துக்கங்க... நான் ஒரு எழுத்தாளர்னு தான் மனசார என்னை நினைக்கறேன். ஆனு, சுற்றி இருக்கிறவங்களால என் புடவையை மறக்கவே முடியலே. ஒரு பத்திரிகை ஆசிரியரை அறிவு பூர்வமாக மதித்து அவருடைய நல்ல குணங்களால் கவரப்பட்டு நெருக்கமாகப் பழக விரும்பினுல், உடனே ஜனங்களுக்கு அவருடைய வேஷ்டியும் என்னுடைய புடவையும் தான் நினைவுக்கு வருது. எங்க இரண்டு பேரையும் இந்தப் பால் உணர்வுக்கு அப்பாற்பட்ட இரண்டு இண்டிவிஜுவல்ஸ் ஆக ஏற்கச் சமுதாயம் மறுக்கறப்போ கோவம், ஆத்திரம் வருது. இப்படி, பல விஷயங்களில் நம்ப கண்ணேட்டம் மாறணும்'னு அடிச்சுப் பேசினுங்க... ஃபென்டாஸ்டிக் இல்லே? அப்புறம்...

அன்றைக்கு ரொம்ப நேரத்துக்கு அவர்கள் துர்கா பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். கற்பு என்பதற்கு அளவுகோல் என்ன? தவறு என்பதை நிர்ணயிப்பது யார்? இது சரி, இது உயர்வு என்று எந்த அடிப்படையில் ஒப்புக் கொள்வது — என்பது போன்ற கேள்விகளைக் கேட்டு, அதற்குத் தான் யோசித்து வைத்திருக்கும் பதில்களைத் துர்கா அழுத்தமாகப் பேசியதைக் கௌரி



ஹலோ! ஹலோ! பிரேம்நசீர்!

கேரள மாநிலம் உதயமான சமயம்.

'ஹலோ! பிரேம்நஸீரா?'

''ஆமாம்.''

''நீங்கள் ஒரு கம்யூனிஸ்ட் என்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.''

''நான் கம்யூனிஸ்டா? யார் சொன்னது?''

''இல்லாமலா கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகருக்குத் தேர்தல் பிரசாரத்திற்கெனப் பண உதவி செய்திருக்கிறீர்கள்?''

''நீங்கள் நினைப்பது தவறு. தேர்தலில் நிற்கிறவர் என் நண்பர். அதற்காகத்தான் பொருளுதவி செய்திருக்கிறேன். அது மட்டுமல்ல அவருக்குப் போட்டியாக நிற்கும் அபேட்சகரின் தேர்தல் பிரச்சாரத்திற்காக என்னுடைய இரண்டு கார்களைக் கொடுத்திருக்கிறேன்.''

''அப்படியானுல் நீங்கள் காங்கிரஸ்காரர்.''

''அதுவுமில்லை. நான் கலைஞன். எனக்குக் கட்சி எதுவும் இடையாது.''

இந்தப் பிரேம்நஸீர்தான் வரும் பார்லிமெண்ட் தேர்தலுக்கு முன் புதிதாகக் கட்சி ஆரம்பிக்கப் போகிருராம்.

—பாதுஷா'.

ஒருவித பரவசத்துடன் பாலாஜியிடம் தெரியப்படுத்த...

திடுமென வீசிய காற்றில், பாரிஜாதத்தின் மணம் பரபரவென்று அறை முழுவதும் வியாபிக்கிற மாதிரி தோன்ற, பாலாஜி எழுந்து ஜன்னலிடம் சென்று இருட்டில் நின்ற மரத்தை எறிட்டார்.

கௌரி சொன்னதும் வாஸ்தவம் தான்.

வாசத்தை உணர்ந்து கொண்டே துழாவுகையில் வெள்ளை நட்சத்திரங்களாக இருட்டில் மின்னும் பூக்கள்.

—ஏ. ஸி. போட்டுக்கறதுல ஒரு பெரிய இழப்பு என்ன தெரியுமா பாலா? இந்த வாசம்...

மனசைத் தாலாட்டி, போதையில் மூழ்க அடித்த பாரிஜாத மணத்தை விட்டுவிட மனசில்லாமல் அங்கேயே சோபாவில் காலை நீட்டிப் படுத்த போது இருதயம் முழுதும் கௌரியின் ஞாபகம் ததும்புவது தாங்க முடியாததாக இருந்தது. (தொடரும்)

தேவனின் கருணை



நிறைந்த உருவத்திற்குப் பதிலாக அருளானந்தத்தின் புன்சிரிப்பு மலரும் முகமே மனத்திரையில் படர்ந்தது.

ஆசாமி நடையில் வேகத்தைக் காட்டினர். இருள் கவ்விக் கொண்டு வந்தது. குளிரும் உரச ஆரம்பித்தது. கையில் ஒரு பெரிய சாக்குப் பை. கால்சட்டையும் மேல் சட்டையும் கசங்கித்தான் இருந்தன. தலை கூடச் சரியாக வாரப் படவில்லை. ஒரு சராசரி 'மெக்கானிக்' தோற்றம்.

நினைவலைகள் சில கணங்கள் பாஸ்டர் அருளானந்தத்தை விட்டு இருபது வருடங்களுக்கு முன் இந்தச் சாலையில் பாரத்துடன் நடந்து வந்ததும் திரும்பப் பாரமில்லாமல் வேகமாகத் திரும்பியதும் பளிச்சிட்டது.



'**பா**ஸ்டர் அருளானந்தம்' என்ற இரண்டு வார்த்தைகள்தான் அந்த நடுத்தர வயது நபரின் மனத்திரை முழுவதும் வியாபித்திருந்தது.

'பாஸ்டர் அருளானந்தத்தைப் பார்த்து இருபது வருடங்களாகப் போகிறதே! அவர் இன்னமும் பாஸ்டராகவே மருதம்பட்டியில் இருக்கிறாரா? அவரிடம் அடமானமாக விட்டு வந்த பொருளை இப்போது மீட்க முடியுமா?' என்றெல்லாம் நினைத்துப் பார்க்கவே அந்த நபருக்கு அச்சமாக இருந்தது.

'கர்த்தரே! எனக்கு பாஸ்டர் அருளானந்தத்தைச் சந்திக்கக் கருணை காட்டுங்கள்' என்று இடையே பிரார்த்தனை செய்ய முயன்ற போதுகூட கர்த்தரின் அமைதி

அப்போதும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முந்திய வாரம் தான். இப்போதும் அதே காலம் தான்.


ரயில் நிலையத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் அன்று நடந்த போது பாதை சீராக இல்லை. இப்போது பாதை கொஞ்சம் பரவாயில்லை. ஆனால் இந்தப் பகுதி எந்த வித ‘ முன்னேற்றமும் கண்டதற்கு அறிகுறிகள் இல்லை. முன்பும் அந்த ரயில் நிலையத்தில் வேக ரயில்கள் நின்றதில்லை. இப்போதும் அப்படித்தான்.

தேவாலயத்தின் காம்பௌண்டில் கடைசி வீடுதான் பாஸ்டர் அருளானந்தத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. தனி மனிதர். உதவிக்கு அனாதையாக அறுபதை ஒட்டி

விட்ட ஒரு மூதாட்டியைத் தம்முடன் இருக்க அனுமதி வாங்கியிருந்தார். தேவாலயத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் பொறுப்பும் அந்த மூதாட்டியிடம் விடப்பட்டது.

அந்த வட்டாரத்திலிருந்த முந்நூறுக்கு மேற்பட்ட குடும்பத்தினருக்கும், சமயபேதமின்றி, அருளானந்தத்திடம் மதிப்பு உண்டு. எந்த விஷயத்தில் சந்தேகம் தோன்றினாலும் ஊர்க்காரர்கள் அவருடைய ஆலோசனையைக் கேட்பார்கள். அவர் சொல்வதை ஏற்றுக் கொள்வார்கள்.

சாக்குப்பை ஆசாமி அந்த வீட்டின் முன் வந்து நின்றபோது நன்றாக இருட்டிவிட்டிருந்தது. தோட்டத்து மூங்கில் படலைத் தள்ளிவிட்டு வாயிற்கதவை மெதுவாகத் தட்டினார்.



''யாரது?'' என்ற இளமையான பெண் குரல் ஜன்னல் வழியாக ஒலித்தது. ஜன்னல் கதவு திறக்கப்பட்டு, கம்பிகளின் வழியே ஹரிக்கன்லைட் ஒளி தோட்டத்தில் விழுந்தது.

ஒருகணம் சாக்குப்பை நபரின் இதயம் நின்று ஓடியது. அந்தக் கணத்தில் எத்தனையோ எண்ண மோதல்கள். 'இருக்காது' என்று ஒரு நினைப்பு. 'இருக்கலாம்' என்ற ஒரு மதிப்பு. 'நீதி வழங்க இருக்கும் உன் தேவனைச் சந்திக்கத் தயாராக இரு' என்ற அமாஸின் (AMOS 4:12) போதனையும் கூட அந்தக் கணத்தில் சாக்குப்பைக்காரருக்கு நினைவு வந்தது.

வெளிச்சம் விழுந்த பகுதிக்கு அந்த நபர் ஒதுங்கி 'பாஸ்டர் அருளானந்தம் ஐயா இருக்காங்களா?'' என்று நிதானமாகக் கேட்க முயன்றார். ஆனால் அவர் வார்த்தைகளில் பதற்றம் கலந்திருந்தது.

அந்த யுவதி ஜன்னல் பக்கத்தில் வந்தாள். ஹரிக்கன் லைட் வெளிச்சத்தில் அவள் முகம் சரியாகத் தெரியவில்லை.

''பாஸ்டர் அருளானந்தமா?... அப்படி யாரும் இங்கே இல்லையே! இப்போ மிஸ்டர் டேவிட் தான் பாஸ்டர். அவர் தேவாலயத்தில் இருக்கிறார். அவரைச் சந்தித்து விசாரியுங்கள்.''

அந்த ஒலியும் ஒளியும் உள்ளே போய் மறைந்தன.

இப்போது அந்தகாரம் தோட்டத்தில் மாத்திரம் இல்லை. சாக்குப்பைக்காரரின் உள்ளத்திலும் நிறைந்தது.

மெதுவாகத் திரும்பி நடந்து, மூங்கில் படலை ஒழுங்காக வைத்து விட்டு சர்ச்சை நோக்கி நடந்தார் அவர்.

''**நா**ன் இங்கே வந்து எட்டு வருஷங்களாகின்றன. எனக்கு முன்னாலே மிஸ்டர் மைக்கேல்தான் இங்கே பாஸ்டர். அவர் வயோதிகத்தின் காரணமாகச் சொந்த ஊருக்கே போய்விட்டார். எனக்கு மிஸ்டர் அருளானந்தத்தைப் பற்றி ஒன்றும் தெரிய வாய்ப்பில்லை.'' பாஸ்டர் டேவிட் அழுத்தமாகச் சொன்னார்.

''இப்போது, அவர் காலத்திலிருந்த ஊழியர்கள் யாரும் இல்லையோ?''

''தோட்டக்காரர்புதியவர்...குப்பை கூட்டி சுத்தம் செய்யும் ஜான் நான்வந்தவருடம்வந்தார்...''

''இந்தக் கிராமத்தில் நீங்கள் யாரையாவது குறிப்பிட முடியுமா? நான் போய் விசாரிக்கிறேன்...''

''உங்க பேரு என்ன சொன்னீங்க?''

''டேனியல்.''

''மிஸ்டர் டேனியல்! நீங்க பழைய பாஸ்டரைச் சந்திக்க ஆர்வம் காட்டும்

காரணத்தை என்னிடம் சொல்ல விரும்பினால் சொல்லுங்கள். நான் உங்கள் முயற்சி வெற்றி பெறக் கர்த்தரிடம் முறையிடுவேன். இரவு என்னுடனேயே தங்கலாம். காலையிலே ஆபீஸிலே இருக்கிற ரிக்கார்டுகளைப் புரட்டினால் ஒருவேளை பாஸ்டர் அருளானந்தத்தைப் பற்றித் தகவல் கிடைக்கலாம். அப்படியும் கிடைக்கலேன்னா கிராமத்திலே ஐசக்னு வயதான மளிகைக்கடைக்காரர் இருக்கிறார். அவரிடம் நீங்கள் விசாரிக்கலாம்... என்ன இப்படி மயக்கமாகச் சாய்கிறீங்க! உடம்புக்கு ஒன்றுமில்லையே!... வாங்க! உங்களுக்குக் களைப்பைப் போக்க என்னாலான உதவி செய்கிறேன்... வாங்க!'' பாஸ்டர் டேவிட் கைத்தாங்கலாகச் சாக்குப் பைக்காரரைத் தம் வீடுக்கு அழைத்துக்கொண்டு சென்றார்.

ஐசக் என்ற பெயர் சாக்குப் பைக்காரரின் உள்ளத்தில் பூகம்பத்தைத் தோற்றுவித்தது என்று டேவிட்டிற்குத் தெரிய நியாயமில்லை. அந்த ஐசக்கின் அடாவடித்தனத்தால் தான் இருபது வருடங்களுக்கு முன் ஒரு கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாட முடியாமல் போயிற்று என்பதும் நினைவுக்கு வந்தது ஏன்! அப்புறம் எந்த வருடமுமே கொண்டாட முடியவில்லையே!

இரவு ஆகாரத்தை எளிமையாக முடித்துக் கொண்ட பிறகு, பாஸ்டர் டேவிட் பக்கத்து அறையைக் காட்டி ''நீங்கள் இதில் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு நிறையக் கணக்கு எழுத்து வேலைகள் இருக்கின்றன. காலையில் சந்திக்கலாம்'' என்று சொல்லிப் பக்கத்து அறைக்குப் போனார்.

சாக்குப்பை டேனியலுக்குத் தூக்கம் வரவில்லை. சற்று நேரம் கழித்து அடுத்த அறையில் யாருடனோ பாஸ்டர் டேவிட் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பாஸ்டர் டேவிட், வந்தவரிடம், ''ஐயா! இங்கே பல வருஷங்களுக்கு முன்னே மிஸ்டர் அருளானந்தம் என்பவர் பாஸ்டராகப் பணியாற்றினாராமே! அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?'' என்றார்.

அடுத்த அறையில் படுத்திருந்த டேனியல் எழுந்து உட்கார்ந்து காதுகளைத் தீட்டிக் கொண்டார்.

கிராமத்திலே தங்கராஜ் என்று ஒரு தச்சுத் தொழிலாளி. ஒரு வயதுப் பெண் குழந்தையை விட்டுவிட்டு அவன் மனைவி காலமாயிட்டா! அவனுக்கு வேறு மனிதர்களே இல்லே. தான் வேலை செய்யப் போகும் இடத்துக்கெல்லாம் தன் குழந்தையைச் சுமந்து போவான்.

ஒருசமயம் மளிகைக்கடை ஐசக்கின் வீட்டில் வேலை செய்ய வேண்டிய நிலை. தங்கராஜ் ஏற்கெனவே சாமான்கள் வாங்கிய வகையில் ஐசக்கிற்கு முப்பது ரூபாய் கடன்பட்டிருந்தான். அன்றைக்குக் குழந்தை அழுதது. ஐசக் அதை இரக்கமில்லாமல் அடித்துவிட்டான்.

தங்கராஜுக்கு ஆத்திரமாக வந்தது. அடக்கிக் கொண்டான். அந்த வேலைக்கான கூலி வாங்கித் தான் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட வேண்டும், குழந்தைக்கு ஒரு சட்டை வாங்க வேண்டும்.

ஆனால் ஐசக் கூலி தரவில்லை.

சோர்ந்து போய்த் திரும்பியவன் வழியில் பாஸ்டர் அருளானந்தத்தைப் பார்த்திருக்கிறான். அவரிடம் தன் மனத்திலிருந்த ஏமாற்றத்தையெல்லாம் கொட்டிவிட்டான்.

அருளானந்தம் புன்சிரிப்புடன் தங்கராஜ் முதுகைத் தடவிக் கொடுத்தார். தன் இருப்பிடத்திற்கு அழைத்துப் போய்த் தேனீர் கொடுத்தார். உள்ளே போய் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களைக்கொண்டு வந்து கொடுத்தா. ''தங்கராஜ்! முதல்வேலையாக, ஐசக்கின் கடனைத் தீர்த்துவிடு. மீதிப் பணத்தில் பண்டிகையைக் கொண்டாடு. மாதாமாதம் ஐந்து ரூபாயாக உன் கூலியில் மிச்சப்படுத்தி எனக்குக் கொடு. கர்த்தர் எப்போதும் உனக்குக் கருணை காட்டுவார். சந்தோஷமாகப் போய் வா'' என்று அனுப்பினார்.

ஆனால் அதிர்ஷ்டம் தங்கராஜ் பக்கம் இல்லே. முப்பது ரூபாயை ஐசக்கிடம் கொடுத்து விட்டுக் கூலியான இரண்டு ரூபாயை வாங்கிக் கொண்டான். இருபத்தி இரண்டு ரூபாய்களைச் சட்டைப் பையில் பத்திரப்படுத்தி வாய்க்கால் கரையில்வைத்து விட்டுக் குளித்தபோது ஒரு பேய்க்காற்று சட்டையை வாய்க்காலில் தள்ளிவிட்டது.

வாய்க்காலில் நீர்ச் சுழியிட்டுக் கொண்டு ஓடியது. தங்கராஜுக்கு நீச்சல் தெரியாது.

நிகர முடிவு பாஸ்டர் அருளானந்தத்திடம் ஐம்பது ரூபாய் கடன். கர்த்தர் கருணை செய்வது இப்படித்தானா என்று வெதும்பினான்.

அன்று நள்ளிரவில் தூங்கிக் கொண்டிருந்த தன் குழந்தையை நன்றாகப் போர்த்தி, நடந்ததை விவரமாக ஒரு கடிதத்தில் எழுதி, தான் திரும்பி வந்து ஐம்பது ரூபாய் கடனைத் தீர்க்கும் வரை, தன் குழந்தையை அவரிடம் பணயமாக இருக்கட்டும் என்று குறிப்பிட்டு, பாஸ்டர் அருளானந்தத்தின் இருப்பிடத்தின் வாசற்படியில் விட்டு விட்டு ஊரை விட்டே போய்விட்டான்!''

பாஸ்டர் டேவிட், வந்திருந்தவருக்கு ஒரு கிளாஸ் தண்ணீர் கொடுத்தார். ''அப்புறம் தங்கராஜ் எப்போது வந்தான்?''


''தங்கராஜ் வரவே இல்லே. அருளானந்தம் அந்தக் குழந்தைக்கு ரூபி என்று பெயரிட்டார். அந்த ஏழைக் குழந்தை அறிவு நிறைந்திருந்ததைக் கண்டு, அதை நகரத்திலுள்ள ஒரு வசதியான குடும்பத்தில் வளர்ப்புக் குழந்தையாக விட்டு வைத்தார். இது கர்த்தரின் முடிவு என்று நம்பினார். தங்கராஜ் இந்தப் பணயப்பொருளை மீட்க வராமலிருப்பதே நலம் என்று பிரார்த்தித்தார். இப்போது ரூபி இருபது வயது யுவதி. அவளுக்கு நல்ல இடத்தில் திருமணமாகி இப்போது அவளுக்குக் குழந்தை கூட இருக்கிறது.''

ஹா...ச்சு ஹா...ச்சு
நாளே பாழாப் போ...ச்சு




ஜலதோஷம் உங்கள் நாளையே பாழாக்க விடாதீர்கள். மூக்கு ஒழுகல், அடைப்பு, தலை பளு. இவை ஜலதோஷத்திற்கே உரித்தான அறிகுறிகளாகும். இதனால் உங்களுக்கும் தொல்லை, உங்கள் நாளுக்கும் தொல்லை. சிந்தித்துச் செயல்பட வேண்டாமா? கோல்டரின் சாப்பிட்டுப் பாருங்களேன்! அது விசேட ஃபார்முலாவின்படி தயாரான ஜலதோஷ மாத்திரையாகும். வசதிக்கு வசதி, நிவாரணத்திற்கு நிவாரணம்!

ஜலதோஷம் வாட்டுகிறதா?
கோல்டரின் அதை விரட்டுகிறது.



CASBC 111-203 TAM



''பாஸ்டர் அருளானந்தம் அன்பை அந்தக் குழந்தை தன்னுடையதாக்கிக் கொண்டதாக்கும்? அருளானந்தம் ஓய்வு பெற்றுப் போய் விட்டாரா?''

''இல்லை! ரூபி சிறுமியாக நகரத்தில் வளர்ந்து கொண்டிருந்தபோது அவளுக்குக் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கான அன்பளிப்புகள் வாங்கிக் கொண்டு போன போது ஒரு பஸ் விபத்திற்குள்ளானார். நகரக் கல்லறையிலேயே தான் அவருக்கு இடம் கிடைத்தது. ஒரு நல்ல ஆத்மாவை மருதம்பட்டி பூமி ஏற்றுக் கொள்ளும் அதிருஷ்டமில்லை.''

காலைவேளை. பொழுது புலரும் நேரம். பாஸ்டர் டேவிட் சாக்குப்பைக்காரர் படுத்திருந்த அறைக் கதவைத் தட்டிவிட்டுத் திறந்தார். விருந்தாளி டேனியலைக்காணோம். அவர் கொண்டு வந்த பை மாத்திரம் இருந்தது. பைக் கைப்பிடியிலிருந்த கடிதம் அவர் கவனத்தைக் கவர்ந்தது.

பாஸ்டர் டேவிட் ஐயா,

சற்றுமுன் உங்களிடம் பேபியவர் பாஸ்டர் அருளானந்தத்தைப் பற்றிச் சொன்னதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் தான் அவர் குறிப்பிட்ட தச்சுத் தொழிலாளி தங்கராஜ். முழுப் பெயர் டேனியல் தங்கராஜ். கடந்த இருபது வருடங்களாக உழைத்தேன், உழைத்தேன். முழுதாக நூறு ரூபாய் சேர்க்க முடியவில்லை. நினைவெல்லாம் என் குழந்தை மேலும் பாஸ்டர் அருளானந்தத்தின் மீதும்தான்.

சென்ற மாதம் என்னிடம் கைமாற்றாக ஒரு ரூபாய் வாங்கிய சக தொழிலாளி ரூபாய்க்குப் பதிலாக ஒரு லாட்டரி டிக்கெட்டைக் கொடுத்து விட்டுப் போய் விட்டார். அதற்கு மூன்றாவது பரிசாக இருபத்தி ஐயாயிரம் ரூபாய் கிடைத்தது. அதை அப்படியே, பாஸ்டர் அருளானந்தத்திடம் தேவாலய நற்பணிகளுக்காகக் கொடுத்து விட்டு என் மகளை அழைத்துப் போக ஓடி வந்தேன். அவர், என்கடமைகளை நிறைவேற்றிவிட்டார். அவர் நினைவாக இந்த இருபத்தி ஐயாயிரத்தையும் மருதம்பட்டி மக்கள் ஆனந்தமாக கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட உபயோகித்துக் கொள்ளுங்கள். எனக்கு உழைக்க வலு இருக்கிறது. மனத்தில் பரிசுத்தம் உள்ளவர்கள் தேவனைப் பார்ப்பார்கள் என்ற செயிண்ட் மாத்யூவின் வாசகம் நினைவிற்கு வருகிறது. (St. Mathew 5:8) நான் என் மனத்திரையில் எப்போதும் பாஸ்டர் அருளானந்தத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னை இந்த நேரத்தில் கர்த்தர்தான் அனுப்பியிருக்கிறார். என் பெயரைச் சொல்லாமல், விளம்பரப்படுத்தாமல், இந்தப் பணத்தைக் கொண்டு எல்லாக் குழந்தைகளுக்கும் இயன்ற வரை உதவுங்கள்.

வணக்கம்,
டேனியல் தங்கராஜ்.



அருள்வாக்கு

'ப்ரேயர்' என்றால் எதை வைப்பது? இதுவோ மதச்சார்பில்லாத ஸெக்யுலர் அரசாங்கம். அநேக மதங்களைச் சேர்ந்த பசங்கள் சேர்ந்து படிக்கும் போது எந்த ஒரு மதத்தின் பிரார்த்தனையை மட்டும் வைத்தாலும் தப்பாகி விடும் என்று யோசித்தார்கள். முடிவாக இப்போது பசங்கள் எல்லாரும் பாடங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னால் இரண்டு நிமிஷமோ மூன்று நிமிஷமோ மௌனமாகப் பிரார்த்தனை பண்ணிக் கொள்ளட்டும் என்று தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள்.

சின்னக் குழந்தைகளுக்கே இப்படி மௌனத்தை அவர்கள் சொல்வதால், நாமும் தான் பெரிய குழந்தைகளுக்கும் மௌனத்தைப் பற்றிச் சொல்லலாமே என்று தோன்றிற்று.

அவர்கள் மட்டும் தான் மாணவர்களா என்ன? நீங்கள் நான் எல்லோரும் மாணவர்கள் தான். லோகம் என்கிற இந்தப் பெரிய ஸ்கூலில் வாழ்நாள் பூராவும் விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய வித்யார்த்திகளாகத் தான் நாம் எல்லாருமே இருக்கிறோம்.

''மோனம்'' என்பது ஞான வரம்பு என்று பிரம்ம வித்யையாகவே அதைச் சொல்லியிருக்கிறது. ஜன்மா எடுத்ததற்கு இந்த ஜன்மாவில் நாம் என்னென்ன செய்ய வேண்டுமென்று தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் ஒன்றுமே செய்யாமல், பேசாமல், நினைக்காமல் இருக்கவேண்டுமென்று தெரிந்து கொள்வதுமாகும். மனஸ் போகிறபடியெல்லாம் நினைப்பது வாயில் வந்தபடியெல்லாம் பேசுவது என்றால் பிற்பாடு ஜன்மாவின் பலனையே அடையவில்லை என்று துக்கப்படும்படியாகும். அதனால் தான் மனஸை அடக்கி மௌனமாயிருக்க வேண்டுமென்று தெரிந்து கொள்வதே. (இப்படிச் செய்வது அப்புறம் இருக்கட்டும்.) உங்களுக்கு ஒரு வித்யாலாபம் என்று நினைத்துச் சொன்னேன்.

— ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்

ஜங்ஷனிலே ஒரு மேம்பாலம்

9

அவன் தான் உண்மையான காசி. இந்த முரட்டுத் தோற்றம் ஒரு கவசம். ஆமைக்கு ஓடு போலவும் நத்தைக்குக் கூடு போலவும் இது ஒரு வெளித்தோற்றம். உள்ளேயிருப்பவன் மிருதுவானவன். அவனுக்குள் என்ன துயரங்கள் இருக்கின்றன? என்ன சோகங்கள் இருக்கின்றன? அதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் போல் எஸ்தருக்கு ஓர் ஆவல் ஏற்பட்டது.

''இவ்வளவு மென்மையா நினைச்சுப் பார்க்கற ஒங்களாலே சைக்கிள் செய்னை எப்படி உருவி அடிக்க முடியுது?''

அவன் ரயில் மீதிருந்து பார்வையைத் திருப்பினான். அவனைப் பற்றி அப்படி ஒரு கருத்தை வாய்விட்டு வெளியிட்ட முதல் பெண் அவள்தான்.

''இது ஜங்சனுங்க. இங்கே கத்திக்குக் கத்தி எடுக்கணும். சைக்கிள் செயினுக்கு சைக்கிள் செயின் தான் பதிலு. இல்லே வாழ விட மாட்டாங்க.''

எஸ்தர் அவனுடைய பதற்றத்தைக் கூர்மையாகக் கவனித்தாள்.

''நான் பாட்டுக்கு ஒதுங்கிக்கினு இருந்தாலும் சண்டைக்கு வலிக்கறானுங்க. நேத்து போலீஸ்லே ரிப்போர்ட் கொடுத்துட்டு மறுநாளு கடை ஏறி வந்து அடிக்கிறானுங்களே... நான் சைக்கிள் செய்னை உருவாமே இன்னா பண்றது?''

''அப்ப போலீஸ்லே கேஸ் ரெகார்ட் பண்றப்ப ஏன் எனக்கு ரிப்போர்ட் குடுக்க இஷ்டமில்லேன்னு சொன்னீங்க.''

''ஹரி ரிப்போர்ட் குடுக்க மாட்டேன்னுட்டான். இன்ஸ்பெக்டர் கூட சொல்லிப் பார்த்தாரு. அவனுக்கே இஷ்டமில்லேன்னு நான் குடுத்தா நல்லாருக்குமா. காயப்பட்டது அவன். மாட்டவே மாட்டேன்னு பிடிவாதமா கீறான். நா இன்னா பண்றது.''

மழைச்சாரலின் சீற்றம் சற்றுத் தணிந்தது.

''அவர் ஏன் அப்பிடிச் சொன்னாரு?''

''ஹரி வேற டைப். அவன் இதுவரைக்கும் இந்த ஜங்சன்லே ஆரையும் தொட்டு அடிச்சதில்லே. அவன் கோவிச்சுக்கிட்டதையும் ஆரும் பார்க்கலே. அவனுக்கும் கராத்தே தெரியும். கோல் வேலை தெரியும். எல்லாம் சும்மா வெளையாட்டுக்குக் கத்துக்குறுப்பிலே தான் கத்துக்கினான். இதுவரிக்கும் அவன் யார் மேலயும் ரிப்போர்ட் குடுத்தது கெடையாது. குடுக்கவும் மாட்டான்.''

அவள் கண்களில் மழைத் துளி சிதறியதா கண்ணீரா என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

''ஒருபக்கம் நெனச்சா அவன் ரொம்பப் பெரிய மனுஷன்னு தோணுது. ஆனா அவன் மாதிரியே எல்லாரும் இருக்க முடியுமா? அதுவும் இவ்வளவு வயசான பின்னாலே...''

எஸ்தர் அவனையே குறுகுறுவென்று பார்த்தாள். அவள் கழுத்தில் ஒரு நீல பிளாஸ்டிக் மணி மாலை போட்டிருந்தாள். அது ஸ்படிகங்கள் போன்று உள்ளிருந்து ஓர் ஒளி வருவது போன்று லேசாகப் பிரகாசித்தது. சற்று முன்பு அவனுக்கும் தனக்கும் மத்தியில் தோன்றிய இடைவெளி — அந்த மணிமாலையோடு சேர்ந்து அவள் குறுகுறுப்பான பார்வையில் தோய்ந்த முகத்தோடு சேர்த்துப் பார்க்கும் போது — திடீரென்று அகல்வது போல் தோன்றியது.

மழைச்சாரலில் அவள் இப்போது இன்னும் நெருங்கி நின்றிருந்தாள். அவளது நறுமணம் மெல்ல அவனுக்குள் ஊடுருவி அவனுள் கலந்து கரைவது போலிருந்தது. காசி முதலாவது முறையாக ஒரு பெண் தனக்குள் ஒரு சலனத்தை ஏற்படுத்துவதை அறிந்தான்.

'இவள் என்னுடையவள்' என்று அவனுக்குள் ஏதோ ஒரு குரல் சொல்லிற்று.

குத்தப் பாஞ்சான்.

பயந்து விடாதீர்கள்! யாரும் யாரையும் குத்தப் பாயவில்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம் அருகே உள்ள ஒரு கிராமத்தின் பெயர்தான் குத்தப்பாஞ்சான்.

—எஸ். முகம்மது யூசுப்.



சாக்லேட் நகச்சாயம் பூசிய அந்த இரண்டு கைகளையும் பிடித்து அந்த விரல்களோடு தன் விரல்களைப் பின்னிக் கொள்ளவேண்டும் போல் தோன்றியது. அவன் அதைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

''ஒங்களைப் பார்த்தா எனக்கு வில்வம் ஞாபகம் தான் வருது.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க...?''

''வில்வமும் இப்படித்தான் சொன்னான் அப்பாகிட்டே. நான் ரொம்ப தூரம் போய்ட்டேன் சார். திரும்பியே வர முடியாது. நான் நல்லவனா மாறவே முடியாது. மன்னிச்சுக்குங்கன்னான்...''

அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

''இதை ஏங்க என்கிட்டே சொல்றீங்க?'' அவள் பளிச்சென்று அவன் மீது கண்பார்வையை வீசினாள். மை அழகாகப் பொருந்தி யிருந்தது அவள் கண்களுக்கு. இட்ட மாதிரியே தெரியவில்லை.

''எம் பேரு எஸ்தர்.''

''தெரியும். அன்னிக்கு ராத்திரி வீட்டிலே ஒங்களைக் கூப்பிட்டாங்களே.''

''நீங்க கூட அப்பிடியே கூப்பிடலாமே!''

மழைச்சாரலின் ஊடே ஒரு கொடிமின்னல் கிளைத்துப் படர்ந்து வேகவேகமாக வானில் ஒரு பெரிய கையெழுத்துப் போட்டு விட்டு மறைந்தது. கடமுடாவென்று ஒரு பேரிடி காது செவிடாவது போல் இடித்தது.

எஸ்தர் என்று கூப்பிடுவதா?

அவள் வழங்கிய சுதந்திரத்தில் காசி எதற்குப் பின்வாங்கினானோ அந்த இடைவெளியின் மீது ஒரு மேம்பாலம் விழுந்தது. அதை ஓடிக் கடந்து விட வேண்டும் போல் அவனுக்குள் துடிப்பு ஏற்பட்டது.

ஆனால் அவன் வழங்கிய உரிமையை அவன் உடனே பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதைக் கவனிக்கவே கவனிக்காதவன் போன்று மீண்டும் அவன் கேட்டான்.

வையவன்



''அப்போ நானும் வில்லனும் ஒரே டைப் புனு சொல்றீங்களா?''

''சொல்றீங்களா இல்லே சொல்றியா?'' அவன் திருத்தினான். இவ்வளவு தான் ஒரு பெண் ஓர் ஆணுக்கு உணர்த்த முடியும் என்று அவள் உதடுகளில் ஒரு நமுட்டுச்சிரிப்பு தவழ்ந்தது.

அந்த உதடுகள் அடிப் பருமனும் இல்லை. மெலிந்ததும் இல்லை. சதைப் பிடிப்பாக இருந்தன. அவற்றில் ஒரு ஜீவ களை இருந்தது.

''சொல்றியா?'' என்று கூச்சத்தோடு கேட்டான். அவன் கூச்சத்தை உணர்ந்து அவள் சிரித்தாள்.

''நிச்சயமா சொல்றேன்'' என்றாள்.

கடை மூடியதும் காசி வீட்டுக்கு வந்திருந்தான். நேற்று இரவிலிருந்து ஜெயாவின் பேச்சு குறைந்து விட்டிருந்தது. இன்று காலை கூட அவனை எழுப்பி டீ கொடுத்தபோது கோபமாய் வாய் மூடி இருந்தாள். இப்போதும் ஜெயா மௌனமாய் இருந்தாள்.

அணிந்திருந்த துணிகளைக் கழற்றி ஒரு ஹாங்கரில் மாட்டினான். ஒரு லுங்கியைக் கட்டிக் கொண்டான். புழக்கடைக்குப் போனான். பழக்க தோஷத்தில் புழக்கடை லைட் போட்டுக் கொள்ளவில்லை. சோப்பையும் டவலையும் எடுத்துச் செல்லவில்லை.

புழக்கடை இருட்டாக இருந்தது. கால் பழகியிருந்ததால் வழி தடுமாறவில்லை. இடது புறமாகக் கிணற்றடி. துணி துவைக்கும் கல். பாய்லர் நெருப்பு மட்டும் கணகண வென்று கோபமாகக் கண் சிவந்திருந்தது.

இன்றைக்குத் தண்ணீரில் குளிப்பது என்று முடிவு செய்து உடம்பிலிருந்து பனியனை உருவினான். பட்டென்று விளக்கு எரிந்தது. ஜெயா போட்டிருக்கிறாள்.

காசிக்குப் புன்னகை வந்தது.

'இந்தப் பெண்கள் எந்தெந்தவிதமாக எல்லாம் தங்கள் போராட்டத்தை உணர்த்துகிறார்கள்!

எப்படியெல்லாம் சண்டை புடிக்கறாங்க. எப்பிடில்லாம் நான் முக்கியம்னு காமிக்கறாங்க.'

படிக்கட்டு ஏறிக் கிணற்றில் கயிறு பக்கெட்டை விட்டான்.

'இது கேசவ நைனா கட்டிய கிணறு...''

ரயில்வே க்வார்ட்டர்ஸிலிருந்து அந்த நிலம் வாங்கிய கையோடு முதல் வேலையாகக் கிணறு வெட்ட ஆரம்பித்தார் கேசவன். இரண்டு கை ஆள்காட்டி விரல்களையும் காசிக்கு ஒன்றும் ஜெயாவுக்கு ஒன்றுமாகப் பிடிக்கக் கொடுத்துவிட்டு நேராக மேம்பாலம் ஏறி ஹாரட்டன் தெரு வழியாக நடந்து சாலையைக் கடந்து அவர்களைக் கூட்டி வருவார்.

அந்தக் காட்சி அவனுக்குப் பசுமையாக இப்போதும் நினைவிருக்கிறது.

வருகிற வழியில் ஹாரட்டன் தெருவில் தினமும் ஜெயாவுக்கு ஒரு பச்சைக் கலர் வாங்கிக் கொடுப்பார். கோலி குண்டு பாட்டிலில் குடித்து முடித்ததும், அந்தக் கோலி அதிர அவளுக்கு ஆட்டி ஆட்டிப் பார்க்க வேண்டும். காசிக்குக் கோலா கலர் தான் பிடிக்கும்.

ராட்டினம் தண்ணீர்ப் பரப்பை மோதிற்று. பின்பு களக்கென்று சிறு ஓசை யிட்டு நீரில் மூழ்கிக் கயிற்றை வாங்கிற்று. காசி இழுக்கவில்லை. என்னென்னவோ நினைவுகளில் மூழ்கினான்.

நிலாக்காலத்தில் மடிமேல் ஜெயாவும் வலது தொடைமேல் தலைவைத்துக் காசியும் படுத்திருக்க கேசவ நைனா சொன்ன கதைகள்...

சலங்சலங்கென்று மெட்டியோசை கேட்டது. கிணற்றில் பக்கெட்டோடு கயிற்றை இழுக்காமல் நிற்கிற தன்னைப் பற்றி என்ன நினைப்பாள் என்று காசி கயிற்றை இழுத்தான்.

துணி துவைக்கிற கல் மீது பொட்டென்று சத்தம் கேட்டது. சோப்புப் பெட்டி. மேலே ஆணியடித்து மாட்டியிருந்த கயிற்றுக் கொடியில் அவள் துண்டைக் கொண்டு வந்து போட்டாள்.

பெரிய வாளியைக் கொண்டு போய் பாய்லர் குழாய்க்குக் கீழே தொப்பென்று வைத்தாள்.

''இன்னிக்குப் பச்சைத் தண்ணி ஊத்திக்கப் போறேன்...''

''நேத்து மழை பெஞ்சிருக்கு. சுடுதண்ணி தான் ஊத்திக்கணும்.''

அவள் குழாயைத் திறந்துவிட்டு நின்றாள்.

கயிற்றில் கட்டிய பக்கெட்டை அவிழ்த்துக் கொண்டான் காசி. உன்னை வெந்நீரில் குளிக்க வைக்காமல் விடப் போவதில்லை என்கிற மாதிரி அவள் கொட்டுகின்ற குழாயருகில் நின்று கொண்டிருந்தாள். பக்கெட்டிலிருந்து ஆவி பறந்தது.

'கடைசியிலே ஹரிதானு எனக்கு இவ நெனப்பச் சொல்லணும்?'

காசிக்கு அவளை நிமிர்ந்து பார்க்கவே சங்கடமாக இருந்தது. தவளைப் பாய்ச்சல் மாதிரி தத்தித் தத்தி நூறு சந்தர்ப்பங்களுக்கு நினைவு தாவிற்று. எப்போது இவளுக்கு என்னைப் பற்றி அப்படி ஒரு துணைவன் போன்று, கணவன் போன்று நினைக்கத் தோன்றிற்று?

'என்னிக்கு நான் அப்பிடி நீதி கெட்டு நடந்துகிட்டேன்? அந்த ஆசையோட அவளைப் பாத்திருந்தா கூட கண்ணு அவிஞ்சு போயிருக்குமே?'

(தொடரும்)

''சுமார் ஒரு கிலோ புளியம்பழம் முப்பத்தி ஆறுயிரம் ரூபாய்!''

''எந்த நாட்டில்?''

''இங்குதான்! உங்க கார் புளிய மரத்து மேலே மோதிய வேகத்தில் கீழே கொட்டிய பழங்கள் இவை!''





ULIP

உங்கள் குடும்ப நலனைக் கருதி நான்கு நன்மைகள் பயக்கும் முதலீட்டுத் திட்டம்

யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் ப்ளான் (ULIP) பற்றித் தெரிந்து கொள்ள இதுவே சமயம்!

நீங்கள் முதலீடு செய்யும் தொகைக்கு வரிச் சலுகை கிடைக்கிறது. இலக்குத் தொகைக்குச் சமமாக உங்களுக்கு ஆயுள் இன்சூரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கிறது. மருத்துவ சோதனை தேவையில்லை.

மேலும் ரூ. 15,000 பெறுமான விபத்து இன்சூரன்ஸ் பாதுகாப்பும் உண்டு.

எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் முதலீடு அதிக வருவாயைத் தருகிறது.

ULIP அளிக்கும் நன்மைகளை நீங்களே பாருங்கள்.

சேமிப்புக் காலம்	ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகை	இலக்குத் தொகை	முடிவில் பெறும் தொகை
	ரூ.	ரூ.	ரூ.
10 வருடங்கள்	1200	12,000	19,000
15 வருடங்கள்	800	12,000	24,500

உங்கள் வயது 18 லிருந்து 45 வரை இருந்தால் நீங்கள் ULIP திட்டத்தில் சேரலாம். உங்கள் இலக்குத் தொகை குறைந்தபட்சம் ரூ. 3000 ஆகவும் அதிகபட்சம் ரூ. 12,000 ஆகவும் இருக்க வேண்டும். சேமிப்புக் காலம் 10 வருடமோ அல்லது 15 வருடமோ இருக்கலாம். நீங்கள் இத்திட்டத்தில் சேர்ந்த மூன்று வருடத்திற்கு பிறகு ரூ. 12,000 பெறுமானமுள்ள மற்றும் ஒரு ULIP திட்டத்தில் சேரலாம்.

இதர விபரங்களுக்கு எங்கள் ஏஜெண்டுகள், தலைமைப் பிரதிநிதிகள் மற்றும் பாங்க் ஆஃப் பரோடாவின் கிளைகளை அணுகுங்கள்.

யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா

(ஒரு பொதுத் துறை நிதி நிறுவனம்)
தலைமை அலுவலகம்: பம்பாய்.
பிராந்திய செயலகம்: ரெஜினா மான்ஷன்,
46 செகண்ட் லைன் பீச், சென்னை-600 001 போன்: 27433

தமிழ் நாட்டிலுள்ள எங்கள் முக்கிய பிரதிநிதிகள்:

● கோவை, பெரியார், நீலகிரி மாவட்டங்களுக்கு: திரு எ. தனபால், 30, நாயனார் ரோடு, கோவை-641 018. போன்: 34776 (அலு) ● மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு: திரு எம். இராமமூர்த்தி, 30, எல்.ஐ.சி. காலனி, மதுரை-625 002 போன்: 30160 (அலு) ● சேலம் மாவட்டத்திற்கு: திரு என் கே. இங்கர்சால், 155, கைலாசம்பிள்ளை தெரு, அன்னதானப்பட்டி, சேலம்-636 002 போன்: 64302 (வீடு) ● தஞ்சை மாவட்டத்திற்கு: திரு கு. முத்துசாமி, 52-ஏ, வ.உ.சி. நகர், தஞ்சை-613 007 போன்: 1224 (வீடு) ● நெல்லை, குமரி மாவட்டங்களுக்கு: திரு எம்.எம். காஜா, பாக்காளி பில்டிங் அனெக்ஸ், 41, திருவனந்தபுரம் நெடுஞ்சாலை, பாளையங்கோட்டை-627 002. போன்: 4520 (அலு), 5395 (வீடு)

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

Sista's UTI 152/83 TM

சில பல

மீ.ப.சோமு

''ஸ்ரீ. ஆர். நரசிம்மன் அவர்களின் பேச்சைக் கேட்டபிறகு, ராஜாஜியோடு உறவு பற்றி ஓர் இலக்கணச் சந்தேகத்தை உங்களிடமே கேட்கிறேன்!''

இவ்வாறு தமது கடிதத்தைத் தொடங்கியிருக்கிறார், உள்ளூர் நண்பர்! நரசிம்மன் அவர்கள் தாம்பரம் இறைபணி மன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார்:–

''எனது தந்தையார் ராஜாஜி சில நூல்களில் சோமு அவர்களைக் கூட்டு ஆசிரியராக அமைத்துக் கொண்டார். 'இந்த அளவுக்கு எனது தந்தையார் வேறு யாருடனும் இணங்கியது இல்லை! இது குறிப்பிடத்தக்கது...... என்று தந்தையார் எழுதிய நூல்களில் இலக்கணச் சந்தேகங்கள் வந்தால் திரு. சோமுவைக் கேட்பார். அவர் சொன்னால் சரி என்று எடுத்துக் கொண்டுவிடுவார். சோமு அவர்கள்தான் எனது இலக்கண நன்னூல் என்று கருதினார் என் தந்தை ராஜாஜி!''

'இலக்கணச் சந்தேகம்' என்று சொல்லி நண்பர் ஒரு வேடிக்கையான கேள்வியைக் கேட்டுள்ளார்:

''ராஜாஜி உங்களை அழைப்பது ஒருமை விளியா அல்லது பன்மை விளியா?''

வேடிக்கையான கேள்வி போலத்தோன்றினாலும், ராஜாஜியின் ஒரு நுட்பமான பழக்கத்தை இங்கே சொல்வதற்கு இது இடம் தருகிறது!

நாலு பேர் மத்தியில் 'நீங்கள்' என்று பன்மையிலே பேசுவார். தனியாக இருக்கும் போது ''நீ'' என்பார். கடிதங்களிலே நீங்கள், தாங்கள் என்றெல்லாம் எழுதுவார். எந்த அவசரத்திலும் எத்தகைய சந்தர்ப்பத்திலும் இந்த ஒருமை – பன்மை இலக்கணத்தை மாறாமல் அவர் கடைப்பிடித்து வந்தார். இப்படி ஒரு பண்பாடு!

இனி, அவருடைய 22.5.42 நாளிட்ட கடிதம். தீபன் மறைந்த புதிதில் அவருடைய கடிதம் பிரசுரமானதைப் படித்துவிட்டு ராஜாஜி எழுதிய கடிதம் இது:

''தாங்கள் டி. கே. சி. அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தங்கை கலியாணத்துக்கு நான் வந்ததைப் பற்றி மிகவும் பாராட்டி எழுதியிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன். நான் வந்திருந்தது டி. கே. சி. வந்ததாகவே நீங்கள் கருதியது தான் எனக்கு அதிக மகிழ்ச்சி தருகிறது.



இந்த மாதம் வசந்தனில் (டி. கே. சி. கௌரவ ஆசிரியராக இருந்த மாத வெளியீடு) செல்லையா (தீபன்) கடிதம் பிரசுரமாகியிருப்பதைப் படித்தேன். இது ஒரு முத்து. முத்து மற்றவர்களுக்காக உண்டாவதில்லை. தானே தோன்றி அழகு படிந்து வளரும் வஸ்து! பிறகு மற்றவர்கள் அதை அனுபவிக்கிறார்கள். ஆனால் முத்து உண்டான உயிர் மறைந்து போயிற்று! கடல் முத்தும் அவ்வாறே!

இந்தக் கடிதத்தைப் பார்த்து இனிமேல் மற்றவர்களும் இத்தகைய கடிதங்கள் எழுதப் பார்ப்பார்கள்! பின்னால் பிரசுரமாகுமோ என்று, பத்திரிகை படிப்போருக்காகக் கடிதங்களைக் கெடுத்துக் கொள்வார்கள் –எழுத வேண்டியதை எழுதாமல், எழுதக் கூடாததை எழுதி!''

* * *

''என்னை ஆட்கொண்ட இலக்கிய நூல்கள்'' என்னும் ஓர் ஆங்கிலத் தொடரில் ராஜாஜியைப் பேச அழைப்பது என்று சென்னை ரேடியோவில் முடிவு செய்தார்கள். அந்த நிகழ்ச்சிப் பிரிவின் அதிகாரி வழக்கம் போல இந்தச் செய்தியைச் சில வாரங்களுக்கு முன்பே ரேடியோ நிகழ்ச்சிப் பத்திரிகைகளுக்கு அச்சிட அனுப்பி விட்டார்: ஆனால் ராஜாஜியோடு தொடர்பு கொண்டு அவருடைய ஒப்புதலை வாங்க மறந்து விட்டார்! நாளைக்கு ஒலிபரப்பு என்றால், இன்று காலையில் விழித்துக் கொண்டார்!

'ஆகாசவாணி', 'வானொலி' முதலான எல்லா மொழிப் பத்திரிகைகளிலும் அறிவிப்பு வெளியாகி விட்டது! ராஜாஜிக்கு விவரம் தெரியாது. அவருடைய சம்மதமும் இல்லை!

''இன்று மாலைக்குள் ராஜாஜியை நிலையத்துக்கு அழைத்து வந்து ஒலிப்பதிவு செய்தாலன்றி, கடுமையான நடவடிக்கை எடுக்கப்



படும்!'' என்று அந்த நிகழ்ச்சி அதிகாரிக்கு மேலிடத்தில் சொல்லி விட்டார்கள்!

நான் அப்போது சென்னையிலேயே இருந்த போதிலுங்கூட, வேறு துறையில் தென் மண்டலத்தின் ஒட்டுமொத்தமான பொறுப்பில் இருந்ததால், சென்னை நிலையத்தின் அன்றாட நிகழ்ச்சிகளில் எனக்கு நேர் தொடர்பு கிடையாது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரி கண்கலங்கிய பிறகு தான் எனக்குச் செய்தியே தெரியவந்தது!

மிகவும் இக்கட்டான நிலை. ஏனென்றால் ராஜாஜி இதுபோன்ற தவறுகளை எளிதில் மன்னிக்க மாட்டார்!

ஆழ்ந்து யோசனை செய்தேன். பிறகு ஒரு முடிவுக்கு வந்தேன். அதை நண்பரிடம் சொன்னேன்.

''நீங்கள் ராஜாஜியைப் பார்க்க வேண்டாம். நானே போய் வருகிறேன். கவலைப்படாதீர்கள்!''

ராஜாஜியைப் பார்க்கச் சென்றேன்.

''நான் இந்தப்' பேச்சை நாளைக்கு ஒலிபரப்பாவிட்டால் என்ன ஆகும்?'' என்று ஒரே கேள்வி கேட்டார் ராஜாஜி.

''ஆவது என்ன? அந்த நண்பருக்கு வேலை போய்விடும்!'' என்றேன்.

''அதுதான் நியாயம்! இத்தனை பொறுப்பில்லாத அதிகாரி வேலையை இழப்பதுதான் முறையாகும்!'' என்றார் ராஜாஜி.

''அந்த அதிகாரி ஒரு இளைஞர், திறமைசாலி. கொஞ்சம் ஞாபக மறதி உள்ளவர்!'' என்று நிலைமையை இளக்கினேன்!

''இதற்குப் பெயர் ஞாபகமறதியா? அதுவும் கொஞ்சம் ஞாபக மறதியா?''

மேலும் பேசி ராஜாஜியைச் சமாதானப் படுத்தி, ஒப்புதல் பெற்றேன்!

பிற்பகல் மூன்று மணிக்கு வருவதாகச் சொன்னார். வெற்றி வாகை சூடிய களிப்போடு வெளியே வந்தேன். வராந்தாவுக்கு வந்திருக்கமாட்டேன். மறுபடி கூப்பிட்டார்.

''சோமு. அவர் யார்? என்ன பெயர்?''

''பெயர் ரா—. வழக்கறிஞர் — ஐயங்காரின் மாப்பிள்ளை!''

''ஓ! என்னைப் போல் ஸ்ரீவைஷ்ணவரா! ஸாரி, நான் வருவதற்கில்லை!!''

இவ்வாறு சொல்லி என்னை வழியனுப்பத் தயாரானார் ராஜாஜி.

அவ்வளவுதான். என் உடம்பிலே ஒரு மின்சாரம் பாய்ந்தது! நான் உணர்ச்சி வசமானேன். தந்தையிடம் வெகுண்டெழுகிற ஒரு மகனைப் போல நான் பேசினேன்.

''இல்லை! அது முடியாது! நான் அந்த நண்பருக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டேன். நீங்கள் கட்டாயம் வருகிறீர்கள்! ஆமாம், கட்டாயம்!''

என் குரல் படபடத்தது. முகம் சிவந்தது. கண்கள் கலங்கின.

நேயர்களே, நடந்ததைச் சொல்கிறேன். ராஜாஜி இருக்கையிலிருந்து அப்படியே எழுந்து விட்டார். சொன்னார்:

''அப்பனே, இந்த உலகத்தில் இரண்டு பேர்களுடைய கட்டளைகளுக்கு நான் பணிகிறேன்! ஒன்று பாப்பா (மகள் நாமகிரி அம்மாள்), மற்றொன்று மீப்ப! இல்லை இல்லை, ஒன்று மீப்ப, மற்றொன்றுபாப்பா!'' என்று சிரித்தார் ராஜாஜி!

பிற்பகல் மூன்று மணிக்குச் சென்னை வானொலி நிலையத்தில் ராஜாஜியின் ஒலிப்பதிவு செவ்வனே நடைபெற்றது. நிலையத்துக்கு வருமுன் எப்போது அந்தப் பேச்சை எழுதி முடித்தார், எப்போது நிமிஷக் கணக்குகளைச் சரிபார்த்தார், எதுவும் எனக்குத் தெரியாது! மறுநாள் ஒலிபரப்பு 'ஏ ஒன்'னாக இருந்தது!

அந்த நிகழ்ச்சி அதிகாரி என்ன ஆனார் என்று கேட்கிறீர்களோ? கேந்திரமான பதவியில் பெரிய இடத்தில் இருக்கிறார்! நான் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகி விட்டன. சென்னைக்கு மாமனார் வீடல்லவா, அடிக்கடி வந்து போகிறார் என்று கேள்வி!

செய்தி வெடிகள்

★ வலேசாவுக்கு வழங்கப்பட்ட சமாதானத்துக்கான நோபல் பரிசை, அவர் மனைவி பெற்றுக் கொண்டார்.
—ஆஸ்லோ செய்தி

● சமாதானப் பரிசுக்கு அவர் தகுதியானவர்தான் என்பதை நிரூபிக்கும் நிகழ்ச்சி!

★ டிஸம்பர் 4—ஆம் தேதி, தென், வட அமெரிக்காவில், ஆப்பிரிக்காவில், ஐரோப்பாவில் தெரிந்த சூரிய கிரகணம், இந்தியாவில் தெரியவில்லை. —ஒரு செய்தி

● அதனால் என்ன? இந்தியாவில் தர்மம், நியாயம், சத்யம், பண்பாடு இவைகளுக்குக் கிரகணம் பிடித்திருப்பது தெரிகிறதே!

★ வங்கியில் வாங்கிய கடனை, செடுவுக்குள் நரிக் குறவர்கள் திருப்பித் தந்து விடுகிறார்கள்.
—ஒரு செய்தி

● அவர்கள் நரிக்குறவர்கள் இல்லை, நெறிக் குறவர்கள்!

★ ஆடு திருடிய நபர் ஒருவர், போலீசுக்குப் பயந்து, கடலில் குதித்து விட்டார்!
—சென்னைச் செய்தி

● போகாமல் 'ஆடு திருடிய கள்ளனைப் போல' விழிக்க வேண்டியதுதானே? தற்கொலை எதற்கு?

''மகரம்.''





ரோதன் வடித்த சிற்பம்

பாரீஸ் கலைக் கோயில்கள்

7

அன்று பிற்பகல் மூன்று மணிக்கு எங்களுக்கு ஒரு அப்பாயிண்ட்மெண்ட் இருந்தது. எனக்காக ஃப்ரெஞ்ச் அரசாங்கம் பெண் எழுத்தாளர்களின் புத்தகங்களை மட்டுமே பிரசுரிக்கும் பதிப்பகத்தின் பதிப்பாளரைச் சந்திக்கப் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்திருந்தது. பதிப்பாளரும் அவருடைய உதவியாளரும் பெண்கள். இது ஒரு 'ஃபெமினிஸ்ட் க்ரூப்'பாக இருக்கும் என்று நான் நினைத்துக் கொண்டேன். ஐரோப்பாவில் மிகத் தீவிர முனைக்குச் சென்று விட்டிருக்கும் பெண்கள் சுதந்திர இயக்கத்தைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டும் படித்தும் இருந்த நான் இவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்களோ என்ற ஐயத்துடன் என்னையே நன்றாகத் தயார் செய்து கொண்டிருந்தேன். நமது பெண்கள் நிலை'யைப் பற்றிய நமது நேஷனல் கமிட்டியின் ரிப்போர்ட்டைக் கூட (அது ஒரு மகாபாரதம்!) நுணுக்கமாகப் படித்திருந்தேன். அவர்களது சுதந்திர இயக்கத்துக்கும் நமது பிரச்சினைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை அவர்களுக்குப் புரியும்படியாக எப்படிச் சொல்ல வேண்டும் என்று யோசித்தபடி ஆனுடன், Librairie des Femmes, (பெண்கள் புத்தகக் கடை) என்ற அவர்களது புத்தகக்கடைக்குள் நுழைந்தேன். புத்தகக்கடை பிரும்மாண்டமாக இருந்தது. சுழலும் ஷோ கேஸ்களில் மிகத் தரமான அச்சில் வெளியிடப்பட்ட புத்தகங்கள் கண்ணைக் கவர்ந்தன. புத்தகம் வாங்குவதற்கு நிறையப் பெண்கள் வந்திருந்தார்கள். வியாபாரத்தைக் கவனிப்பதும் பெண்கள். கம்ப்யூட்டரில் பில் போடுவதும் ஒரு பெண். அத்தனை பெண்கள் அங்கிருந்து கொஞ்சம் கூடப் பேச்சு சத்தம் கேட்கவில்லை. அவர்கள் எத்தனை மெல்லிய குரலில் பேசுகிறார்கள் என்பது மிக ஆச்சரியகரமானது.

பாரீஸ்ஸில் நான் இதை எல்லா இடங்களிலும் கவனித்தேன். ஆண்களும், பெண்களும் மிக மெல்லிய குரலில் பேசுகிறார்கள். அதனால்தான், அலுவலகங்களிலோ, கடைகளிலோ தேர் திருவிழாக் கூட்டம் போல் சங்கமிக்கும் பாரிஸ் ம்யூஸியம்களிலோ கொஞ்சம் கூட சத்தம் கேட்பதில்லை. இதே பாரீஸ்ஸில் இருக்கும் நமது இந்திய தூதரகத்தில் நுழைந்தவுடனேயே நம்மூரில் இருப்பது போல் பிரமையேற்படுகிறது. ரிஸப்ஷனிஸ்ட், உட்கார்ந்த இடத்திலிருந்து உரக்க அடுத்த அறையுடன் பேசுகிறார். பிரும்மாண்டமான அறையின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்குப் பேசுகிறார்கள். இந்தியும், மலையாளமும், கன்னடமும், தமிழும் — மணிப் பிரவாளமாய், ஏக இரைச்சலாய் —

ஒவ்வொரு முறை இந்தியத் தூதரகம் சென்று திரும்பும்போதும் (அங்கிருப்பவர் எல்லாரும் மிக சிநேகிதமாக இருந்தாலும்) இந்தச் சத்தத்தைக் கேட்டுவிட்டு 'நாம் எப்போது நாசூக்காக இருக்கக் கற்றுக் கொள்ளப் போகிறோம்' என்ற விசனத்துடன் வெளியில் வருவேன்...

''இதுதான் மாதாம் ஃப்ளாரென்ஸ் ப்ருதோம்.''

''பூஜூர் மதாம் வாஸந்தி!'' என்று ஆர்வத்துடன் என் கையைப் பற்றிய அந்த அழகிய பெண்மணியை நான் வியப்புடன் பார்த்தேன். ஒல்லியாகச் சின்ன வய

லூவ்ர மியூஸியம்



சாக மிக நளினமாக இருந்தார் ப்ருதோம். அத்தனை பெரிய பதிப்பகத்தை நடத்துபவர் என்று நம்புவது கஷ்டமாக இருந்தது. பாரீஸ்ஸின் மிகப் பிரபல பதிப்பகங்களில் அதுவும் ஒன்று என்று கேள்விப்பட்டிருந்தேன்.

''இத்தனை இளம் வயதில் எத்தனை பெரிய பதிப்பகம் நடத்துகிறீர்கள்!'' என்று நான் வியந்தேன்.

''இத்தனை இளம் வயதில் எத்தனை நாவல்கள் நீங்கள் எழுதியிருக்கிறீர்கள்? அதை விடவா?'' என்று சிரித்தார் ப்ருதோம்.

என்னுடைய biodata —வை ஃப்ரெஞ்ச் அரசாங்கம் இவரிடம் ஏற்கெனவே கொடுத்திருந்தது எனக்குப் பிறகு தெரிய வந்தது.

புத்தகக் கடையிலேயே இருந்த ஓர் அழகிய வரவேற்பறையில் அமர்ந்து நாங்கள் பேசினோம்.

ஆர்வமுள்ள பல பெண் எழுத்தாளர்களின் எழுத்துக்குப் புத்தக ரூபமெடுக்க வாய்ப்பே இல்லாமல் போவதைக் கண்டு அவர்களுக்கு உதவ வேண்டும் என்கிற எண்ணத்துடன் தன் பதிப்பகத்தை ஆரம்பித்ததாக ப்ருதோம் சொன்னார்.

வீனஸ் டி மிலோ





○ மோனலிஸா

ஆண் எழுத்தாளர்கள் மிக அதிகமாக இருப்பதால், மிகப் பிரபலமான பெண் எழுத்தாளர்களின் புத்தகங்கள் மட்டுமே வெளிப் பதிப்பகங்களில் வெளியாகின்றன. இது பொதுவாகப் பெண் எழுத்தாளர்களைப் பாதிக்கிறது. என்று வருத்தப்பட்டார் ப்ருதோம்.

பெண்களின் புத்தகங்களைப் பெண்கள் நிறைய வாங்குவதால் பதிப்பகம் நஷ்டமில்லாமல் இயங்குகிறது என்றார். கடையையும் உள் அலங்காரத்தையும் பார்க்கும்போது லாபமாகவே நடக்கிறது என்று தோன்றிற்று.

பெண்கள் சுதந்திர இயக்கத்தையும் இந்தியப் பெண்களின் பிரச்னைகளையும் நான் பொதுவாக அலசியபோது,

''உங்கள் கருத்துக்களை நான் முழுவதும் ஒப்புக் கொள்கிறேன்'' என்று ப்ருதோம் புன்னகைத்தார்.

''பெண்கள் சுதந்திரம் என்று அதிதீவிர நிருப்பத்துக்குப் போய் ஆண்களைத் துவேஷித்து, பெண்மையின் இயல்புகளை மறந்து நிற்கும் பெண் இயக்கத்தைச் சராசரி ஃப்ரெஞ்சுப் பெண் ஆதரிப்பதில்லை. எங்கள் சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்ளும் போதும் ஆண்களுடன் இணைந்து வாழ்வதையே நாங்கள் விரும்புகிறோம்...''

பேசும்போது முகத்தில் புன்னகை தவழ்ந்தே இருந்தது. குரல் மிக மிருதுவாக ஒலித்தது. சுயேச்சையாக இயங்கும் கர்வமில்லாத இந்த மிருதுவான பெண்கள் மிகக் கெட்டிக்காரர்கள் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

ஆண்களின் திறனுக்குத் தாங்கள் எந்த வகையிலும் இளைத்தவர்கள் இல்லை என்பது இவர்கள் வேலை செய்யும் விதத்தில் பளிச்சிடுகிறது. Smart and efficient என்கிற அடைமொழிகள் ஃப்ரெஞ்ச் பெண்களுக்குத்தான் பொருந்தும். நிதானமான நடையோ அரட்டைப் பேச்சோ எங்குமே இல்லை! இன்னொரு விஷயத்தையும் கவனித்தேன். நம் இந்திய அலுவலகங்களில் முக்கியமாக அரசாங்க அலுவலகங்களில் விசிட்டர்கள் வந்தால் ஆஃபீஸர்கள் சாதாரணமாகக் காப்பியோ டீயோ வரவழைப்பார்கள். ஃப்ரான்ஸில் நாங்கள் பல அலுவலகங்களுக்குச் செல்ல நேர்ந்தது. ஓர் அலுவலகத்திலும் அறையில் பானங்களை வரவழைத்துக் கொடுக்கும் வழக்கம் இல்லை!

நேரத்தை அவர்கள் வீணடிப்பதே இல்லை. (தவிரவும் இங்கு போல் அங்கு மணியடித்தால் வந்து நிற்கும் ப்யூன்கள் இல்லை!)

சில நாவல்கள் விற்பனையாகாது என்று தோன்றினால் அதையும் விற்க ப்ரூதோம் ஒரு ஜனரஞ்சகமான வழியை வைத்திருக்கிறார். அவற்றைப் பிரபல நடிகைகளைக் கொண்டு படிக்கச் செய்து டேப்பை விற்கிறார்கள். இந்த டேப்புகளை ஜனங்கள் விரும்பி வாங்குகிறார்கள் என்றார்.

என்னுடைய நாவல் ஒன்றை ஃப்ரெஞ்சில் வெளியிட மாடம் ப்ரூதோம் ஆர்வத்துடன் வாங்கிக் கொண்டார். கடையை விட்டுக் கிளம்பும்போது எனக்குச் சில நாவல்கள் பரிசளித்தார்.

''ஸேல்ஸ் கவுண்டருக்குப் போய் என்ட்ரி செய்து விட்டு வருகிறேன். இல்லாவிட்டால் நீங்கள் கிளம்பும்போது அலாரம் அடிக்கும்'' என்றார்.

நான் விழித்தேன். ஆள் விளக்கினார். காசு கொடுக்காமல் யாரும் புத்தகத்தை எடுத்துச் சென்று விடாமல் இருக்கப் புத்தகங்களில் மாக்நெட்டுகள் வைத்திருப்பார்களாம். அப்படி எடுத்துக் கொண்டு போகிறவர்கள் வாயிலைத் தாண்டும்போது மாக்நெட் அலாரம் மணியைத் தட்டிவிடுமாம்!

எங்களுக்குப் பிரத்யேகமான அலுவல்கள் இல்லாத நேரத்தையெல்லாம் பாரீஸைச் சுற்றிப் பார்ப்பதில் செலவழித்தோம். பாரீஸைச் சுற்றிப் பார்ப்பது என்பது சலிப்பே தராத ஓர் இனிய அனுபவம். பாரீஸ் நகரத்தார்களைவிட கலைப்பித்துள்ளவர்களை எங்குமே காண முடியாது என்று நினைக்கிறேன். மூலைக்கு மூலை ம்யூஸியம்கள். எல்லா ம்யூஸியம்களும் பிரும்மாண்டமானவை, பிரஸித்தமானவை. அவற்றைக் காணத் தினமும் சாரிசாரியாக ஜனங்கள். வியன்னாவில் ஜனங்களுக்கு சங்கீதத்தில் ஆர்வமும் பக்தியும் இருக்கிறமாதிரி பாரீஸ் மக்களுக்குச் சித்திரத்திலும் ஓவியத்திலும் இருப்பதைக் கவனித்தேன். மணிக்கணக்காக டா வின்ஸியின் சித்திரத்தின் முன்னால், ரஃபேல், ரென்வா (Renoir) வின் முன்னால் உட்கார்ந்திருக்கிறார்கள். பிக்காஸோவை வைத்த கண் வாங்காமல் அனுபவிக்கிறார்கள். கையில் சித்திரத்தின் சரித்திரம் சொல்லும் புத்தகங்கள். இல்லாவிட்டால் சிற்பங்களுக்கு முன்னால் பேப்பரையும் பென்ஸிலையும் வைத்துக் கொண்டு தன்னை மறந்து வரைந்து கொண்டிருக்கிறார்கள். மைக்கல் ஆன்ஜலோ, ரோதன் (Rodin) முன்னால் எப்பவும் ஒரு விசுவாசக் கும்பல்.

லூவ்ர மியூஸியமைத் தினமும் பார்த்தாலும் வாழ்நாளுக்குள் பார்த்து முடிக்க முடியாது என்று ஃப்ரெஞ்சுக்காரர்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்.

மிகப்பெரிய அரண்மனைக் கட்டிடத்தை மியூஸியமாக்க நினைத்த நெப்போலியன் காலத்துப் பெருமையாக இது இருக்க வேண்டும் என்று எனக்கு முதலில் தோன்றினாலும் உலகிலேயே மிகப் பெரிய மியூஸியம் இது என்று பின்னால் தெரிந்து கொண்டேன். நாற்பது ஏக்கரா நிலப்பரப்பில்



New Philips Ferro Cassette now available in India.


At last ! A cassette that won't damage your recording head

Philips, the inventors of the world's first cassette bring you a world-class cassette.

International quality tape

Tape that won't snap or tear or stretch; a smooth and even coating; superior tonal response; high signal-to-noise ratio. With a precision mechanism to prevent jamming and snapping of tape.

Ask for it at your Philips dealer today.



Also Philips Ferro Popular at a popular price.

PHILIPS

PHILIPS

PHILIPS—the trusted Indian household name for over fifty years.

OBM/9435

ளின் நதிக்கரையில் மிகப் பிரும்மாண்டமாக லூவ்ர மியூஸியம் அற்புதக் கட்டிட வேலைப்பாடுடன் நிற்கிறது. அதை ஒவ்வொரு தளமாக, வழி தப்பாமல் பார்க்க உதவியாகப் பிரத்யேக வரைபடங்கள் விற்கிறார்கள். உள்ளே நிறைய நடக்க வேண்டியிருப்பதால் இதற்குப் பிரத்யேகமாக, சௌகர்யமான கால் ஜோடுகளை அணிந்து வாருங்கள் என்கிறார்கள். ஒவ்வொரு முறை லூவ்ர மியூஸியம் போகும் போதும் ஆன் கையுடன் வேறு விதமான கால் ஜோடுகளை நினைவாகக் கொண்டு வந்து காரில் மாற்றிக் கொள்வார்.

லியனார்டோ டா வின்ஸியின் 'மோனலிஸா' ஓவியத்தைப் பார்க்க வேண்டும் என்று நான் வெகு ஆவலோடு சென்றேன். பெருத்த ஏமாற்றமேற்பட்டது.

ஓவியம் அதிகப் பெரிசில்லை. அதற்கு ஏதனால் அப்படிப்பட்ட சரித்திரப் புகழ் என்று எனக்குப் புரியவில்லை. பல பேர்களை இந்த ஓவியம் பித்தாக்கியிருக்கிறதாம். மோனலிஸாவின் பார்வையும் அமுக்கமான புன்னகையும் மெத்தென்ற கைகளும் வெறி கொள்ளச் செய்திருக்கிறதாம். ஓவியத்தைக் கிழிக்க முனையும் வெறியர்களிடமிருந்து (ஏமாற்றத்தால் வெறி பிடித்திருக்கும் என்று நான் நினைத்துக் கொண்டேன்!) காப்பாற்ற ஓவியம் இருக்கும் இடத்துக்கு முன் இரும்புத் தடுப்பு போட்டிருக்கிறார்கள்.

லட்சக்கணக்கான ஜனங்கள் வந்து போகும் மியூஸியத்தின் ஒவ்வொரு மூலையிலும் ஜனங்கள் வசதிக்காக இருக்கும் கழிவறைகளின் சுத்தத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. சென்ற வருஷம் டில்லியில் படு அமர்க்களமாய் சர்வதேச தரத்தில் ஏஷியாட் ஸ்டேடியம்களில் கட்டப்பட்ட கழிவறைகளை இப்பொழுது நெருங்கும் போதே வயிற்றைக் குமட்டுகிறது. நமது எல்லாப் பிரச்னைகளுக்கும் பலவீனங்களுக்கும் ஜனத்தொகை என்கிற காரணத்தை எத்தனை நாட்களுக்குச் சமாதானம் சொல்வது?

(தொடரும்)



ராஜாஜி

ராஜாஜி அவர்களுக்குக் கடைசிப் பதினாறு ஆண்டுகளில் வைத்தியராகவும் — உயிர் நண்பராகவும் விளங்கியவர் டாக்டர் வி. சத்யநாராயணா. சில சம்பவங்களை நினைவு கூர்கிறார்.

- "இன்னிக்கு என்ன கம்ப்ளெய்ண்ட் தெரியுமோ டாக்டர்? ஒருகோளாறும் இல்லே... அதுதான் கம்ப்ளெய்ண்ட்!" என்பார் ராஜாஜி.

- "ராஜாஜி! இன்று நாளிதழில் பார்த்தீர்களா ஒரு அதிசயம்! தியாகராய நகரில் ஒரு இடத்தில் பூமியிலிருந்து திடீரென்று பிள்ளையார் கிளம்பியிருக்கிறாராம்" என்று டாக்டர் சொன்னவுடன், சற்றும் தாமதிக்காமல், உடனே வந்த ராஜாஜியின் பதில்:

  "பிள்ளையார் கிளம்பலாம்... ஆனால் வேறு எங்கேயாவது கோவிலிலே காணாமல் போய் இருப்பார்."

- முன் அறிவிப்பு எதுவுமே இல்லாமல் டாக்டர் சத்யநாராயணா வீட்டுக்குச் சென்றார் ராஜாஜி. அப்போது டாக்டர் வீட்டில் இல்லை.

  சத்யநாராயணா வீடு திரும்பியதும், ராஜாஜி காத்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். "ராஜாஜி! சொல்லியனுப்பினால் நான் வந்திருக்க மாட்டேனா."

  சிரித்துக் கொண்டே ராஜாஜி சொன்னார்: "நீங்கள் குழந்தைகளுக்குத் தரும் மருந்தை எனக்கு எழுதித் தந்தீர்கள் அல்லவா? அதனால் சிறுவனாகிய நான் தானே உங்களைத் தேடி வர வேண்டும்!"


  விஷயமென்னவென்றால் அதிக சக்தி வாய்ந்த மருந்துகளை ராஜாஜியின் வயதான உடம்பு தாங்காது என்பதால் குழந்தைகளுக்குத் தரும் மருந்தை எழுதிக் கொடுத்திருந்தார் டாக்டர்!

- "நம்முடைய நாட்டுக்கு ஜனநாயக முறை தேவைதானா?" என்று ஒரு சமயம் ஏமாற்றம் தாங்காமல் ராஜாஜியிடம் கேட்டார் சத்யநாராயணா. ராஜாஜியின் பதில் இது: "இந்தியாவுக்கு நான் வேண்டுவது நல்லவர்கள் நடத்துகிற ஆட்சிதான். அந்த ஆட்சியும் நல்ல அரசாட்சியாக அமைய வேண்டும். அதில் தனி மனிதருக்குச் சுதந்திரம் இருப்பதும் அவசியம். நல்லவர்களை அங்கீகாரம் செய்ய ஜனநாயகத்தை விட நல்ல வழி வேறில்லையே...!"

- ராஜாஜி, டாக்டரின் இல்லத்துக்கு வரும்போதெல்லாம், அந்த அறையில் கிடக்கின்ற படம், காகிதம் எதையாவது எடுத்துத் தம்முடைய வருகையைப் பதிவு செய்கிற மாதிரி "ஆசீர்வாதம்" என்பது போல் ஏதாவது எழுதிக் கையெழுத்துப்போடுவாராம்.

பேட்டி: **யெஸ்பால்**

மனம் அள்ளும் நினைவுகளை
சிறை கொள்வீர்



பாரீர் என் பறக்கும் குதிரையை !



நினைவுகள் நிறைந்திடும் அழியாத
கோலமே வாழ்க்கையெனும் அற்புதம்.
பாசம், நேசம், உல்லாசம், பெருமிதம்
போன்ற நவரசம் ததும்பும் தருணங்கள்
எங்கும், எப்போதும் நேரலாம். அவ்
விநாடியே அவற்றைப் படமெடுத்து
பாதுகாப்பீர். ஏனெனில் புகைப்படங்கள்
என்றென்றும் வாழும் பசுமையான
நினைவுச் சோலைகள்.

INDU

இந்து ரோல் பிலிம்
மற்றும் ப்ரோமைடுகள்


பொங்கும் மகிழ்ச்சி என்றும் தங்கிட
தமிழ் நாடு பரிசுச்சீட்டு
பொங்கல் சிறப்புக் குலுக்கல்
ரூ. முதல் பரிசு
10 லட்சம்
குலுக்கல் இடம்: தஞ்சை.
3 சிறப்பு 2வது பரிசு ரூ. 1 லட்சம் வீதம்
மற்றும் பல்லாயிரக்கணக்கான பரிசுகள்
டிக்கட் விலை
ரூ 2/-
குலுக்கல் நாள் :
20.1.84
ஆணையர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத்திட்டம், அரசினர் தோட்டம், சென்னை-2.



லாயிட்

உலகக் கோப்பைப் பந்தயத்தில் மேற்கிந்திய அணி இழந்த பெருமையையும் கௌரவத்தையும் மீண்டும் நிலை நாட்டிவிட்டார் காப்டன் லாயிட். அந்தத் தோல்விக்கு லாயிட் தார்மீகப் பொறுப்பேற்று காப்டன் பதவியை ராஜினாமா செய்து கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவும் விருப்பம் தெரிவித்தார். ஆனால் அனுபவசாலியான அவரை மேற்கிந்திய கிரிக்கெட் 'போர்ட்' தொடர்ந்து அணியின் தலைமையை வகிக்குமாறு கேட்டுக் கொண்டது. இப்போது லாயிட்டும் சரி, மேற்கிந்திய கிரிக்கெட் போர்டும் சரி அந்தத் தீர்மானத்தை எண்ணி எண்ணி மகிழ்வர்.

கல்கத்தா டெஸ்ட்

ஈடன் கார்டன்ஸ் மைதானம் விழாக் கோலம் பூண்டிருந்தது. அங்கு கூடியிருந்த 80,000 பேரும் முதல் இரண்டு நாட்கள் ஆட்டத்தின் ஏற்ற இறக்கங்களில் தங்களை மறந்து ஈடுபட்டிருந்தனர். இரண்டாம் இன்னிங்ஸில் இந்திய அணி முறை கெட்டுச் சரிந்ததைக் கண்டு ஸ்தம்பித்தனர். மேற்கிந்திய அணியின் வெற்றிக்குக் கைகொடுத்தவர்கள் லாயிட், ராபர்ட்ஸ், மார்ஷல், மைக்கேல் ஹோல்டிங் போன்றோரின் சிறந்த பணியையும் குறிப்பிட வேண்டும். கவாஸ்கர் முதல் பந்திலேயே 'அவுட்' ஆக இந்திய இன்னிங்ஸ் பரபரப்புடன் ஆரம்பித்தது. மார்ஷல் பெற்ற இந்த விக்கெட்டைத் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக ஆறு விக்கெட்டுகள் அறுபத்தி மூன்றே ரன்களுக்கு விழுந்து விட்டன. இந்தச் சமயத்தில் ரோஜர் பின்னியும் கபில் தேவும் இணைந்து மானம் காத்தனர். இவர்கள் இருவரும் சேர்ந்து 82 ரன்கள் எடுத்தனர். நடுநிலை ஆட்டக்காரர்களுக்கும் கடை நிலை ஆட்டக்காரர்களுக்கும் இடையே வந்த கிர்மானி காப்டனுக்குத் துணை நின்றார். ரிச்சர்ட்ஸ் ஒரு 'காட்ச்'சைத் தவற விட்டதால் உயிர் பெற்ற கபில்தேவ் தன்னம்பிக்கையுடன் பந்தைத் தாக்கினார். இந்த மூன்று ஆட்டக்காரர்களினால்தான் இந்திய இன்னிங்ஸ் உயிர் பெற்றது.

ஞாயிற்றுக்கிழமையான இரண்டாம் நாளன்று பார்வையாளர்களுக்கு மற்றும் ஒரு பரபரப்பான விருந்து. இந்திய இன்னிங்ஸ் 241 ரன்களுக்கு முற்றுப்பெற்றதும், கபிலும், பின்னியும் மேற்கிந்திய அணியின் முதல் பாதியை எண்பத்தெட்டே ரன்களுக்கு 'அவுட்' ஆக்கினர். இந்தச் சமயம் லாயிட் மார்ஷலுடன் முன் வந்து அற்புதமான ஸ்ட்ரோக்குகளை ஆட, மேற்கிந்திய அணியினருக்கு மூச்சு வந்தது. மூன்றாம் நாள் மேற்கிந்திய இன்னிங்ஸ் சீக்கிரமே முடிந்துவிடும் என்று நினைத்து வந்த பார்வையாளர்களுக்குப் பெருத்த ஏமாற்றம். பதற்றமே இல்லாமல் கச்சிதமாய் லாயிட்டும் அவரைப் பார்த்துப் பக்குவம் அடைந்த ராபர்ட்ஸும் ஒன்பதாவது விக்கெட்டுக்கு 161 ரன்கள் எடுத்து ரிகார்ட் கண்டனர். ராபர்ட்ஸ் 68 ரன்களும் லாயிட் ஒரு டஜன் பௌண்டரிகள் கொண்ட 161 ரன்களும் எடுத்தனர். லாயிட்டுக்கு இது ஒரு மறக்க முடியாத இன்னிங்ஸ்.

மேற்கிந்திய அணி 136 அதிகப்படி ரன்கள் எடுத்து 377 ரன்களுக்கு ஆல்அவுட் ஆயிற்று. இரண்டே நாட்கள் எஞ்சியிருந்ததால் இந்திய அணிக்கு வெற்றியைப் பற்றி நினைக்க நேரம் இல்லை. ஆட்டத்தை 'டிரா' செய்வதை விட்டால் வேறு வழி இல்லை. ஆனால் அன்று நடந்த நிகழ்ச்சிகள் மிகப் பரந்த நோக்குடைய விமர்சகர்களைக் கூட அதிரச் செய்தது. கவாஸ்கர் ஒரு பொறுப்பற்ற ஸ்டிரோக்கினால் ஆட்டம் இழந்தார். மொஹிந்தரும் வெங்ஸர்க்காரும் பின் தொடர்ந்தனர். அன்று ஆட்ட இறுதியின் போது இந்தியா தோல்வியின் பிடியில் சிக்கியிருந்தது. மறுநாள் இந்தியாவை 'ஆல் அவுட்' ஆக்க மார்ஷல் இரண்டு மணி நேரங்களே எடுத்துக் கொண்டார்.

இரண்டாம் இன்னிங்ஸில் 37 ரன்களுக்கு ஆறு விக்கெட்டுகளும், இரண்டு இன்னிங்ஸிலுமாக 102 ரன்களுக்கு ஒன்பது விக்கெட்டுகளும் எடுத்து, 54 ரன்களும் அடித்த மார்ஷல் தலைசிறந்த ஆட்டக்காரருக்கான பரிசைப் பெற லாயிட்டுடன் போட்டியிட்டார். ஆனால் இணையற்ற சிறப்புடன் தன் அணிக்குத் தலைமை வகித்தவரும், தலைசிறந்த பாட்ஸ்மனாக விளங்கியவருமான லாயிட்டுக்கே அப்பரிசு வழங்கப்பட்டது நியாயமானதே. சாதனையாளரான காப்டன் லாயிட் கபில்தேவுக்கும் அவர் அணிக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாவார்.

பி. என். சுந்தரேசன்

ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் வடிவம்:

சீதா ரவி

தலைவர்களின் தலைவன்



○ பிரசன்னா



○ சையத் கிர்மானி



○ கேரி சோபர்ஸ்



○ ஆன்டி ராபர்ட்ஸ்



○ ஜியோஃப் பாய்காட்

வாரம் ஒரு புத்தகம்

IDOLS –

வெளியீடு: ரூபா அண்ட் கோ., விலை ரூ. 20. கிடைக்குமிடம்: ஹிக்கின்பாதம்ஸ். சென்னை–2.

இது கவாஸ்கரின் இரண்டாவது புத்தகம். தன்னைக் கவர்ந்த கிரிக்கெட் வீரர்களில் சிலரைப்பற்றி இதில் கூறுகிறார். புத்தகம் சுவையான விஷயங்களுடன், விறுவிறுப்பாய் இருக்கிறது. அதிலிருந்து:

ஆன்டி ராபர்ட்ஸ்:

ஆன்டி ராபர்ட்ஸ் என்றதும் உடனே நினைவுக்கு வருவது அவருடைய விதவிதமான பவுன்ஸர்கள்தான். ராபர்ட்ஸ் ஃபீல்டிங்கிலும் சூரர். ஆனால் மனிதர் ...

வணக்கத்துக்குரிய வீரர்கள்!

ரொம்ப சாது. அதிகம் பேச மாட்டார். எப்போதும் இசை கேட்டுக் கொண்டே இருப்பார். கேள்வி கேட்டால் வெறுமனே தலையை ஆட்டுவார். இல்லையெனில் ஓரிரு வார்த்தைகள் பேசுவார். இதனால் அவரைத் 'திமிர் பிடித்தவர்' என்று தப்பாய்ப் புரிந்து கொண்டவர்களுமுண்டு.

பிஷன்சிங் பேடி:

1967. ஆஸ்திரேலிய டூர் பேடியின் வாழ்க்கையில் மிக முக்கியமானது. ஆம்! அங்கே அப்போது சந்தித்த ஆஸ்திரேலிய பெண் இரண்டாண்டுகளில் திருமதி பேடி ஆகிவிட்டார். வெஸ்ட் இண்டீஸ் டூரில் நான் கடைசி மாட்சில் இரண்டு இன்னிங்ஸிலும் செஞ்சுரிகள் போட்ட போது பேடி மகிழ்ந்து போய் அப்போது பிறந்திருந்த தன் ஆண் குழந்தைக்கு 'கவாஸிந்தர் சிங்' என்று பெயரிட்டதை நான் ரொம்பவும் பெருமையாய்க் கருதுகிறேன். பேடியை டீமிலிருந்து நீக்கியபோது, அந்தச் செய்தியை மூன்றாவது ஆள் மூலம் சொல்வதைவிட, காப்டனான நானே சொல்லி விடுவது நல்லது எனக் கிரிக்கெட் போர்டு அபிப்பிராயம் தெரிவிக்க, நான் குழப்பமான மனநிலையுடன், அவரை அணுகிக் சொன்னேன். அவரோ மிக ஸ்போர்ட்டிவ்வாக எடுத்துக் கொண்டு, மாட்சில் இந்தியா வெற்றி பெற வாழ்த்தினார்.

கிளைவ் லாயிட்:

நகைச்சுவை உணர்வு ரொம்ப அதிகம். எப்போது பார்த்தாலும் ஏதாவது சொல்லிச் சிரிக்க வைப்பார். அவருடன் சாப்பிடப் போனால், உணவு உள்ளே போகாது. சிரித்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். அதுவும் ஜோக்கைச் சொல்லிவிட்டு, தன் உடம்பு குலுங்கக் குலுங்க அமர்க்களமாய்ச் சிரிப்பார். தப்பாய் ஆடினால், எதிர்க்கட்சி ஆட்டக்காரராயினும், அதை எப்படித் தவிர்ப்பது என்று விளக்குவார்.

பிரசன்னா:

பிரசன்னா கிரிக்கெட் விளையாடுவதை நிறுத்திவிட்டு இஞ்சினீரிங் படிப்பைத் தொடரப் போய் விட்டார். காரணம் அந்த நாளில் கிரிக்கெட், பணம் வாரித் தருகிற விளையாட்டு இல்லை. எனவே பிரசன்னாவின் அப்பா, முதலில் இஞ்சினீரிங், பிறகு கிரிக்கெட் என்று கண்டிப்பாய் உத்தரவு போட்டு விட்டார். நாலு வருடப் படிப்பை முடித்து விட்டு, திரும்ப டெஸ்ட் மாட்ச் ஆட வந்து, தனக்கென முக்கியமானதொரு இடத்தைப் பிடித்துக் கொண்டது ஒரு பெரிய சாதனைதான். பிரசன்னாவுக்கு உடற்பயிற்சிகள் செய்வதற்கெல்லாம் நேரம் கிடைக்காது. எனவே அடிக்கடி தசைப் பிடிப்பால் பாதிக்கப்படுவார். பிரசன்னாவும், பேடியும் ரொம்ப நெருங்கிய நண்பர்கள். பிரசன்னா, எப்போது விக்கெட் எடுத்தாலும், பேடியிடம் ஓடுவார். இரண்டு பேரும் பலமாய்ச் சிரித்தபடி, கட்டித் தழுவிக் கொள்வார்கள்.

ஜியோஃப் பாய்காட்:

மதிய உணவு, டீ இடைவேளைகளில் கூட நெட் பிராக்டீஸ் செய்கிற பழக்கம்

உடையவர் பாய்காட். 'ஆடும்போது நான் என்னென்ன தவறுகள் செய்கிறேன்?' என்று சக ஆட்டக்காரர்களிடம் கேட்டு, அதைத் திருத்திக் கொள்ளும் குணமுடையவர்.

இம்ரான்கான்:

பம்பாய்தான் இம்ரானுக்கு மிகவும் பிடித்தது. ஒருமுறை, அடிபட்டிருந்ததால் விளையாட வேண்டாம் என்று சொல்லியும் கேட்காது, பம்பாய் ரசிகர்களை ஏமாற்றக் கூடாது என்ற ஒரே காரணத்துக்காக, விளையாடி, உடல்நிலை பாதிப்புக்குள்ளானார். இம்ரானின் டெலிபோன் நெம்பர் அடிக்கடி மாற்றினால் தான் பிழைப்பார். இல்லையெனில் 24 மணி நேரமும் எந்த ரசிகையாவது அவருக்கு போன் பண்ணிக் கொண்டே இருப்பாள்.

அயன் சாப்பல்:

ஒருமுறை டெலிவிஷனில் வர்ணனையாளராக இருக்கும் போது, 'மைக்' ஆஃப் ஆகி இருப்பதாய் நினைத்து, ஏதோ சில தகாத வார்த்தைகளைப் பேசிவிட, மக்கள் அதைக் கேட்டு விட்டார்கள் என்று தெரிந்ததும் அதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஒரு மாட்ச்சில் இவர் பந்தை அடித்து விட்டுப் பந்து போன திசையில் நிதானமாய்த் திரும்பிப் பார்த்த போது ஃபீல்டர் கையில் பந்து இருப்பதைக் கண்டு, காட்ச் பிடித்து விட்டதாய் நினைத்து, பெவிலியனை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டார்!

வெங்கட்ராகவன்:

போலிங் தவிர காட்ச் பிடிப்பது – அதுவும் மிக உயரத்திலிருந்தும் – அதி வேகத்திலும் வருகிற பந்துகளைக் 'காட்ச்' பிடிப்பது வெங்கட்டின் ஸ்பெஷாலிட்டி. நியூஜிலாந்தின் பாரி சின்கிளேர் ஸ்கொயர்கட் செய்த பந்து 'பவுண்டரி' கோட்டுக்குப் போகப் போகிறதென நினைத்துக் கொண்டிருந்தபோது, வெங்கட்ராகவன் அதை காட்ச் பிடிக்க, ஸ்டேடியமே ஆரவாரத்தில் அதிர்ந்தது மறக்க முடியாத விஷயம். மைதானத்துக்கு வெளியில் வெங்கட்ராகவன் மிகவும் ஜாலியான டைப். கிரிக்கெட் டூரின் போது கிரிக்கெட்டை மறந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்க நான் நாடுவது வெங்கட்டைத்தான்.

ஜாகிர் அப்பாஸ்:

என் கிரிக்கெட் வாழ்க்கையிலேயே எனக்குக் கிடைத்த ஒரே ஒரு டெஸ்ட் விக்கெட் ஜாகிர் அப்பாஸினுடையதுதான்' 78 டூரில் பைசலாபாத்தில் முதல் இன்னிங்ஸில் 96 எடுத்து விட்டு, இரண்டாம் இன்னிங்ஸில் 176—ல் ஆடிக் கொண்டிருந்த போது, நான் வீசிய பந்தை அடிக்க முயல, சேதன் சௌகான் காட்ச் பிடித்து விட்டார். இந்த விக்கெட்டை வீழ்த்தியது மகிழ்ச்சியை விட மிகவும் வருத்தத்தையே எனக்கு அளித்தது. அவருக்கு ரெக்கார்டுகளை உருவாக்குவதே வேலை. இரட்டைச் சதம் போடுவது மிகச் சாதாரணம். ஜாகிர் நல்ல உடற்கட்டு உடையவர். அவருடன் கைகுலுக்கும்போதே பலத்தை உணரலாம்.

கேரி சோபர்ஸ

பேட்டிங், ஃபீல்டிங், போலிங் அனைத்திலும் சிறந்த சோபர்ஸ் ஒரு கிரிக்கெட் ஆட்டக்காரர் இல்லை, கிரிக்கெட் நிபுணர். ஆஸ்திரேலியப் பெண்மணியை மணந்து கொண்டவர். ஒரு முறை ஆடப் போகுமுன் சோபர்ஸ் 'உன்னைத் தொட்டு விட்டுப்போய் ஆடினால் அதிர்ஷ்டம்'' என்று சொல்லி என்னைத் தொட்டு விட்டுப் போய் செஞ்சுரி போட்டார். (என்னைத் தொடாமலேயே போயிருந்தாலும் செஞ்சுரி போடும் திறமை உள்ளவர் தான் அவர்.) இதற்காக அவர் எனக்கு ஒரு பரிசு கொடுத்தார். ஆனால் அதை விடச் சிறந்த பரிசு எனக்குக் கிரிக்கெட் பற்றி அவர் வழங்கிய அறிவுரைகள். எப்போது என்னைப் பார்த்தாலும், ''என்ன சின்னப் பையா! எப்படி இருக்கிறாய்?'' என்று கேட்பார். குறுகிய தெருக்களில் அவர் தம் ஜாகுவார் காரை வேகமாய் ஓட்ட, அதில் பயணம் செய்வது ரொம்பத் திரில்.

சையத் கிர்மானி:

கிர்மானிக்குப் பிற்பகலில் குட்டித் தூக்கம் போடுவதில் அலாதிப் பிரியம். வெஸ்ட் இண்டீஸில் ஒரு மாட்சின்போது, கிர்மானி வழக்கம் போல் குட்டித் தூக்கம் போட, மெஹ்ரா அவரை எழுப்ப, எதிர் அணி விக்கெட் கீப்பிங்கைப் பார்க்கச் சொல்லி விட்டுப் போனார். திரும்பி வந்து பார்த்தால் கிர்மானியைக் காணோம். விசாரித்தபோது ஸ்க்ரீனுக்குப் பக்கத்தில் இருந்து கவனிக்கப் போவதாய்ச் சொல்லிச் சென்றார் என்றனர். மெஹ்ராவுக்கு ஏக மகிழ்ச்சி. ஆனால் அவருக்குக் கிர்மானி வேறிடத்தில் தூங்கப் போய் விட்டது தெரியாது! கிர்மானி தவறாமல் இறை வணக்கம் செய்து விடுவார்.

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி

பிஷன்சிங் பேடி



கிளைவ் லாயிட்



இம்ரான்கான்



வெங்கட்ராகவன்



ஜாகிர் அப்பாஸ்





எம். ஜி. ராஜலக்ஷ்மி

1008 வாக்குறுதிகளுடன் ஆட்சியைப் பிடித்தவர்கள் பட்டதாரிகளைக் கேவலப்படுத்தும் முறை பற்றிய சிறுகதை 'சில நியாயங்கள் தனியானவை' அருமை!
சென்னை—44 சி. ஆறுமுகம்.

தேவைக்கு அதிகமாக ஆடம்பரமாகப் பாராட்டுவதும், புகழ்வதும் சம்பந்தப்பட்டவர்களை இருக்கும் இடம் தெரியாமல் மறைத்துவிடும் என்று சொல்வார்கள். 'டாக்டர் பட்டம் புகழ்மாலை' கார்ட்டூனில் முதல்வரை மாலை மறைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது அப்படி எண்ணாமல் இருக்க முடியவில்லை.
இரணியல். —கலைமணாளன்.

போட்டியில் பரிசு பெற்ற எரிச்சல்களைப் படித்ததும் என் எரிச்சல் போன இடம் தெரியவில்லை!
குடியாத்தம் ஆர். அரிகோபி.

அலைகள் ஓய்வதில்லை தலையங்கம் வெகு அருமை! தற்சமயத்தின் விலைவாசி ஏற்றத்தால் அதைச் சமாளிக்க முடியாமல் திக்குமுக்காடித் தத்தளிப்பவர்களின் மனப்புண்ணுக்கு ஆறுதலாய் அமைந்தது.
பரசலூர் ஆர். நாகராஜன்.

நகர்வலத்தில் கணேஷ், குமரேஷ் சகோதரர்களின் வயலின் வாசிப்பு விமரிசனத்தோடு நிறுத்திக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் ''சூயிங்கம்'' மென்றார்கள் என்று குறை கூறுவது நன்றாக இல்லை. சூயிங்கம் அவர்களுக்கு ஒரு தெம்பைக் கொடுத்திருக்கலாமல்லவா?
சென்னை—28. தி. சு. ஸ்ரீராம்.

கல்கி (4.12.83) இதழில் ''பூனாவில் பெண்கள் பூஜை முறைகளைக் கற்றுக் கொண்டு நல்ல முறையில் செய்து வைக்கிறார்கள்'' என்று எழுதியிருந்ததைப் படித்தேன். மிகவும் சந்தோஷமடைந்தேன். அதுபோலவே மயிலாடுதுறையில் எம். ஜி. ராஜலக்ஷ்மி மிகவும் நன்றாகப் பிள்ளையார் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை, மகர சங்கராந்தி பூஜை, வரலக்ஷ்மி பூஜை முதலிய பூஜைகளைச் செய்து வைக்கிறாள். வயது பதினொன்று. மாயூரம் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஏழாம் வகுப்பு பயில்கிறாள். எட்டாவது வயதிலிருந்தே பூஜைகள் செய்து வைத்து வருகிறாள்.
மயிலாடுதுறை. எம். ஜி. விஜயலக்ஷ்மி.

குழந்தைகள் மகிழ முதல்தரத்திட்டம்

திரு. யோகாவின் அட்டைப்படமும், பாலுவின் வண்ணப்படமும் இதழுக்கு மேலும் அழகூட்டுவதாய் அமைந்திருந்தது.
திருச்சி—14. எஸ். முரளி.


''ஏழ்மையில் இருக்கின்ற — வசதி அற்ற'' குழந்தைகளிடம் கோகுலம் தவழ அருமையான திட்டம். பல மடங்கு பெருகிப் பயன் அளிக்க வாழ்த்துக்கள்.
ஊரூர் வெளிக்கடை ராஜன்

''தேசிய ஒருமைப்பாடு'' பற்றிய கலந்துரையாடல் மூலம் பல நல்ல விஷயங்களைத் தெரிந்து கொண்டோம்.
மன்னார்குடி. டி. எஸ். பிரகாசம்.

'சென்னை வரும் கங்கை' கட்டுரை படித்தேன். மேன்மையான குறிக்கோளுடன் நாட்டு ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கும் இந்தப் புனித யாத்திரையை முஸ்லிம் அன்பர் ஒருவர் பாராட்டியிருப்பது நிறைவை அளிக்கிறது.
சென்னை-45 கணபதி சுப்பிரமணியம்

சீர்காழி, மாயவரம் போன்ற சின்ன ஊர்களில் உள்ள சின்னச் சின்னப் பூங்காக்களைப் பராமரிக்கும் லட்சணத்தைப் பார்க்கிற போது நாகர்கோயில் பூங்கா எவ்வளவோ மேல்.
சீர்காழி. ஆயில்யன்.


நாகர்கோவில் நகராட்சிப் பூங்காபற்றிய 'நகரத்துக்குள் ஒரு நரகம்' கட்டுரை வெளிவந்ததும்... நல்ல பலன் ஏற்பட்டுள்ளது! இப்போது அப்பூங்கா வழியாகச் சென்றபோது, ஆச்சரியமடைந்தேன். குப்பைகள் அகற்றப்பட்டு விட்டன! பூங்கா சுத்தமாகி விளக்குகள் எரிகின்றன!
குளச்சல் முகமது இப்ராஹிம்.



வட்ட மேஜை

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran



மால்கம் மார்ஷல்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka